Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

**முக்கிய அறிவித்தல்**

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

**ஆர். வி. ஜி. பீடி**

**'உற்பத்தியாளர்'**

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

**ஈழநாடு**

வாரமலர்

மலர் 12 | மார்கழி 12 | ஷவ்வால் 27 | (27—12—70) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 318

# கூட்டுறவு இயக்கம்தான் சோஷலிசத்தின் அத்திபாரம்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் இலங்கரத்தின

யாழ்ப்பாணம், ஞாயிறு இந்நாட்டின் பொருளாதாரத்தைப்பற்றி கவனம் செலுத்துவது இன்றியமையாதது. 150 கோடி ரூபா வரை பிறநாட்டுக் கடன் இருக்கிறது அக்கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியதாகும். வருமானத்தை விடச் செலவு அதிகமாக இருக்கிறது. இது பொருளாதாரத் துறைக்கு ஊறு செல்கிறது. இந்நாட்டில் ஏற்றுமதியைவிட இறக்குமதி கூடியதாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த கூட்டுறவு மகாநாட்டில் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. இராசரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில் தமிழரசு எம். பி. க்களான திரு. வி. தர்மலிங்கம். திரு. கே. துரைரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின மேலும் கூறியதாவது: அந்தக் காலத்தில் கண்டி, காலி, திருமலை, யாழ்ப்பாணம், ஒரேமாதிரியாக நோக்கப்பட்டு வந்தது. சேர். பொன். இராமநாதன், சேர் அருணாசலம், போன்றோர் தேசியத் தலைவர்களாக வீற்றிருந்தனர். 1947-ல் தோழர் கந்தசாமி, தொழிலாளருக்குத் தலைமை ஏற்றகாலகட்டமது இந்தஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் இடையிலே கெடுத்து விட்டார்கள். மறுபடியும் அந்த ஐக்கியம் உருவாக்கப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் இன்று புதிய உணர்வு, உற்சாகம் ஏற்பட்டு வருகிறது. நாம் இணைந்து வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

(16-ம் பக்கம் பார்க்க)

## "பல்கலைக்கழகம் நிறுவ தமிழர் ஆதரவு தேவை"

### பலாலியில் திரு. குமாரசூரியர்

மாவிட்டபுரம், ஞாயிறு 'தமிழர் கல்வியில் மேம்பட்டவர்களாக இருந்தபோதிலும் அவர்களுடைய மாகாணங்களில் பல்கலைக்கழகம் இல்லாதது பெருங்குறையாக இருந்து வந்தது. அதை தீர்க்க மக்கள் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பலாலி விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா அமைச்சருக்கு மாலை போட்டு வரவேற்றார்.

திரு. குமாரசூரியர் மேலும் பேசுகையில் பல்கலைக்கழம் பிரச்னையை, தமிழர் சிங்களவர் என்ற இனப்பிரச்னையாக மக்கள் அரசு கருதவில்லையென்றும் இதை ஒரு தேசிய பிரச்னையாகக் கருதுகிறதென்றும் கூறினார்.

இதை நிறைவேற்ற தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என்றும் திரு. குமாரசூரியர் குறிப்பிட்டார்.

## "உள்ளேயிருந்துகொண்டே உரிமைகளைப் பெறவேண்டும்"

### — தபால் மந்திரி

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழருக்கும் இந்த நாடு சொந்தமாகும். நாம் பயமின்றி வெளியில் நின்று பிச்சை கேட்பதுபோல் நமது உரிமைகளைக் கேட்காமல், உள்ளேயிருந்து ஒத்துழைத்தே உரிமைகளைப் பெறவேண்டும். நாமும் ஒத்துழைத்து ஆளுகின்ற உரிமை நமக்கும் உண்டென்பதை வெளிப்படுத்தி; நாமும் இந்நாட்டு மன்னர்கள் என்று வாழ்ந்தால்தான், வருங்காலத்தில் மக்கள் சிறப்பான நிலையை அடைவார்கள்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டுறவு மகாநாட்டில், தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

மந்திரி குமாரசூரியர் மேலும் கூறியதாவது: மக்கள் அளித்த பலத்தை மீண்டும் மக்கள் கையில் ஒப்படைத்து, அரசாங்கம் மக்களால் இயங்கவேண்டும் என்பதுதான் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சோஷலிஸப் பாதையாகும்.

மக்கள் குழுக்கள் தொழிற்சங்கங்கள் கூட்டுறவு இயக்கங்கள் மூன்று பிரதான சாதனங்களாகும். மக்கள் குழுக்கள் என்று சொல்லும்போது தங்களுக்கு எவை தேவைப்படுகிறதோ நியாயமான அளவு தேவைப்படுகின்றதோ அவற்றைப் பெறுவதைக் குறிக்கும். எத்தனை அரசியல் மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும் எல்லாரும் சகோதரர்போல்வாழும் இடம்தான் தொழிற்சங்கம். கூட்டுறவுஇயக்கம் சிலவேளைகளில் அரசியல் வாதிகளின் கைப்பொம்மையாக மாறி இருக்கிறது. அரசியல்வாதிகளிடமிருந்து மீட்டு, மக்கள் இயக்கமாக தங்களைத் தாங்களே வழி நடத்தும் இயக்கமாக, கிராமத்துக்கும் நாட்டிற்கும் சேவையாற்றும் இயக்கமாக இருக்கச்செய்ய வேண்டும். இதற்கு மக்கள் குழுவும், தொழிற்சங்கமும் அத்தியாவசியமான அடிப்படைசாதனங்களாகஇருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கம் பலமேம்பட்ட சாதனைகளைச் செய்துவருகிறது இந்தச்சாதனைகளை நாடெங்கும் பரப்பவேண்டும்.

தமிழர்கள் எப்போதும் கல்விக்கு பெரும் இடம் கொடுத்து வந்துள்ளார்கள். அது உண்மையானாலும். கல்விமேம்படுவதற்குயாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை அமைக்கவேண்டும். எப்படி அமையவேண்டும் என ஆராய்ந்து அரசாங்கத்திற்கு கூறவேண்டியது என்கடமை [illegible]

**மரண அறிவித்தல்**

S. K. கந்தையா

அத்தியார் இந்துக் கல்லூரி முன்னைநாள் ஆசிரியர் S. K. கந்தையா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியை வேதவல்லி அவர்களின் அன்புக்கணவரும் சுகுணு, சுகுமார் ஆகியோரின் தந்தையாரும் ந. தனபாலசிங்கம் (தபால்பகுதி அனுராதபுரம்) அவர்களின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நீர்வேலியில் 27-12-70 2 மணியளவில் நடைபெறும். 2706

## "கடத்தலைத் தடுக்க மக்கள் முன்வரவேண்டும்"

### சங்கானையில் மந்திரி இலங்கரத்தின

சங்கானை, சனி

இந்தியாவிலிருந்து இங்கு சேலைகள், துணிகள் பெருமளவில் வந்துசேருகின்றன என்பது நாடறிந்த விஷயம். இதேபோல் இந்நாட்டுக்குத் தேவையான இறக்குமதிப் பொருள்கள் இந்தியாவுக்குக் கடத்தப் படுகின்றன வென்பதும் தெரிந்த விஷயம். இது நமது நாட்டுக்கு எந்தவகையிலும் நல்லதல்ல, தேசத்துக்கு விரோதமான, நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய இச்செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும்.''

இவ்வாறு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின நேற்று மாலை சங்கானையில் வலி மேற்கு வலநோக்குக்கூட்டுறவுச்சங்க மின்தறி ஆலையின் செப்பனிடும் பகுதிக்கட்டடத்தைத் திறந்துவைத்த பின் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

சில வருடங்களுக்கு முன்னிருந்ததற்கும் இப்போதுள்ள நிலைக்கும் பெரும் வேறுபாடு இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் இலங்கரத்தின நாட்டின் மறுசீரமைப்பில், எல்லோருக்கும் சமத்துவம் கிடைக்கக் கூடிய சோஷலிஸப் பாதையை வகுக்கும்முயற்சியிலீடுபட்டிருக்கும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு இப்பகுதி மக்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவு இயக்கத்தில்பல வருடங்கள் தொடர்பு கொண்டிருந்து சமீபத்தில் மறைந்த திரு ஏ ரி வேதாபரணத்தின உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்த தபால் தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியர் இனமத வேறுபாடுகளை மறந்து தேசிய ஐக்கியத்தைப் பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நன்றிதெரிவித்துப் பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு ஆ தியாகராசா, கடந்த கால சம்பவங்களை மறந்து, நாட்டுக்கு நல்லது செய்வதற்கு முன்வந்துள்ள ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குத் தமிழ்மக்கள் உதவியும் ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கடந்த ஆறுமாத காலத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனிக்கையில் தமிழ்மக்களுக்குஎதிராக இந்த அரசாங்கம் எதுவும் செய்யுமென்று கருத இடமில்லையென்று திரு தியாகராசா கூறினார்.

திரட்டி கல்விமந்திரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் அனுபவம் வாய்ந்த உங்களின் கருத்துக்களையும் சமர்ப்பித்தால் எனது முயற்சிக்கு உதவும் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கு

# அமைச்சர்கள் வருகையும் அவர்களின் வாக்குறுதிகளும்

எஸ். எம். ஜி.

அமைச்சரையோ உதவி அமைச்சரையோ வடக்கில் காணமுடியாதிருந்த காலம் மாறி நாளும் கிழமையும் அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் வருகை தந்துகொண்டிருக்கும்காலம் இது. திடீரென்று அவர்கள் வந்துதிரும்புகிறார்கள். உத்தியோக ரீதியாகவும் வருகிறார்கள், உத்தியோகப் பற்றற்ற தனிப்பட்ட முறையிலும் வந்துபோகிறார்கள்.

நாட்டின் சகல பகுதிகளுக்கும் அமைச்சர்கள் உதவி அமைச்சர்கள் செல்ல வேண்டும். மக்களின் குறைகளையும் அவர்களின் நஷ்டங்களையும் நேரில் கண்டுகேட்டு அறிந்துகொள்ளவேண்டும் அப்போதுதான் அவர்கள் உண்மை நிலையை அறிந்து மக்களுக்குச் சரியான முறையில் சேவைசெய்யமுடியும் என்பது எனது கருத்து. தொகுதிப் பிரதிநிதிகள் தங்கள் தொகுதி மக்களின் கஷ்டங்களை எடுத்துக்கூற நிவாரணம் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்களென்பது உண்மைதான். ஆனாலும் முடிந்த தேர்தலும் அடுத்துவரும் தேர்தலும் அவர்கள் செயலில் விருப்புவெறுப்பு இடம் பெறுவதற்கு காரணமாக இருக்கும் என்று கருத இடமுண்டு எனவேதான் அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள், நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று மக்களின் குறைநிறைகளைத் தெரிந்துகொள்வதன்மூலம் நாட்டின் உண்மையான நிலைமையையும் தெரிந்துகொள்ளவேண்டும்

இந்த வகையில் வடபகுதிக்கு இப்போது அமைச்சர்களும் உதவியமைச்சர்களும் அடிக்கடி வருவது வரவேற்கக்கூடியது. அமைச்சர்கள் எல்லோரும் வடபகுதிக்கு வந்து போகவேண்டும். அடிக்கடி வந்து போகவேண்டும். அவர்கள் வரும்போது தங்கள் அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகளை அதாவது நிர்வாகப்பொறுப்புடையவர்களையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும். அப்போதுதான் மக்கள் தெரிவிக்கும் குறைகளை உடனுக்குடன் ஆராய்ந்து அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை உடனுக்குடன் மேற்கொள்ளலாம். அதிகாரிகளுடன் அமைச்சர்கள் வராமல் தனியாக வருவதனால்தான் வரவேற்பு வைபவங்களில் வாக்குறுதியளித்துவிட்டுக் கொழும்பு சென்றதும் அவற்றைப் பலவேலைகளுக்கிடையிலும் மறந்துவிட நேரிடுகிறது. இதனால் அமைச்சர்களின் வாக்குறுதிகளில் மக்களுக்கு நம்பிக்கையில்லாமல் போய்விடுகிறது.

சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்தபோது யாழ்ப்பாணத்தில் மொழி சம்மந்தமாகக் கொடுத்த வாக்குறுதிதான் இலங்கையின் அரசியலை மட்டுமல்ல நாட்டுமக்களின் வாழ்க்கையையே திசை திருப்பக்காரணமாக இருந்தது. சேர் ஜோன் முதல் இன்றுவரை அமைச்சர்கள், உதவிஅமைச்சர்கள்வடக்கே வரும்போதெல்லாம் கொடுத்துவரும் வாக்குறுதிகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படாத - நிறைவேறாத வாக்குறுதிகளாகத்தானிருந்து வருகின்றன.

இதென்ன சாபத்தீடோ தெரியவில்லை!

கூட்டணி ஆட்சிக்கு வந்த பின்னரும் இதே நிலை நீடிக்கத்தான் செய்கிறது. கூட்டணியில் அமைச்சர்களாகப்பதவியேற்றபின் வடபகுதிக்கு முதல்தடவையாக விஜயம் செய்த வீடமைப்புக்கட்டட நிர்மாண அமைச்சருக்கும் தபால்தந்தி அமைச்சருக்கும் உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. அந்த வரவேற்பில் பேசியபோது காங்கேசன்துறைத் துறைமுகம் மிக விரைவில் அபிவிருத்திசெய்யப்படுமென்றும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அமைப்புவேலைகளும் மிக விரைவில் செய்து முடிக்கப்படுமென்றும் வீடமைப்புக் கட்டட நிர்மாண அமைச்சர் உறுதியளித்துச் சென்றார். அவர் இங்கிருந்து சென்றதும் காங்கேசன்துறைத் துறைமுகத்திலும் அச்சுவேலிக் கைத்தொழில் பேட்டையிலும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேலைகள் நிறுத்தப்பட்டன. இன்றுவரை அங்கு மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. சில தினங்களுக்குமுன் இங்கு வந்த கப்பற்றுறை உல்லாசப் பிரயாணத்துறை உதவி அமைச்சரும் காங்கேசன் துறைமுக அபிவிருத்தி வேலைகளை மீண்டும் விரைவில் தொடங்குவதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள் இங்கு வரும்போது மக்களின் உண்மையான வாழ்க்கை நிலையை அறிந்துகொள்ள முடியாமல் இங்கு வரவேற்பு அளிப்பவர்கள் இடையூறு செய்துவிடுகிறார்களென்று சொன்னால் அதைத் தவறு என்று யாரும் சொல்லமாட்டார்களென்றே நினைக்கிறேன்.

இதே சமயம் இங்கு வரும் அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் தங்களுக்கு வரவேற்பு அளிப்பவர்களையும் அந்தந்தத் தொகுதிப் பிரதிநிதிகள் அல்லது கட்சிப் பிரமுகர்கள் ஆதரவாளர்கள் ஆகியோரைத்திருப்திப்படுத்தவும் நன்றிக்கடமை செய்வதற்கும் ஏதாவது வாக்குறுதி அளித்துத்தான் செல்லவேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுத்தமுடியாதவைகளைவாக்குறுதியாக அளிப்பதில்லையென்று முதலிலேயே தீர்மானித்துக் கொள்வது அவர்களினதும் அரசாங்கத்தினதும் நற்பெயரைக் காப்பாற்றுவதற்கு உதவும்.

வடக்கில் பல்கலைக்கழகம்

## "குமாரசூரியரின் முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

சாத்தியமான பல்கலைக்கழகத்தை நிறுவி முன்னேறுவோம். சென்ற காலத்தில் எமது தமிழ்த் தலைவர்கள் சாத்தியமான சமரசப் பாதையை பின்பற்றத் தவறியதால் இன்று தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக இருக்கிறார்கள். தொடர்ந்தும் இப்பிழையை விடாது அமைச்சர் குமாரசூரியர் எடுத்த முயற்சிகளுக்குஎமது பூரணஒத்துழைப்பைக் கொடுத்துவடக்கிற்கு ஒருபூரண பல்கலைக் கழகத்தைநாம் பெறவேண்டும்.

உருமபராய் இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபரும், அகில இலங்கை ஆசிரியர் சங்கசம்மேளன தலைவர்களில்ஒருவருமான திரு அ. வைத்திலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வைத்திலிங்கம்வடக்கில் பல்கலைக்கழகம்பற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது:

கூடுதலான மாணவர்கள் விசேஷமாக ஏழைக் கமக்காரர்கள். தொழிலாளர்களின் பிள்ளைகளின் தேவையை முன்னிட்டு இடவசதி, நன்னீர் வசதியுள்ள பரமேஸ்வராக் கல்லூரியில் ஒரு பொதுப் பல்கலைக்கழகத்தை நிறுவுவது சாலவும் சிறந்தது. அவ்விதம் செய்வது பெரியார் இராமநாதனைக் கௌரவிப்பதாகும்.

ஒருசில பள்ளிக்கூடங்கள் முன்னேறியிருப்பதால் யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை முன்னேற்றம் அடைந்துள்ளது எனக் கூறுவது தவறு. யாழ்ப்பாணத்திலே அனேகமான பிள்ளைகள், குறிப்பாக வசதிகள் குறைந்த குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகள் கல்வியில் முன்னேறவில்லையென்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளல்வேண்டும்

திறமைசாலிகள் எமக்குத் தேவைதான் ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னேற்றத்தை விரும்பும் சோஷலிஷத்தில் நம்பிக்கையுள்ள முதலாளித்துவம் அறவே ஒழிக்கப் போராடும் - நாட்டின் கலாசாரத்தை வளர்க்க விரும்பும் திறமைசாலிகளே எமக்கு வேண்டும்.

வடக்கில் நிறுவப்படும் பல்கலைக்கழகம் மேற்குறிப்பிட்ட அறிவாளிகளையும் திறமைசாலிகளையும் உருவாக்க உதவிபுரியும்.

இனப்பிரிவினையை வளர்த்துவந்த சில தலைவர்கள் மதரீதியான பிரிவினைகளை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். பரமேஸ்வராக்கல்லூரியில் அமையவிருக்கும் பல்கலைக்கழகம் மத, இன. சாதி வேறுபாடில்லாத பல்கலைக்கழகமாவிருக்கவேண்டுமென்பதைப்பற்றி எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. மேலும் யாழ்ப்பாணக்கல்லூரியிலும் யார்க்கப் பரமேஸ்வராக்கல்லூரி பல வழிகளிலும் (இடம், நீர், போக்குவரத்து, சூழல், நகரத்துக்கருகாமை) சாலவும் சிறந்தது. இதை எவராலும் மறுக்க முடியாது.

மேலும் எமது தேசிய மொழிகளிலும் போதனைக்கு ஒழுங்கு செய்தல் ஒரு மிகவும் சிறந்தயோசனையாகும். இது நாமிதுவரையில் பின்பற்றிவந்த தனிப்பாதையை நிராகரித்த இன ஒற்றுமையையும் கலாசாரப் பரிமாறலையும் ஊக்குவிக்கும்.

ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின்வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாக வடக்கு கிழக்கு தெற்கு ஆகிய இடங்களில் மூன்று பல்கலைக்கழகங்கள் அமையவிருக்கின்றன. இவைகள் நாட்டின் ஐக்கியத்தை மேலும் வளர்க்க உதவும் இதுவரையும் தனிமையையும் பிரிவினையையும் பரப்பிவந்த தலைவர்கள் இவ்வளர்ச்சியைக்கண்டு பயமுறுவது இயல்பே. இதனைக் குழப்புவதற்காகப் பல் தந்திரோபாயங்களைக் கையாள்வார்களென்பதும் எதிர்பார்க்கவேண்டிய விஷயமாகும். ஆகவே இச்சீர்குலைவு முயற்சிக்கு இடங்கொடுக்காது தமிழ் மக்கள் விழிப்பாயிருக்கவேண்டும்.

சென்ற தேர்தலிலும் அதற்கு முன்னரும் வடக்கிலா, கிழக்கிலா பல்கலைக்கழகம் அமைவது சிறந்தது என எமது அரசியற்கட்சித் தலைவர்கள் தர்க்கப் பிரசங்கம் செய்தனர். ஆனால் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்களை உருவாக்க முன்வரும்பொழுது அதனைச் சீர்குலைக்க தமிழ்த் தலைவர்கள் மதத்தைக் காரணமாகக் காட்டுகிறார்கள். இதனைவிட்டு அமையவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு தமிழ்மக்கள் அனைவரும் உற்சாகமும் இருதய பூர்வமான ஒத்துழைப்பும் கொடுக்கவேண்டும்என்பதே என்னைப் போன்றவர்களின் தாழ்மையான கோரிக்கையாகும்.

### தேநீர் உபசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்னவுக்கு அ. இ. சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் இன்று பிற்பகல் பாம்கோட்டில் தேநீர் விருந்துபசாரமளிக்க இருக்கின்றனர்.

இன்று அன்னை சாரதாதேவியின் ஜெயந்தி

## தூய அன்னை சாரதா

[அன்புக்கடல் திருப்பூங்குடி வி.க. ஆறுமுகம்]

அன்பு நெறி உரைக்கவந்த
அருமை அன்னை சாரதா
அகிலம் வாழ வழிவகுத்த
அறிவு அன்னை சாரதா

இன்பவாழ்வு எமக்களித்த
இனிய அன்னை சாரதா
இகபரத்தில் எளிமையான
இதய அன்னை சாரதா

மன்னரும் மதிக்கும் நல்ல
மாது அன்னை சாரதா
மாதருக்குள் மரகதமாம்
மணியே அன்னை சாரதா

நன்னெறிக்கு நமைவிடுத்த
நாரி அன்னை சாரதா
நானிலத்தில் நாயகியாம்
நல்ல அன்னை சாரதா

வான்கலந்த பரமஹம்சர்
வணங்கும் அன்னை சாரதா
வையகத்தை வாழவைத்த
வனிதை அன்னை சாரதா

தேன்சொரியும் திருக்கதை சொல்
திவ்ய அன்னை சாரதா
திகழும் தெய்வ நெறியளித்த
தூய அன்னை சாரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை மணந்த தவமுனி மணிவாசகர்

மாணிக்கவாசகர் நேபாள தேசத்து அமாத்திய அந்தணர் மரபில் தோன்றியவர். நற்றமிழையும் நன்னெறியாம் சிவநெறியையும் வாழ்வித்த நால்வருள் நாவுக்கரசர் தவிர்த்து மற்றைய மூவரும் அந்தணர் மரபில் தோன்றியவர்கள். எனினும் அவர்கள் பார்ப்பனீயத்தை பாடவில்லை. மாறாகப் பைந்தமிழின் பெருமையையும் எம்மைப் படைத்த இறைவனின் இன்னருளின் இயல்பையுமே பாடினர்.

### செயற்தூய்மையே பெரிது

தமிழர் மரபில் தோன்றி தமிழர் சூழ்நிலையில்வாழ்ந்து கொண்டும் தமிழர் வாழ்வை உருக்குலைப்பவர்களும் தமிழர் வாழ்வுக்கு உலை வைப்பவர்களும் தமிழர்களாக தமிழ்த் தலைவர்களாக வாழ்கின்ற சூழ்நிலையில் பிற இன மரபில் தோன்றிய மணிவாசகர் தமிழோடு தமிழர் வாழ்வோடு ஒன்றி ஒப்பற்றஇறவாப்புகழ் வாய்ந்த பக்தி இலக்கியங்களான திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எமக்குத் தந்தருளியதை எண்ணும்போது உள்ளம் உருகுகின்றது. உலகிலேஎப்படி வாழ வேண்டும் என்பதற்கு மணிவாசகர் வாழ்வு தலைசிறந்த எடுத்துக்காட்டு. இன்று எம் இனத்திற்கு தேவையானது செங்குருதித் தூய்மையல்ல செயலிற் தூய்மையாகும்.

மணிவாசகர் உடல் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அவரின் உயிரனைய பக்தி இலக்கியங்கள் இறவாப்புகழ்எய்திவிட்டன. இதுவும் யாம் இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதல்ல முதன்மை வாய்ந்தது. யாம் எப்படி வாழ்கிறோம் என்பதுவே முதன்மை வாய்ந்ததென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது.

பாண்டிய மன்னரின் அமைச்சரவையில் தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப்பட்டம் பெற்று முதல் அமைச்சராக விளங்கியவர் திருவாதவூரர். ஆனால் நிலையற்ற இப் பதவியை நிலையானது என்று கருதி அவர் ஏமாறவில்லை; மாறாக நானார் என்னுள்ளமார் ஞானங்களார் என்ற மெய்விளக்க தத்துவ ஆராய்ச்சியில் இறங்கி தன் பதவியைத்துச்செனமதித்து துறந்தவர் தூயமணிவாசகப் பெருந்தகை.

### சாதிவெறியைச் சாடிய சான்றோன்

பிறப்பால் பார்ப்பனராகிய மணிவாசகரிடம் சாதிவெறியை - நான் என்ற செருக்கினை மருந்தளவும் காணமுடியாது. மாறாக மாணிக்கவாசகர் ''சாதி குலம் பிறப்பெனுஞ் சுழிபட்டுத்தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லல் அறுத் தாட் கொண்ட'' இறையோனை இறைஞ்சி நிற்கின்ற இனிய காட்சியையே காண்கிறோம்.

### நனவில் கடவுளைக் கண்டவர்

மணிவாசகர்கடவுள்பற்றி வெறும் தத்துவம் பேசவில்லை. மாறாக மாதொருபாகனை நேரிற்கண்டு பேரின்பம் துய்த்தவர். 'நனவினும் நாயேற்கு அருளினைப் போற்றி என்றும் நனவே எனைப்பிடித்து ஆட்கொண்டவர்'' என்றும் அறுதியிட்டு உறுதியோடு உரைக்கும்' அவரது கருத்துக்கள் உள்ளொளிபெற்ற உயரிய கருத்துக்கள் என்று உணர்த்திடுவேமாக.

### தமிழை மணந்த தவமுனிவன்

எம் மாணிக்கவாசகப் பெருந்தகைமுற்றும் துறந்த முனிவர். மண் பெண், பொன் என்ற ஆசைகள் அனைத்தையும் அறவே துறந்தவர், ஆனால் அவரால் தமிழைத் துறக்க முடியவில்லை. அதனாற்தான் 'உயர் மதிற்கூடலில்ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்று தமிழின் பெருமையை திருக்கோவையாரில் திறம்பட எடுத்து இயம்புகிறார். அத்துடன்இறைவனை நினைத்துப் பாடுகையில் ''தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை'' என்று தான் பிறந்த பாண்டி நாட்டை தன்னையே மறந்த நிலையில் பெருமித உணர்ச்சியுடனும் பேருவகையுடனும் போற்றிப்புகழ்கிறார். அதுமட்டுமல்ல எந்நாட்டவர்க்கும் இறைவனாக சிவன் விளங்கினும் அவன் தென்னாட்டுச் சிவன் என்பதை ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும்இறைவா போற்றி'' என்றும் அவர் பாடிய பாடல்கள் அவருக்குத் தான் பேசியமொழியில் இருந்த தணியாத காதலையும், தான் வாழ்ந்த நாட்டிலிருந்த தனிப்பற்றினையும் தகைசான்ற முறையில் எடுத்துக்காட்டுகிறது.

### ஊனினை உருக்கும் திருவாசகம்

வேதம் ஓதின் விழி நீர் பெருகுவதில்லை எமக்கு. ஆனால் ஆங்கொருகால் திருவாசகம் ஓதின் எம்மையறியாமலே கண்களில் நீர்பெருகுகிறது. காரணம் முன்னையது எமக்குப் புரியாத வடமொழியில் எழுதப்பட்டிருப்பது, பின்னையது எமக்குப் புரியும் உள்ளம் உருகும் உயர் தமிழில் எழுதப்பட்டிருப்பது. உள்ளம்தொடும் புரியும் மொழியிலே வழிபடும்போதுதான் இறையின் இனிய இயல்பை யாம் உள்ளத்தில் உய்த்துணரத் தக்கதாய் இருக்கிறது. அதனாற்தான் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லவேண்டும்' என்று மணிவாசகர் வேண்டுகிறார். வேறு சொற்களில் விளம்பின் இன்பத்தமிழால் இறைவனைப் பாடி அன்பைப் பெருக்கவேண்டுமென்பதுவே மணிவாசகர் உள்ளக்கிடக்கை என்பதை யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது. ஏன் திருவாதவூரரின் தித்திக்கும் திருவாசகத்தில் உள்ளடங்கியுள்ள 'போற்றித் திருவகவலை'விட இறைவனை வழிபட - அருச்சனை செய்யவேறு சிறப்பு வழிபாட்டுமுறைஉண்டோயான் அறியேன்.

சொல்லிய பாட்டின் பொருளை உணர்த்தி உள்ளம் உருக்கும்தன்மை உயர் தமிழுக்கே உண்டென்ற மணிவாசகர் கருத்திற்கு வழிமொழி கூறுவதுபோல் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தன் பன்மொழி அறிவின் துணைகொண்டு தமிழின் தகைசான்ற தன்மையைஅதனின் குழைவை பின்வருமாறு கூறுவது எம்மையெல்லாம் உணர்ச்சியின் உச்சநிலைக்கு அழைத்துச் செல்லுகிறது. 'இலத்தீன் மொழி சட்டத்திற்கும்ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலியன அறிவியலுக்கும், சோவியத் மொழிகள் ஏகேசுவர வாதத்திற்கும் வடமொழி இலக்கணம் மெய்ப்பொருள் முதலியனவற்றிற்கும், தமிழ் ஆன்மீகவளர்ச்சிக்கும் மிக வாய்ப்பான மொழிகள். இம்மொழிகளை ஆழக்கற்றாலொழிய இவற்றை உணர முடியாது. இவ்வாறே தமிழ் அருளாளர்களது தமிழ்க் கவிதைகளை பயிலுங்கால் நாம் அவர்கள் கண்ட அனுபவங்களை எய்துகின்றோம். இறைவனோடு இரண்டறக் கலந்த அவர்களுடைய இனிய அருட்பேறுகளை உணர்கிறோம்.

இதனாற்தான் 'நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோம்' என்று கூறி பற்றற்றான் பற்றினைப்பற்றி

(14- பக்கம் பார்க்க)

— 'ஈழவேந்தன்' —

### யோகர் சுவாமிகள் நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

ஆதியந்த மில்லை யென்றான் எங்கள் குருநாதன்
அதுவே நீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
சோதி மயமென்று சொன்னான் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென் றான் எங்கள் குருநாதன்
சாதிசமய மில்லான் எங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
வாதியரும் காணவொண்ணான் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தான் எங்கள் குருநாதன்.

## இலங்கையிலுள்ள வரி அமைப்புகள் - 2

# வரிகட்டுவோரை எவ்வாறு நிர்ணயித்தல்

அ. முத்துக்கிருஷ்ணன்
பி, ஏ. எல்; (இலங்கை) எல். பி. (லண்டன்)

வரிகட்டுவோரை பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. இயற்கை மனிதன் (Natural Person)
2. சட்ட மனிதன் (Legal Person)

இயற்கை மனிதன் என்ற தலைப்பின்கீழ்

1 தனிமனிதன்
2 குடும்பங்கள்

சட்ட மனிதன் என்ற தலைப்பின்கீழ்

1 கம்பனி
2 பங்குடைமை
3 கூட்டுத்தாபனம்

வரிகட்டுவோரை நிர்ணயிப்பதற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கிழக்காசிய நாடுகளிலும் பலவித முறைகளைக் கையாளுகின்றார்கள், பொதுவாகப் பின்வருவனவற்றை அடிப்படையில் கொண்டே நிர்ணயிக்கிறார்கள்.

அ. பிரஜாவுரிமை
ஆ. இருப்பிடம்(Comecile)
இ. உறைவிடம்(Residence)
ஈ. பெற்ற பணத்தொகை [Remittances Received]
உ. வருமானத்தின் ஆதிமூலம் (Soures of Income)

இலங்கைச் சட்டத்தின் கீழ் உறைவிடத்தையும் வருமானத்தின் ஆதிமூலத்தையும் கொண்டே வரி கட்டுவோரைநிர்ணயிக்கிறார்கள்.

4-ம் இலக்க 1963-ம் ஆண்டு உள்நாட்டிறைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின்கீழ் இலங்கையை உறைவிடமாகக் கொண்டவரின் வருமானத்திலும் நயத்திலும் வருமானவரி செலுத்தல் வேண்டும். இந்த வருமானமும் நயமும் எந்தத் தேசத்தில் உற்பத்தியாகினும் ஒருவன் இலங்கையைத் தனது உறைவிடமாகக் கொள்ளுவானேயாகில் வரி செலுத்துதல் கட்டாயம். நாங்கள் உறைவிடம் என்றசொல்லின் கருத்தைச் சிறிதளவு ஆராய்வோம்.

ஒரு மனிதன் எந்த நாட்டைத் தனது உறைவிடமாகக் கொள்கிறானோ (குறிப்பிட்ட ஒரு வரிமதிப்பு ஆண்டில்) அந்த ஆண்டில் அவனுக்கு வந்த வருமானத்தில் வருமானவரி செலுத்தல் வேண்டும் ஒரு தனிப்பட்ட மனிதன் ஒரு வருடத்தில் தொடர்ந்து 12 மாதங்களும் இலங்கையை உறைவிடமாகக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஒருவன் மொத்தமாக ஒருவருடத்தில் 6 மாதகாலம் வதித் [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

அட்டவணை - 1

வருடாந்த வருமானத்தில் வரிக்கு உட்படாத தொகைகள் 1969 — 1970 மட்டுக்கும்


| | வீட்டுத் தலைவன் தொழில் செய்பவன் | கணவனும் மனைவியும் தொழிலில் | மற்றவர்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தனிமனிதன் | 3960 | — | 3000 |
| கணவன் மனைவி | 4500 | 5400 | 3600 |
| குடும்பம் 1 பிள்ளை அல்லது 1 அண்டி வாழ்பவர் | 5100 | 6000 | 4200 |
| குடும்பமும் 2 பிள்ளை அல்லது 2 அண்டி வாழ்பவர் | 5100 | 6000 | 4200 |
| குடும்பமும் 3 பிள்ளை அல்லது 3 அண்டி வாழ்பவர் | 5700 | 6600 | 4800 |
| தனி மனிதன் 1அல்லது2பிள்ளை 1 அல்லது 2 அண்டி வாழ்பவர் | 4500 | — | 3600 |
| தனிமனிதன் 3 அல்லது 4 பிள்ளை அல்லது 3, 4 அண்டி வாழ்பவர்கள் | 5100 | — | 4200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைரேகை அனுபவம் - 6

# சூரியரேகையும் சூரியரேகையின் கிளைகளும்

சென்ற வாரம் ரேகை இலக்கம்-5 ஐ கொண்ட சூரிய ரேகையையும், கிளைகளையும் பற்றிப் பார்த்தோம். மீண்டும் அதன் தொடர்பகுதியைச் சிறிது கவனிப்போம். சூரியரேகையிலிருந்து கிளைகள் பல மேடுகளுக்கும் செல்லும். ஆனால் அக்கிளைகள் எல்லாம் எல்லோருடைய கைகளிலும் ஒரேமாதிரியும் ஒரே மேட்டிற்கும் செல்வதில்லை. சிலருடைய கையில் சூரிய ரேகையின் கிளைகள் குரு மேட்டிற்கும் சனி மேட்டிற்கும் செல்லும். இன்னும் சிலருடைய கையில் கிளைகள் புதன் மேடு, செவ்வாய் மேடு ஆகிய மேடுகளுக்குச் செல்லும். இவ்வாறு கிளைகள் வேறு வேறு மேடுகளுக்குச் செல்வதனால் பலன்களும் வேறு வேறாகத் தோன்றுகின்றன. சிலருடைய கையில் கிளைகளில்லாத சூரியரேகையிருக்கும். ஆனால் இன்னும் சிலருடைய கையில் சூரியரேகையே இல்லாதிருக்கும்.



படத்திலே d என்ற பகுதியாகிய மேடு புதன்மேடாகும். புதன் மேட்டில் ரேகை இலக்கம்-4 குறிக்கப்பட்டுள்ள ரேகை ஐக்கியரேகையாகும். ஐக்கிய ரேகை பிரதானமாகக் குடும்பத்திற்கும், விவாகத்திற்கும் உரிய ரேகையாகும். சூரிய ரேகை நன்றாயமைந்த பொழுதும் புதன் மேட்டிலுள்ள ஐக்கிய ரேரை குறுக்கிட்டிருந்தால் செல்வாக்கையிழப்பர். உதாரணமாக ஒருவருடைய கையில் சூரியரேகையை நோக்கிச் சில காலங்களுக்கு முன்னர் ஐக்கிய ரேகை வளர்ந்திருந்தது அப்பொழுது அன்னாருக்கு விவாகப் பேச்சுக்கள் தடல்புடலாகப் பேசப்பட்டன. அன்னார் நன்றாகத் தீர்மானித்துப் பின்பு ஒருகாலமும் ஒரு குறையும் வராது என எண்ணிக்கொண்டு ஒரு திருமணத்துக்கு நிச்சயார்த்தம் செய்தார். சில காலத்தால் திருமணமும் நடந்தது. இவ்வளவும் நடைபெற்றகாலத்தின்பின் ஐக்கிய ரேகை வளர்ந்து சூரிய ரேகையைக் குறுக்கிட்டுச் சென்றது. பலதரப்பட்ட பிரச்னைகள் இவர்கள் குடும்பத்தில் எழுந்தன. இறுதியாகக் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்ந்தார்கள். இருபகுதியினரும் பிரிவின் காரணமாக அவமானப்பட்டனர். அவர்கள் பொருத்தமற்ற விவாகத்தால் செல்வாக்கை இழந்தனர்.

சூரியரேகையிலிருந்து ஒரு கிளை சனிமேட்டிற்குச் செல்வதனால் நல்ல பலன் உண்டாகும். ஆனால் சனிமேட்டிலிருந்து ஒரு ரேகை சூரிய மேட்டிற்குச் சென்று சூரிய ரேகையைக் குறுக்கிடுமாயின், செல்வத்தைப் பெற வேண்டிய ஒருவர் அதற்குப் பதிலாகச் செல்வத்தையிழக்கவேண்டிய நிலையை அடைவர். அதுமட்டுமல்ல, அன்னார் செய்கின்ற தொழிலிலும் பிரசித்தியாகாது துன்பமடைவர். தொழிலில் வீழ்ச்சியும் ஏற்படும். சனி மேட்டிலிருந்து சென்ற ரேகை சூரிய ரேகையை வெட்டுகின்றது. இதனால் தாக்கம் ஏற்பட்டு துன்பத்தையே அனுபவிக்கவேண்டி நேரிடுகின்றது.

ஒருவருடைய கையில் சூரியமேட்டில் சூரியரேகை அலைபோல் இருந்தது. அன்னார் மிகவும் நல்லவராகவும் கெட்டித்தனமானவராகவும் காணப்பட்டார். ஆனால் அவர் வாழ்வில் பெரிதும் துன்பத்தை அனுபவித்தார். நல்லவராகவும் கெட்டித்தனமுள்ளவராகவும் இருந்த அவர் துன்பத்தை அனுபவிக்கத் தேவையில்லையே? ஆனால் சூரிய ரேகை அலைபோல் இருக்கக் காணப்பட்டதால் அதன் பலனை அனுபவித்தார். அன்னார் தனது நண்பர்களுடன் சென்று பணத்தை வீண்விரயம் செய்தார். கல்வி பயிலச் சென்றவர் அவமே காலத்தைக் கழித்தார். பெரியோர்களுடன் எதிர்த்து வாதமிடுதல், பொய் பேசுதல், மதுபானம் அருந்துதல் ஆகிய தவறான வழிகளில் சென்றார். நல்ல பலனை அனுபவிக்கவில்லை. புத்தி தவறான வழியில் சென்றுகொண்டிருந்தது.

ஒருவருடைய கையில் சூரியரேகையிலிருந்து மூன்று கிளைகள் சென்றன. ஒரு கிளை சூரியமேட்டிலேயிருந்தது. அதனால் அவர் புகழும் செல்வாக்கும் உள்ளவராகக் காணப்பட்டார். ஒரு கிளை புதன் மேட்டிற்குச் சென்றது. இதனால் அவர் வாணிபம் போன்ற தொழிலில் ஈடுபட்டுப் பணவருவாயைப் பெற்றார். ஒரு கிளை சனி மேட்டிற்குச் சென்றது. இதனால் அன்னார் நிரந்தரமாகவும், சந்தோஷமான வாழ்க்கையும் நடாத்தினார். இத்தகைய நிலையில் கிளைகள் வெவ்வேறு மேடுகளுக்கும் சென்றதனால் அன்னார் பெருங்கீர்த்தியும், சிறப்பான வாழ்க்கையையும் நடாத்தினார்.

படத்தில் தெரியும் ரேகை இலக்கம்-3 ஐ பார்க்கவும். இது இருதய ரேகை எனப்படும். சூரிய ரேகை இருதய ரேகையோடு சம்பந்தப்படுகின்றவிடத்தில் புள்ளிகள் ஏற்படுவது வரவேற்கக் கூடியதல்ல. சூரிய ரேகை இருதய ரேகையோடு சம்பந்தப்படுகின்றவிடத்தில் கறுப்புப்புள்ளிகாணப்படில், அந்தக் காலத்தில் குருட்டுத் தன்மையடைவர். இவ்வாறு குருட்டுத்தன்மையுடையவர் பிறவிக்குருடரல்ல. முன்பு நல்ல கண்பார்வையுள்ளவராயிருந்து பின்பு குருட்டுத்தன்மையடைந்தவராவர். சிலருக்கு முற்றாகக் கண்தெரியாதுபோவதுமுண்டு. சிலருக்குப் புகாரில் பார்ப்பதுபோல் மங்கலாகத் தெரியும். சிலருக்கு ஒரு நிழல் தெரிவதுபோல் தெரியும். இங்கே குறிப்பிட்டுள்ள கறுப்புப் புள்ளி மறைகின்ற காலத்தில் கண்பார்வை துலக்கமாகவிருக்கும். கறுப்புப் புள்ளி மிகவும் பலம் வாய்ந்ததாகவிருந்து மேலே கூறியதுபோல ரேகைகளுமிருந்தால் கண்பார்வை பெற அதிககாலமெடுக்கும்.

படத்தில் தெரியும் ரேகை இலக்கம்-7 ஐ பார்க்கவும். இது ஆயுள் ரேகை எனப்படும். (இதைப் பற்றிய விளக்கத்தை வரவிருக்கும் அத்தியாயங்களில் அறியலாம்) சூரிய ரேகையில் தீவு காணப்பட்டு ஆயுள் ரேகையில் நோய்க்குரிய அடையாளமும் காணப்பட்டால் இருதய ரோகமுண்டாகும். ஆயுள் ரேகையில் வெட்டு, தீவு பிளவு போன்ற குறிகள் காணப்பட்டால் அதை நோய்க்குரிய அடையாளமாகக் கொள்ளப்படும். ரேகைகளில் வெட்டு, பிளவு, தீவு இருத்தல் நல்லதல்ல. அவ்வாறே ரேகைகள் வெளி [illegible] நல்லதல்ல.

சூரிய ரேகை செல்வம், கீர்த்தி, செல்வாக்கு ஆகியவைகளுக்கு காரணமாயுள்ளதென்பதை முன்னைய அத்தியாயத்தில் அறிந்தோம். சூரியரேகை வெட்டு, தீவு, பிளவு யாதுமின்றி நன்கு அமையப்பெற்று, குருமேடு (a-பகுதி) நன்கு அமையப்பெற்றால் பெரியோர்களின் நட்புக் கிடைக்கும். இதே வேளையில் சனி மேட்டில் விதிரேகையிருந்தால் நல்ல தொழில் கிடைக்கும். அதுவும் பெரியார் ஒருவரின் நட்பை ஆதாரமாகக் கொண்டே இது நிகழ்கின்றது. அந்த உதவியைச் செய்த பெரியவர் கல்வியும், நற்குணமும் அந்தஸ்துமுள்ளவராகக் காணப்படுவார். எனவே அத்தகையவரின் சிபார்சினாலோ அல்லது அத்தகையவரின் வேறு உதவியினாலோ தொழில் கிடைக்கின்றது. காகம் இருக்கப் பனம்பழம் வீழ்ந்தது போல் காரியம் நடந்துவிடுகின்றது.

சூரிய ரேகையில் அநேக சிறு ரேகைகள் குறுக்கிட்டிருப்பது தீய பலனைக் குறிப்பதாகும். சிலர் சில பொருட்களை ஓரிடத்தில் வைத்துவிட்டு வேறோரிடத்தில் தேடுவார்கள். தேடுவதுமட்டுமல்ல, தேடிக் கிடையாத சந்தர்ப்பத்தில் அதிகம் விபரீதம் ஏற்படக்கூடிய சூழ்நிலையையும் தமது இல்லத்தில் ஏற்படுத்துகின்றனர். சூரிய ரேகையில் அநேக சிறு ரேகைகளிருந்தால் தடுமாற்றத்தைக் கொடுக்கும். ஏனைய கிரக மேடுகளும், ரேகைகளும் நன்கு அமையாதிருந்தால் பெரும் தீங்கான விளைவுகள் ஏற்படும். தீங்கான விளைவுகள் நோயின் காரணமானதாகும்.

**மு. குணரத்தினம்**

---

# கரும்பில் எத்தனை வகை? விளைவை உயர்த்த ஆராய்ச்சி

**கந்தளாய், இங்கினியாகலை ஆகிய இடங்களில் சீனி ஆலைகள் நிறுவப்பட்டு சீனி உற்பத்தி செய்யப்படுகிறது. சீனிக்கு மூலப் பொருளான கரும்பும் இங்குசாகுபடி செய்யப்படுகிறது? இங்கு கரும்பு விளைச்சலை உயர்த்துவதற்கு வேண்டிய நல்ல யோசனைகளை இக்கட்டுரையில் காணலாம்.**

**— நன்றி 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்'**

கரும்பும் சர்க்கரையும் (சீனி) இந்திய நாட்டில் பிறந்தவை. சர்க்கரை செய்யும் கலை இந்த நாட்டிலிருந்துதான் உலகின் பிற பகுதிகளுக்குப் பரவியது.

இன்றைக்கும் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முதன்மையான ஒரு நாடாகும். நெசவுத் தொழிலுக்கு அடுத்தபடி நாட்டில் மிகப் பெரியதொழில் இதுவே.

நாட்டின் சர்க்கரை உற்பத்தி கடந்த இருபது ஆண்டுகளாக மென்மேலும் பெருகி வந்துள்ளது 1947-ல் 35 லட்சம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிராயிற்று; இன்று அது 60 லட்சம் ஏக்கர் நிலத்துக்கு மேலாகும்.

இவ்வாறு தொழிலில் தழைத்தோங்க ஒரு முக்கிய காரணம் கரும்பின் தரமும் நிறையும் உயர்ந்திருப்பதாகும். பல ஆண்டுகளாக வருந்தி முயன்று செய்த ஆராய்ச்சிகளின் பயனாக, மண்வாசிக்கும் தட்பவெட்ப நிலைக்கும் ஏற்றவாறு நன்கு வளரக்கூடிய பல கரும்பு ரகங்கள் கிடைத்துள்ளன; இந்த ஆராய்ச்சியில் முன்னின்று வழிகாட்டுவது கோயம்புத்தூரில் உள்ள கரும்பு வளர்ப்புக்கழகம். இது இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றத்தின் கிளையாகும்.

பொருளாதாரத்தின் வேறு பல துறைகளுக்கும் போலவே கரும்பு ஆராய்ச்சிக்கும் பல நாட்டு ஒத்துழைப்பு வரவர அதிக முக்கியமாகிவருகிறது.

இந்தியா, அமெரிக்கா இரண்டு நாடுகளிலும் வெப்ப மண்டலங்களில் தழைத்து வளரும் கரும்பினங்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கக் கோவைக்கழகமும் அமெரிக்க அரசின் வேளாண்மை இலாகாவும் இப்போது ஓர் ஆராய்ச்சியில் ஒன்றாகஈடுபட்டுள்ளன.

நாணல்வகைகளோடு இந்திய, அமெரிக்கக் கரும்பினங்களை ஒட்டுச்சேர்த்து, புழு பூச்சிகளுக்கும், நோய்களுக்கும் தட்பவெப்ப மாறுதல்களுக்கும் மசியாத புதிய இனங்களைக் காணும் ஆராய்ச்சி ஒன்று 1963 அக்டோபர் மாதம் கோவைக் கழகத்தில் ஆரம்பமாயிற்று. அதே நோக்கத்தோடு இரண்டாவது திட்டம் ஒன்று 1968-ல் தொடங்கிற்று.

ஒரு காலத்தில் ஆண்டுதோறும் ரூ. 15 கோடி அளவுக்கு வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதிசெய்து வந்த இந்தியா இன்று தனக்கு வேண்டியதுபோக வெளிநாடுகளுக்கும் நிறையச் சர்க்கரை ஏற்றுமதி செய்கிறது என்றால், அதன் பெருமை கோவைக் கழகத்துக்கே உரியதாகும்.

இந்தியச் சர்க்கரை வேறெந்த நாட்டையும்விட அமெரிக்காவுக்கே அதிகமாக ஏற்றுமதியாகிறது. 1968-ல் சர்க்கரை ஏற்றுமதியால் கிடைத்த அன்னியச் செலாவணி ஏறக்குறைய ரூ. 10 கோடி; இதில் ரூ. 8 கோடி அமெரிக்காவிலிருந்து கிடைத்ததாகும்.

"இந்தியாவில் பயிராகும் கரும்புவகைகளில் கிட்டத்தட்ட யாவும் இங்கு நாங்கள் செய்த ஆராய்ச்சியின் பயனேயாகும்" என்கிறார் கோவைக் கழகத்து நெறியாளர் டாக்டர் சூரியகாந்தி எஸ். ஷா.

சர்க்கரைத் தொழிலில் ரூ. 300 கோடிக்குமேல் முதலீடாகியுள்ளது; நாட்டின் பொருளாதாரத்திலே இத்தொழில் முக்கியமான ஒன்றாகும், 1967-68-ல் இத்தொழில் உற்பத்தியின் மதிப்பு கலால் வரி நீங்கலாக ரூ. 400 கோடிக்கு மேலாக இருந்தது. ஏறக்குறைய இரண்டு கோடி விவசாயிகள் கரும்புப் பயிர் செய்கிறார்கள்.

கோவைக் கழகம் 1912-ல் தோன்றியதாகும்; அன்று முதல் அதன் பணிகள் மென்மேலும் பெருகி வந்துள்ளன. அதன் ஆராய்ச்சிப் பண்ணை 100 ஏக்கர் பரப்புடையது; அங்குள்ள கரும்பினங்கள் 2500 வகையானவை இவை உலகம் நெடுகிலுமிருந்து சேர்த்தவையாகும் உலகப் புகழ் பெற்றதோர் நிலையம் இது.

கோவை ஆராய்ச்சியில் பிறந்த ஏறக்குறைய 30 கரும்புவகைகள் இன்று இந்தியாவிலும் அமெரிக்கா முதலிய வேறு 26 நாடுகளிலும் பயிராகின்றன.

சிறுகதை

# மேய்ப்பன்!

அலைவீசும் கடலின் கரையிலே அந்த கோவில் விளங்குகிறது. அந்தக் கோவிலை வழிநடத்தும் அந்த மனிதன் ...... கோவிலுக்காகவே வாழ்கிறன் ...... கோவிற் பணிக்காகவே ஆழமான கடலின் நடுவிலே பேரலைகளைக் கிழித்துக் கொண்டு செல்கிறன். அன்று இரவு புயல் ...... திரும்பிவராதவர்களுள் அவனும் ஒருவன். அன்று கோவில் மணியை ஒலித்தவன் அவன். அவனுக்காக இன்று கோவில் மணி ஒலிக்கிறது.

"டாண் ... டாண்! டாண்!"

புனித தோமையார் ஆலய திருந்தாதி மணி இடையிடையே ஒலிக்கிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமைதான்...

இந்தக்கோவிலில் பூசை நடக்காது.

பூசை நடைபெற்று இரு வருடங்களாகிவிட்டன.

கோவிலில் பூசைமட்டும் நடைபெறுவதில்லையேதவிர காலந்தப்பாது திருந்தாதி மணிமட்டும் ஒலிக்கும்.

இந்த ஒழுங்கின் காரண கர்த்தா சங்கிலித்தாம் அவர்கள்.

அவர் இல்லாவிட்டால்...?

0 0 0

அவ்வூரின் கேந்திரப்பகுதியாகவுள்ள கடற்கரைப் பிராந்தியத்தில் விரிந்திருக்கும் கடற்கரையின் எதிர்ப் புறத்தில் அஞ்சலகத்தை அண்மி நிமிர்ந்துநிற்கிறது. தோமையார் ஆலயம். அது அப்பிராந்திய கடற்கரை வாழ் மக்களின் சொத்தாகும்.

புனித தோமையார் ஆலயத்தை நினைப்பவர்கள் சங்கிலித்தாம் கிறகோரியை மறக்கமாட்டார்கள்.

கோவிலின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் ஒழுங்குக்கும் பொறுப்பாளி அவர்தான்.

இதனால் அவருக்கு ஊரில் நல்ல மரியாதையும் இருந்தது.

சங்கிலித்தாம் கிறகோரி நல்ல தேகக்கட்டுடையவர். வயது சுமார் அறுபதுக்கு மேல் இருக்கும். ஆனால் இன்றுகூட தனியே கடலுக்குப் போக அஞ்சாதவர்.

கரை வலை ... விடு வலை... கொண்டோடி வலை ... கொட்டுவலை ... தூண்டிவலை ...படகுவலை...

இப்படி எத்தனையோ நுணுக்கமான தொழிற்பாடுகளில் வல்லவர்.

தோமையார் ஆலயத் திருநாள் தொடங்கிவிட்டால் அவர் கடலுக்குப் போவதே கிடையாது.

அவ்வேளையில் அவருடைய கட்டுமரமும் வலையும் தரையேறி பிணையல் கழன்று வெய்யிலில் ஓய்வெடுக்கும்.

அவர்தான் கோயில், கோயில்தான் அவர்.

0 0 0

அந்தக்காலம் பொற்காலம்...?

திருந்தாதி மணி விட்டு விட்டுக்கேட்கிறது.

கிறகோரியின் ஞானமகன் பிரான்சிஸ் மணியின் தேய்வொலி கேட்டுச் சிலிர்க்கிறன்.

கோவில் மணிஒலி அவனைத் தூண்டில்போட்டுக் கோவிலுக்கு இழுக்கிறது.

ஞானத்தந்தையின் நினைவு வலை இழுவையாக இழுக்க...

அவன் கோவிலை அடையவும் திருந்தாதிமணி அடிப்பதும் நின்றுவிடுகிறது.

ஆனாலும் அந்த மணியின் தொனி அலைஅலையாக தேய்வது மட்டும் நிற்கவில்லை...

கிறகோரி கோவில் விருந்தையில் உட்கார்ந்திருக்கிறர். அவர் கண்கள் சற்றுத் தொலைவிலுள்ள கடற்பரப்பில் எதையோ தேடிக்கொண்டிருக்கின்றன.

மிதப்புக் கட்டையின் அசைவை வெறிக்கும் விரக்திப் பார்வை...

ஏதோ ஆழ்ந்த யோசனை... தவிர்க்கவோ... எடுத்தெறிந்துவிடவோ முடியாத சிந்தனை...

வலைக்குள் சிக்கிக்கொண்ட மீனின் அவலம் ...நிர்ப்பந்தத்தின் பிடிக்குள் முடங்கிவிட்ட ஒருநிலை...

"தொட்டையா"

பிரான்ஸிஸ் மெதுவாக அழைத்தான். அவர்சிந்தனை இடம்பெயர்கிறது

"என்ன ... தொட்டையா யோசினை...?"

அவர் அவனை நிமிர்ந்து பார்த்தார். வாய் திறக்கவில்லை. மௌனமாக இருக்கிறர்.

"சாப்பிட்டியளா தொட்டையா?"

பிரான்சிஸ் மீண்டும் கேட்டான்.

"அதுக்கென்ன குறைச்சல்" இவ்வார்த்தைகளில் சலிப்பு பிரதிபலிக்கின்றது. மீண்டு அமைதியாக அவர் வாய்திறக்க...

"சாப்பாடு மட்டும் இருந்தால் போதும் ... எனக்கு... இந்த...இதை ... நிம்மதி வேண்டாமே...?" இவ்வார்த்தைகள் உதிர்ந்தன. அவ்வளவுதான், கிறகோரியின் குரல் கரகரத்தது.

"நீங்கள் என்ன செய்யேலும் தொட்டையா?"

பிரான்சிஸ் மெதுவாக முனகினன்.

"மகன் உனக்குத் தெரியாது...நீ குழந்தை...இந்தக் கோயிலைக்கட்டிறதுக்குநாங்கள் எவ்வளவு கஷ்டப் பட்டம்."

சங்கிலித்தாமுக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது உணர்ச்சியால் உடல் நடுங்கியது.

"இந்தக்கோயிலுக்கு ஒருத்தருமே வாறதில்லை... நான் முன்னுக்கு நிண்டு கட்டின கோயில் என்ரை கண்ணுக்கு முன்னலேயே சீரழியுது..."

தொடர்ந்து பேசிய அவர் தலையைக் கவிழ்ந்து கொண்டார்.

அவர் அழுகையை அடக்க முயல்வது பிரான்ஸிஸுக்குப் புரிந்தது.

அவரது மகன் சக்கரியாஸ் காணமற்போன போதுகூட அவர் இவ்வளவு கவலைப்படவில்லை.

இதற்கு அடிப்படை ஒரு சிறு சம்பவமே.

கத்தோலிக்கர்களின் மேய்ப்பன் என்று பெஞ்சமின் குருவானவரால் போற்றப்பட்ட அவனின் ஞானத்தந்தை இப்போது மந்தைகள் இல்லாத மேய்ப்பன்.

அவரைப் பார்க்க விரும்பாத பிரான்ஸிஸ் தனது பார்வையைக் கோவில் சுவரை நோக்கித் திருப்பினன்.

கோவில் மிகவும் பழுதாகிவிட்டிருந்தது. அதன் தேஜஸ் மங்கி... இன்னும் இரண்டுவருடம் இப்படியே இருந்தால் அது நிச்சயம் அழிந்துதான் போய்விடும்.

"நான் எதுக்கும்பயப்படவில்லை மகன்...கும்பாகூட என்னலை...கோயிலுக்குவாறதில்லை என்று எண்ணிறதை நினைக்க..."

கிறகோரி விம்மினர். "கும்பா" என்கிற உறவு முறைக்குப் பாத்திரமான பிரான்சிஸின் தந்தையைப் பற்றியது.

பிரான்சிசைக் கிறகோரியோடுகதைக்கக்கூடாதென்றுஅவன் தந்தை கட்டளையிட்டிருந்தார். ஆனலும் அவன் அதைமிகவும்பயத்துடனேயே மீறிக்கொண்டிருந்தான்.

அவனல் தன் ஞானத்தந்தையைப் புறக்கணிக்க முடியவில்லை. அவர் நியாயத்தைத்தான் செய்திருப்பதாக அவன் நம்பியிருந்தான்.

"நீங்கள் சுவாமியிட்டைப் போனனீங்களோ?"

"ஓம் ... போனனான்..."

"என்ன சொன்னவர்...?"

"எல்லாரும் ஒற்றுமையாய் வந்தால் தானும் வாருராம்... மேற்றிராணியாரும் அதைத்தான் சொன்னவராம்..."

"இது நடக்கக்கூடியதா?" பிரான்சிஸ் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான்.

அங்குள்ளவர்களுக்குள் இரண்டு பிரிவு- இதைத் தீர்த்து வைக்கக்கூடிய சங்கிலித்தாமே இருபகுதியினருக்கும்எதிரி...இந்நிலையில்...

வலைகள் கற்களினுள் சிக்குப்பட்டு... இழுத்தால் வலையே சுக்கல் சுக்கலாகிவிடும். பெரும் சிக்கல்...

தீர்வு...?

பிரான்சிஸ் தன் ஞானத்தந்தையை வெறிக்கப் பார்க்கிறன். அவர் நிலத்தில் ஏதோ கைகளால் கீறிக்கொண்டிருக்கிறர். அவர் சிந்தனை வலை பின்னுகிறது. அது அவர் முகத்தில் அப்பட்டமாகத்தெரிகிறது.

சென்ற வருடம் அடித்த புயலில் அவர் மகன் அள்ளுண்டுபோகாதிருந்தால் அவர் இப்போதும் மதிப்பானவராகத்தான் இருந்திருப்பார்.

அவரது மகனின் மனைவியாகிய தெரேசாவை அவர் கந்தசாமிக்கு மறுமணம் செய்து கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும்... சங்கிலித்தாமின் மதிப்புக் குறைந்ததும் இதனல்தான்.

அவர் தெரேசாவை அத்திருமணத்தை முடிக்காதிருந்தால்...

இழிவேதும் ஏற்படாமலிருக்கவே கிறகோரி இருவரையும் நேர்மையான விதத்தில் இணைத்தார்.

சங்கிலித்தாமின்நேர்மை. மற்றவர்களுக்கு சகிக்கமுடியாத கோபத்தை உண்டுபண்ணுமென எதிர்பார்க்கவில்லை.

சங்கிலித் தாம் தனிமைப் படுத்தப்பட்டுவிட்டார்.

முன்பே பல பிரச்னைகளால் கோவிலுக்கு வராமல் இருந்தவர்கள் இப்பிரச்னையையும் அழுங்குப்பிடியாகப் பிடித்து கோவிலுக்கு வருவதை நிறுத்திக்கொண்டு விட்டார்கள்.

கோவிலில் பூசை இல்லை...

திருந்தாதி மட்டும் அடிக்கிறது...கிறகோரியும் இல்லாவிட்டால்...? கிறகோரி பிரான்சிசை நிமிர்ந்துபார்த்தார்.

"மகன் கோயில் சிலவுக்கு ஒரு ஐம்பதுரூபா வேணும்... தேவநற்கருணைக் கூட்டுச் சீலையும்... பெரிய கூட்டை மூடியிருந்தசீலையும்நல்லாய்க் கிழிஞ்சுபோச்சுது... இப்பிடியே விட்டுட்டால் இரண்டும் உக்கிப்போயிடும்..."

கிறகோரி எட்டாத் தண்ணியில் தத்தளிக்கும் நீச்சல் தெரியாத மனிதனின் அவஸ்தையில் முக்கி முனகினர்.

"பிரான்சிஸிடம் ஏது பணம்- '

அவன் தனது முகத்தை மறுபுறம் திருப்பி வைத்துக் கொண்டான். கிறகோரிக்கு அவன் நிலை புரிந்திருக்கவேண்டும். அவர்பேசுவதை நிறுத்திக்கொண்டு... கடலை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இருட்டில் சீறும் அலைகளின் பேரோசை... கேட்கிறது.

கிறகோரியின் இதயமும் அடித்துப் புரண்டு அலையோசை காட்டுகிறது.

பிரான்சிஸ் அங்கு வந்தபோது இருந்த அதே நிலை... ஐஸ் போட்ட மீனின் மரத்த தன்மையது.

பிரான்சிசுக்கு அவர் அப்போதும் இதைத்தான் சிந்தித்துக்கொண்டிருந்தால் என்பது பட்டவர்த்தனமாகிவிட்டது.

திடீரென கிறகோரி விம்மி அழுதுதார்.

"மகன்,எனக்கொருஉதவி செய்வியளே?"

"என்ன தொட்டையா?"

"இண்டைக்குக் கடலை போகலாமெண்டிருக்கிறன்... வந்து அந்த மரத்தைப் பிணைச்சுத் தாறியளே...?"

அவன் தலையசைத்தான்.

கிறகோரி கடலுக்குப் போய்இரண்டுவருடங்கள்... சக்கரியாஸ் இறந்தபிறகு அவர் கடலுக்கே போகவில்லை...ஆனல் இன்று...ஒரு நிர்ப்பந்தம்...அது பிரான்சிசுக்குப் புரிந்தது.

அவரது குடிலிலிருந்து கொண்டுவந்த ஏதனங்கள் அனைத்தையும் பிணைத்துவிட்ட மரத்தில் வைத்துவிட்டு கைகளால் மரத்தை நீரினுள் தள்ளினன்.பிரான்சிஸ்.

ஏனே அவன் கை நடுங்கியது

கிறகோரி அவனைப்பாடு படும்படி வற்புறுத்தினர்.

பிரான்சிஸ் மெதுவாகப் பாடினன்.

'எங்கே சுமந்து போகிறீர் என் யேசுநாதா-எங்கே. சுமந்து போகிறீர்'

கிறகோரி மெதுவாகப் பாடியபடி சவளால் நீரை வலித்து முன்னேறிக்கொண்டிருந்தார்.

இருளில்மரம்வானைக் கடந்து அலைகளைப்பிளந்து முன்

(14-ம் பக்கம் பார்க்க)

– நந்தினி சேவியர் –

உருவகக் கதை

## நாய்கள்!

அதே நாய்தான்!

இல்லை, நாய்கள்என்று கூறவேண்டும் - அங்கு நின்றது இரண்டு நாய்கள்! நீங்களும் நானும் எல்லோரும்பள்ளிக்கூட நாட்களில் சிறு கதையாய் படித்தறிந்த நாய்களே அவை இரண்டும்!

ஒன்று கொழுத்த நாய். கழுத்தில் தன் எசமான் கட்டிவிட்ட பட்டியை அது பெருமையுடன் தாங்கிக் கொண்டிருக்கிறது.

மற்றது, ஓர் எசமானையும் அண்டிநிற்கமுடியாத பரதேசி நாய்! சுதந்திரம் என்றஉணர்வின் பரிசாய் அது எலும்பு தெரிய மெலிந்துநின்றது; இருந்தும் அதிலும் அதற்கொரு மிடுக்கு! அதை விட்டுவிடுவோம்!

பவிசுக்குரிய பெரிய நாய் தான் கதைத்தது பிழை. அந்த ஊர்சுற்றி நாயைத் திருத்தமுடியாது, என்ற முழு நினைவோடு தன் தலைவனிடம் போய்க்கொண்டிருந்தது. அந்த எசமானரும், அவரது வீட்டின் பிரமாண்டமானதோற்றத்தைப் பார்க்கவே விளங்கிற்று - எங்கள் சமூகத்தில் அவர் ஒரு 'பெரிய' மனிதர்தான்! சாப்பிட்டுவிட்டு சுகமான உறக்கத்தில் இவர் இறங்கிக்கொண்டிருக்கிறர். எசமானரைப் புரிந்தநாயல்லவா அது! எனவே தட்டாமல் குழப்பாமல்அவரது காலடியில் தலைவைத்து அது படுத்துக்கொண்டது.

திருப்தியின் முடிவு உறக்கம். அதுவரையும் ஆட்கொண்டது. தணிந்தெரிந்த சிறு விளக்கு அவற்றுக்கு அழகுசெய்துகொண்டிருந்தது'

ஊரின் வெளியிலா கும்மிருட்டு. இப்போ [illegible] நடுச்சாமவேளையும்கூட பயங்கர நிசப்தம்ஆட்சி செய்கிறது, இவ்வேளை.

ஏதோ ஒரு காலடிச் சப்தம் மெல்லெனக் கேட்கிறது. அந்த ஒலிதரும் விழிப்போடு பார்த்தால் ஓர் உருவம் தெரிகிறது. அது மெல்லெனத் தெருவழியே நகர்ந்து மறைந்துவருகிறது. அது சந்தியில் வந்து திரும்பியதுதான் தெரியும்—

'வள்!' என விழுகிறது ஒரு குரல்! தொடர்ந்தும் சிம்ம கர்ச்சனையென துரத்திக்கொண்டோடுகிறது. அந்த ஊர் சுற்றிநாய்! அவன் விழுந்தடித்துக் கொண்டோடுகிறன்; பெரிய வீட்டுக்கு அப்பாலுக்கப்பாலும் ஓடி அவன் மறைந்தபின்னரே அது திரும்புகிறது. ஊர் தொடர்ந்தும்உறங்குகிறது. எனினும் கிளர்ந்தெழுந்த அதன் உணத்துடிப்பு ஒலிப்பெருகாய் நின்றுஊரைக்காக்கிறது.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## எது அழகு?

அழகுக்கலைகளை நான் மதிப்பதில்லையென்றுசிலர் கூறுகிறார்கள் அது உண்மையே. அதற்கு சில காரணங்கள் இருக்கலாம் ஒன்று ஓவியம் என்ற பெயரில் பலவிதமான படைப்புகள் இக்காலத்தில வெளியாகின்றன. எனது ஆத்மீக எழுச்சிக்கு அவை பயன்படா. அவ்வளவுதான் விண்மீன்கள் பூத்த நிஷ்களங்கமான வானத்தை பார்த்துப் பார்த்து நான் ஆனந்த பரவசமடையவில்லையா? நட்சத்திர வானம், கம்பீரமான கடல், அமைதியான மலைத்தொடர்-இவற்றை விட ஆத்மாவை தூண்டக்கூடிய பொருள் வேறு என்ன இருக்கிறது. இயற்கை அன்னையைத் தவிர ஆத்மீக எழுச்சிக்கு எனக்கு வேறொன்றும் தேவையில்லை. ஆண்டவனின் படைப்புக்கெதிரே கேவலம் மனிதனின் படைப்பு எம்மாத்திரம்?

— மகாத்மாகாந்தி

## அவர் எழுதிய தமிழ்

பின்னும் நந்தனார் தாம் செய்யுந் தருமமேதென்றால், இவர் புலையரானபடியால் சிவஸ்தலங்களுக்கு போய் வீதியைச் சுற்றி சந்நிதியில் வந்து தடிவிழுந்ததுபோல் உடல் பணியப் பணிந்து புழுதியில் புரண்டு மயிர் சிலிர்ப்பக் கண்ணீருதிர்ப்ப, வாய் குழற, உரை தடுமாறி ஒருதர மழுது பலதரந் தொழுது எக்கலித்து கெக்கலித்து ஒருதரஞ்சிரித்து ஒருதரம் வெறுத்து ஜகமறந்து அகமிழந்து அனல் கண்ட மெழுகதுபோல உள்ள முருகி ஆனந்தவெள்ளம் பெருகி கள்ளங்கருகிச் சிவனே சிவனேயென்று வாய் வாய் வலிக்கப் பேசி கைவலிக்கக் கொட்டி கால்வலிக்கக் கூத்தாடி நிற்பவரொரு முகூர்த்தஞ் சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல் கையசையாமல் காலெழாமல் ஓசை தெரியாமல் அலையடித்தோய்ந்த கடல்போல நினைந்து தன்னை மறந்திருப்பர். தன் நினைவு வந்து பரவசந் தெளிந்து ஈசனைப் பணிந்துகொண்டு வந்த பணிவிடை செலுத்தக் கோவிலார் கேட்கக் கும்பிடு போட்டுச் சொல்லுவார்.

—கோபாலகிருஷ்ணபாரதியார்.

## 50வருட அறுவடையும் போதாது!

சதுரங்கம் என்ற விளையாட்டை முதன்முதலில் கண்டு பிடித்த இந்திய கணிதமேதை அதை மஹாராசாவிடம் கொண்டுபோய்க்காட்டினார். மஹாராசாவுக்கு மிகவும் சந்தோஷம். 'வேண்டிய திரவியத்தைக் கேள்' என்று ஆக்ஞாபித்தார். அதற்கு அந்த நிபுணன், 'மஹாராஜ்! இந்த சதுரங்கப் பலகையின்முதலாவது சதுரத்தில் ஒரு நெல்மணியும், இரண்டாவதில் இரண்டும், மூன்றாவதில் நான்கும், நான்காவதில் எட்டும் இப்படியேஒவ்வொருசதுரத்திலும் முந்தினதைவிட இரட்டிப்பானநெல்வைத்து இந்தப்பலகையை நிரப்பித்தந்தால் போதும்' என்றான். மஹாராசா 'பூ, இவ்வளவுதானா? என்று பரிகசித்துவிட்டு ஒரு படி நெல் கொண்டுவரும்படி கட்டளையிட்டு நிபுணன் சொன்னபடி வைக்கத் தொடங்கினார், ஐந்தாவது சதுரத்தில் 16, ஆறாவதில் 32, ஏழாவதில் 64... பதினைந்தாவதில் பத்தாயிரத்துக்குமேல் தேவைப்பட்டது. ஒரு மூடை நெல் வந்தது! அதையும் வைத்தார் அரசர். தேறவில்லை. தன் கணித விற்பன்னர்களை அழைத்து 64 சதுரங்களையும் நிரப்ப எவ்வளவு நெல்தேவைப்படுமென்று கணக்குப் பார்க்கச்சொன்னார். அடுத்த 50 வருடங்களுக்கு இந்தியா முழுவதிலும் விளையும் நெல் அத்தனையும் தேவைப்படும் என்றார்கள். கணித மேதை தன்னை ஏளனம் செய்துவிட்டானென்று நினைத்த மஹாராசா அவனுக்கு பரிசில் வழங்க மறுத்ததோடல்லாமல். கூட ஓர் அபராதமும் விதித்தாராம்!

## 'கொலைக்ஞானம்'

வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோ சாதியினருக்கு ஓநாய்கள் பரமவிரோதிகள். 'அவற்றை சுட்டுக் கொல்வதற்கு அவர்களிடத்தில் துப்பாக்கிகள் இல்லை. கிட்ட நெருங்கிப்போய் கத்தியால் குத்துவதென்பது முடியாத காரியம். ஓநாய்கள் மனிதருக்குப் பயப்படாத பொல்லாத மிருகங்கள். எனவே சூழ்ச்சியால்தான் அவற்றைக் கொல்ல வேண்டும்.

கத்திகளில் கடற்குதிரையின் கொழுப்பைப்பூசி கூர்ப்பக்கம்மேலேதெரியும்படி நிலத்துள் புதைத்து விடுவார்கள். கொழுப்பின் மணத்துக்கு ஓநாய் வந்து கத்திக் கூரை நக்கும், பீறிட்டுவரும் தன் சொந்த ரத்தத்தை தானே குடித்து அதில் வெறி கொள்ளும். கடைசியில் ரத்தப் பெருக்காலேயே சுருண்டு விழுந்துவிடும். இனி அதைக் கொல்வது இலேசு.

திமிங்கிலத்தின் எலும்பை ஊசிமுனைகள் போல இரண்டுபக்கமும் நன்றாக சீவி எடுப்பார்கள். இப்பொழுது அதை மெல்லிய கம்பியை சுருட்டுவது போல பந்து வடிவாக்கலாம். இதன்மேலே கட்டிக் கொழுப்பை சுற்றவரப்பூசி ஓநாய் உலாவும் இடத்தில் வைத்து விடுவார்கள். ஓநாய் அதை அப்படியே முழுசாக விழுங்கிவிடும். அதன் வயிற்றுச் சூட்டுக்கு கொழுப்பு கரைந்தவுடனே எலும்பு 'படார்' என்று நீண்டு விரியும். அப்பொழுது ஓநாயின் குடலும் அறுபட்டுவிடும்.

# குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தரோகங்களும் வைத்தியமும்

[குழந்தைகளைப் பெறுவது மட்டுமல்ல, குழந்தைகளைப் பேணுவதும் தாய்மாரின் கடன். சேய் சுகம்பெறத் தாய் தன் வாயைக் கட்ட வேண்டும் இது முன்னோர் அனுபவத்தில் கண்ட உண்மை. குழந்தைகளுக்கு மாந்தம் என்ற வியாதி தாயுண்ணும் உணவினாலேதான் உண்டாகின்றதென்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. இது அன்னையர்களுக்கு அரிய உதவி புரியுமென்று நம்புகின்றோம் ]

'வயிற்றைக் கட்டினவளுக்குப் பணம் சேரும். வாயைக் கட்டினவளுக்குப் பிள்ளை தங்கும். என்று உலகத்தார் சொல்வார்கள்- அதை ஊன்றிப் பார்த்தால் உண்மை தெரியவரும். வீட்டில் பெண்பிள்ளைகள் குடித்தனப்பாங்கில் சிக்கனமாகச் செலவு செய்தால் புருஷன் வருவாயில் கொஞ்சம் மிச்சமாகும். அதுபோல்பிள்ளை சுகமாக இருக்க வேண்டுமானால் பால்கொடுக்கும் தாய்மார்கள் எருமைப்பால், விசேஷ நெய் சேர்ந்த பண்டு பலாதிகள், வாழைப்பழம், தேங்காய், இளநீர், கடலை, பருப்பு, வெல்லம், புளித்த மோர், மாமிசம், மாம்பழம், பலாப்பழம், உழுத்தம் வடை, மீன் வகைகளில் உளுவை, வாழை மீன், கெண்டை முதலிய வாய்வு தரத்தக்கவை, பாற்ககாய். சுரைக்காய் முதலிய வாய்வுப் பதார்த்தங்கள் இவற்றைச் சாப்பிடாமல் இருத்தல் வேண்டும். கண்டபடியே தின்று குழந்தைக்குப் பால் கொடுத்தால் குழந்தைக்குப் மாந்தம் உண்டாகும். அந்த மாந்தம் வாதமாந்தம். பித்தமாந்தம். சிலேஷ்ம மாந்தம், விஷமாந்தம், போர்மாந்தம், வாலை மாந்தம், சுரமாந்தம், நீர் மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், எரிமாந்தம், மலைமாந்தம், கணமாந்தம், வலிப்புமாந்தம், சுழிப்பு மாந்தம். துளை மாந்தம், முக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊதுமாந்தம், வீக்க மாந்தம். என இருபதுவகை மாந்தரோகங்கள் குழந்தைகட்கு நேரிடும்.

### மாந்தகுணம்

மாந்தரோகம் குழந்தைகளுக்குப்பால் கொடுக்கும் தாயின் முலைப்பாலால் உண்டாகிறது. மாந்தவியாதியால் கஷ்டப்படும் குழந்தைகள் முலை உண்ணாது வாந்தி எடுக்கும், மயக்கம் உண்டாகும். உடல் சூடேறும், வியர்க்கும், சீதமும் மலமும் முறிந்து போன பால்போலும் தெளிந்தநீர் போலும் பேதியாகும். மலம் நாறும், கைகால் நடுக்கமுறும், நாக்கு உலரும், குரல் கமறும், கண்கள் சுழலும் சிவக்கும் கால்கள் பின்னும் முகம் மினுமினுப்பாயிருக்கும்.

மாந்தத்தால் உண்டாகும் பேதியானது மாவு கரைத்ததுபோல் மந்தமாயும் புளித்த வாசனையோடும் படபட என்கின்ற சப்தத்தோடும் வெளிப்படும். அத்தகைய பேதி உண்டாவதற்கு அளவுகடந்த ஆகாரம் கொடுப்பதும் கடினபதார்த்தங்களைக் குழந்தைகளுக்கு உண்ணச் செய்வதும் புளித்த பாலைக் குடிக்க வைப்பதும் உஷ்ண பதார்த்தங்களைக் கொடுப்பதும் பாலைச் சுண்டக்காய்ச்சிக் குடிக்கவைப்பதும் ஆகிய இவை காரணம் எனலாம். சில குழந்தைகளுக்கு ரயில், கார், பஸ்வண்டி பிரயாணத்தால் உடம்பு அலண்டு உஷ்ணம் அதிகரித்து மந்தம் உண்டாகும். குழந்தைகளுக்கு வாழைப்பழமும் மாம்பழமுமே மந்தத்தை உண்டாக்கும் பால் கொடுக்கும் தாய்மார்கள் குழந்தைகட்குச் சரியான வலிவு வருகிறவரைக்கும் வாழை, மா முதலிய மந்த பதார்த்தங்கள் சேர்க்காமல் இருந்தாலே போதும். இத்தகைய அபத்தியத்தால் ஏற்படும் பேதிக்கு மலம்போகும்படியான அவுடதங்களையே கொடுத்தல் வேண்டும். பேதியைக் கட்ட மருந்து கொடுத்தால் சுரம்காணும். சுரம் அதிகரித்தால் குரல்வளை புண்பட்டுச் சளி கட்டும். சளி அதிகப்பட்டால் சுவாசிக்கும் காற்று சுவாசப்பையில் சென்று திரும்பாமல் இரண்டு விலாக்களிலும் சென்று வெளிப்படும் இதை அள்ளு மாந்தம் என்பார்கள்.

இந்த மாந்த சுரத்தை மேல்நாட்டு வைத்திய சிகிச்சை செய்வோர் பிராங்கோ நியூமோனியா என்று அதற்கு ஒத்தடம் முதலியன கொடுப்பார்கள்

ஆயுள்வேத முறையில் நேர்வாளம் சேர்ந்த மருந்தையே கொடுக்கும்படி சொல்லியிருக்கிறது. பூரம் சேர்ந்த மருந்து ரொம்ப மேலானது. பேதி நன்றாய் ஆனால்தான் மார்சளிகரையும். மாந்தச் சுரத்தில் சில குழந்தைகளுக்குச் சளி சேர்ந்து சுரம் அடிக்கும் காலத்தில் பேதியும் ஆகும். இந்தச் சமயத்தில் பேதியாகும் மருந்தைக்கொடுப்பது ஆபத்துக் கிடந்தரும் அத்தகைய குழந்தைகளுக்கு கஸ்தூரி மெழுகு லிங்கசெந்தூரம், அன்னபேதி செந்தூரம் முதலியன கொடுக்கலாம்.

— டாக்டர் ஐ. பாலசுப்பிரமணியம் —

## பிறக்க வேண்டும்

— கல்வயல் வே. குமாரசாமி —

சொல்லுக்குப் புதுமை செய்த
சுதந்திரச் சிற்பியான
வல்லவன் ஒருவன் பேரால்
வாழ்வியல் நெறியில் நின்று
சில்லறைச் சேட்டை செய்யும்
சிறியவர் செய்கை யாலே
நல்லதை அறியமாட்டா
நபுஞ்சகம் வளர்கு தையோ.

கொடுமைக்குள் மூழ்கி ஞானக்
குளுமைக்குள் உணர்வைத் தேக்கும்
கெடுபிடி அற்ற நல்ல
கிறுங்கிய இதயம் மிக்கோர்
தொடும் புதுப்பாதை யெல்லாம்
தொடர்ந்திட உலகம் என்றே
நடம் பயில் கூர்மைவார்த்தை
நமக் கெலாம் வேண்டும் தன்மை

படர்ந்திடப் பாடல் செய்யும்
பாவலர் பிறக்கவேண்டும்
விடும்விடும் என்று சொல்லி
விரைந்திடும் இளைஞர் கூட்டம்
நெடும்பணி தொடரச் செய்ய
நினைவையே அர்ப்பணிக்கும்
புடமிட்ட செய்கை காணப்
புறப்படும் கவிஞர் வேண்டும்.

## சூப்பர் கார்

உலகிலேயே மிகவிலை உயர்ந்த கார் என்று ஒன்று பாரிஸில் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. அதன்விலை 300,000 பிராங்குகள், அதாவது 54500 டாலர்கள். மெர்சிடஸ்-600 என்று அதற்குப் பெயர். 8 சிலிண்டர் கொண்ட 300 குதிரைத்திறன் என்ஜினுடன் கூடிய அந்தக்கார் 205 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது (மணிக்கு 130 மைல்கள்) இதுவரை இந்த வகைக்கார்கள் 18விற்பனையாகியுள்ளதாம் பாரிஸ்-மாட்ச் சஞ்சிகை தரும் தகவலின்படி இக்காரை இதுகாறும் வாங்கியுள்ளவர்கள் போப், சவுதி அரேபிய மன்னர், மொரோக்கோ அரசர், இரான் மன்னர் ஆகியோர்.

## வியாபார விருத்தி

ஒரு பெரிய வியாபார ஸ்தாபனத்துக்கு புதிய மனேஜர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு முதலாளி-தொழிலாளி கூட்டுறவில் நிரம்பிய நம்பிக்கை. வந்த முதல்நாளே எல்லா ஊழியர்களையும் ஒருகூட்டத்துக்கு அழைத்தார். நண்பர்களே! இது என் கடையுமல்ல, உங்கள் கடையுமல்ல, இது எங்கள் எல்லோருக்கும் சொந்தமான 'பொதுக்கடை' என்று பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

'ரொம்ப நல்லது. அப்படியானால்எல்லோருமாகச் சேர்ந்து இதை விற்றுப்போடுவோம்' என்று பின் வரிசையில் ஒரு குரல் கேட்டது.

தயாரிப்பு: — வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை அரங்கம்

தயாரிப்பு: 'மேகலா'

கே. எம். வாசகரின்

# புரோக்கர் கந்தையா

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிலோன் சேவா ஸ்டேஜ்; மணிபல்லவ கலைமன்றத்துடன் இணைந்து தயாரித்த கே. எம். வாசகரின் 'புரோக்கர் கந்தையா' என்ற நாடகம் நடைபெற்றது. நீண்டநாட்களின் பின்னர் மண்டபம் நிறைய ரசிகர் கூட்டத்துடன் இந்த நாடகம் நடத்தது.

## நாடக விமர்சனம்

கொழும்பிலேவாடகைக்கு இருக்கும் யாழ்ப்பாணத்துப் பையன்களைப் பின்னணியாகக்கொண்டது. முன்அறையில் தங்கியுள்ள டாக்டருக்குப் படிக்கும் சுரேஷ் அந்த வீட்டுக்காரர் இராமலிங்கத்தின் மகள் கௌரியுடன் விகற்பமில்லாமல்நெருங்கிப் பழகுகிறான். அவள்அதைத் 'தவறு'கப் புரிந்துகொண்டு சுரேஷ் தன்னைக் காதலிப்பதாக நம்பி இறுதியில்ஏமாற்றம் அடைகிறாள். இடையிடையே யாழ்ப்பாணத்துச் 'சுருட்டுப் பகடி'களுடன் 'புரோக்கர் கந்தரோடைக் கந்தையா' வந்துபோகிறார். வழக்கமான ஒரு 'புரோக்கர்' கதைதான். கதையில் புதுமையையோ அல்லது ஆழமான சமூக உணர்வையோ எதிர்பார்த்தவர்களுக்கு மாபெரும்ஏமாற்றம். என்றாலும் வெறும்பொழுதுபோக்கவிரும்பும் இரசிகர்களுக்கு இது மிகப் பொருத்தமான கதையாகும்.

இந்தநாடகத்தில் மிகவும் சிறப்பாகச் சொல்லக்கூடியது காட்சியமைப்பு எனலாம். ஒரே மேடையில் இராமலிங்கத்தின் குடும்பத்தில் நடக்கக்கூடியதையும், வாடகைக்கு இருப்பவர்களின் அறையில் நடக்கக்கூடியதையும் மாற்றி மாற்றிக் காட்டக்கூடியதாக மிகவும் சிக்கனமாகவும் சிறப்பாகவும் காட்சிகளை அமைத்திருந்த 'பத்மாஸ்' பாராட்டுக்குரியவர். சம்பவம் நடைபெறும் இடத்திற்கு மாத்திரம் 'ஒளி'யைக் கொடுத்து ஒளியமைப்பையும் சிறப்பாக்கிய பராக்கிரமாஸ் பாராட்டுக்குரியவர். தமிழ் நாடகங்களில் இவ்வளவு சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்சி அமைப்புகள் இடம்பெறுவது குறைவு.

பாத்திரங்களையும் நடிகர்களையும் ஒப்பிட்டு நோக்குகையில் ஒவ்வொருவரும்தங்கள் பாத்திரங்களைச்சோடை போகாமல் சிறப்பாகவே செய்துள்ளார்கள். குறிப்பாக கௌரியாக நடித்த ஆமினாபேகம், புரோக்கராகவந்த டி. ராஜகோபால், சுரேஷ் ஆக நடித்த பத்மநாதன், இராமலிங்கமாக வந்த ராம்தாஸ் ஆகியோரின் பாத்திரங்கள் நெஞ்சில் நிற்கின்றன.

'என்ரை சுருட்டைக்குடிச்சுப் பாத்தவைக்குத்தான் தெரியும் அருமை ...' என்று சொல்லும் ராஜகோபால் அசல் யாழ்ப்பாணத்துத் தரகராகவே ஆமாறிவிட்டார்.

ஒருகட்டத்தில் ராஜகோபால் பழைய கம்பராமாயண நாடகமொன்றைநடித்தும் பாடியும் காண்பிக்கையில் வரதனாக வந்த செல்வசேகரன் தலையணைமடியில் வைத்துச் 'சர்ப்பணுவீணை' வாசிப்பது அருமையாகவும் இயல்பாகவும் இருக்கிறது. பலஇடங்களில்நகைச்சுவைக் கட்டங்கள் சுவையாக இருந்தன. நாடகாசிரியனாகவரும் கே. சந்திரசேகரன் (ராதா சொல்லும் பல கருத்துக்கள் இன்றைய தமிழ்நாடக உலகிற்குப் பயனுள்ளவையாக அமையும். இன்ஸ்பெக்டராக வந்தவர்தான் சில இடங்களில் இயல்பை மீறி (கண்டிப்பாக) நடிக்கிறார். மற்ற அனைவரும் மிகமிக இயல்பாகச் செய்து அமைதியாக இயக்கத்துடன் நாடகத்தை இழுத்துச் சென்றார்கள்.

**ஒப்பனை:**

சாதாரணமாக எல்லோருக்கும் பொருத்தமான ஒப்பனைதான். புரோக்கருக்கு வழமையான குடுமி, குடையாவும் இருந்தன. கஸ்டம்ஸ் உத்தியோகத்தரும் காசிறேஸ் விளையாட்டுக்காரருமான இராமலிங்கம் சாதாரணமாக தன்வீட்டில் இருக்கும்போது ஒருதடவை பட்டு வேட்டியுடன் காணப்படுகிறார். இதுகொஞ்சம் அதிகம். ஒரு சாதாரண வேட்டி உடுத்திருந்தால் அக்காட்சி சிறப்பாக அமைந்திருக்கும்.


பொருத்தமான இடங்களில் சிறிய குமிழ்மைக்குகளை வைத்து மிகவும் சிறப்பாக ஒலியமைத்தவர்கள் 'பராக்கிரமாஸ்'. நடிகர்களின் இயக்கத்திற்கு இசைவான இடங்களில் மைக் பொருத்தப்பட்டு மிகவும் தெளிவான முறையில் சப்தம் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது.

மொத்தத்தில்—

புரோக்கர் கந்தையாமிகச் சிறந்த ஒரு பொழுதுபோக்கு நாடகம்.

— நெல்லை க. பேரன்

# இறைவன் புகழ்பாடும் இசைக்கலைஞர் இராசையா



பண்ணின் இசையாகி நிற்கும் இறைவனின் புகழ்தனை நாளும் பாடிப் பணிசெய்து வாழ்பவர், தேவார ஆசிரியர் தாவடி திரு எஸ். இராசையா அவர்கள். இப்போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் தேவார ஆசிரியராகப் பணி புரிந்து வருகின்றார்.

பால்ய வயதில் இருந்தே பண்களைத் தன்னிரு கண்களெனப் போற்றி வருபவர். பண்முறை பிறழவும், சின்னாபின்னமாகவும் சுவை கெடப் பாடுவதை அடியோடு மறுக்கும் பான்மையைக்கொண்ட இவர் கட்டளை முறைப்படி திருமுறையையோதுதல் வேண்டும் என்ற கொள்கையையுடையவராவார்.

இளமைப் பருவத்திலே நாடகத்துறையிலும் ஈடுபாடு கொண்டதுடன் இந்தியாவைச் சேர்ந்த சங்கீத வித்வான் ஒருவரிடம் பண்முறை கற்க ஆரம்பித்துப் பின்னர் காலஞ்சென்ற பண்ணிசைவல்லார் குப்பிளான் செல்லத்துரையுடன் சேர்ந்து பண்ணிசைக் கச்சேரிகள் செய்தும் வந்தார்.

அதன்பின்னர் தென்னிந்திய பிரபல முகவீணை வித்வான் நெல்லை திரு. எஸ். எஸ் ரெங்கப்பா அவர்களிடம் இசை நுணுக்கங்களையும் கற்றார். அத்துடன் 'சுரலய இசை வள்ளல்' சிதம்பரம் மு. கனகசபை பிள்ளை ஓதுவாரிடம் பண்இசையில் விசேஷ பயிற்சியும் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அதிபர் இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், தேவார ஆசிரியர் திரு சுப்பிரமணிய முதலியார், சிதம்பரம் தேவார பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். இராமலிங்க ஓதுவாமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பண்முறையாகத் திருமுறை நல்லிசையைப் பாடிப் பாராட்டுக்களையும் நற்சான்றிதழ்களையும் பெற்ற பெருமையுடையவர் திரு. இராசையா.

-ஏ. என்.

## நாடகக் கதம்பம்

இம்மாதம் 28-ந் திகதி பிற்பகல் 6 மணிக்கு ஹவ்லொக்டவுன் - லும்பினி அரங்கில் மு. கனகராசன் தயாரித்தளிக்கும் நாடகக் கதம்பம் நடைபெறவுள்ளது. மதுரம் பதிப்பக நிதிக்காக நடைபெறும் இக்கதம்பத்திற்கான தயாரிப்பு வேலைகள் யாவும் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

(வெள். நிரு.)

## ராமன்தேடிய சீதைக்கு மூன்று லட்சம்

'ராமன் தேடிய சீதை' படத்தின் படப்பிடிப்புகாஷ்மீரில் நடந்தது. ஜெயந்தி பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் காஷ்மீரில் 12 நாட்கள் நடந்த படப்பிடிப்புக்கு மட்டும் 3 லட்சம்ரூபா செலவாகியுள்ளது எனக் குறிப்பிடுகிறார், தயாரிப்பாளர் கனகசபை.

எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள்.

# மக்கள் திலகம் எம். ஜி. ஆர் மீது அபாண்டப் பழியா?

## துடி துடிக்கிறார் அவர் ரசிகர்



இலங்கை ரசிகர்கள் மீது அளவில்லாத பற்று வைத்திருக்கும் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மீது அபாண்ட பழியா?

இப்படித் துடிதுடித்து ஓடோடி வந்து கேள்விக்கணை தொடுத்தார் 'யாழ். எம். ஜி. ஆர்.' என்ற சுந்தரலிங்கம்.

சில வாரங்களுக்கு முன்னர் 'கலையரங்கம்' பகுதியில் வெளியான எம். ஜி. ஆர். பற்றிய செய்தியைப் படித்துவிட்டே இவர் இப்படித் துடிதுடித்தார்.

'இலங்கை ரசிகர்களிடம் எம். ஜி, ஆர். இரக்கம் காட்ட மறுத்துவிட்டாராம்' என்ற செய்தி இப்பகுதியில் வெளியானது வாசகர்கள் நினைவிலிருந்து நீங்கியிருக்கமாட்டாது.

''உண்மையில் அவர்கள் எம் ஜி. ஆர். ரசிகர்களாக இருக்கமாட்டார்கள். எம். ஜி. ஆர். மீது பழிசுமத்தி அவர் செல்வாக்கை இலங்கையில் குறைக்கவேண்டுமென்பதற்காக இப்படி ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அத்துடன் 'முழுப்பூசினிக்காய் ஒன்றையும் சோற்றில் புதைக்கும்' முயற்சியில் இறங்கிப் படுதோல்வி அடைந்திருக்கிறார்கள். இவர்கள் சந்திக்கப் போனசமயத்தில் எம். ஜி. ஆர். தனது 'உலகம் சுற்றும் வாலிப'னுக்காக வெளிநாட்டில் படம்பிடித்துக் கொண்டிருந்தார். இப்படிக் கூறினார், எம். ஜி. ஆரைச் சந்தித்த இந்த யாழ், எம், ஜி. ஆர்!

இவர் ஒரு எம், ஜி. ஆர். தாசன். தமிழ்நாடு சென்று துப்பாக்கிக் காயத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்று குணமான சமயத்தில் அவரது சுகத்தை நேரில் சென்று அறிந்து மனம்விட்டு பழகியவர்.

''ரசிகர்கள்மீது அவர் உயிரையே வைத்திருக்கிறார், அத்துடன் அவர் சிவாஜிகணேசன்போல் நடிப்பைமட்டும் தொழிலாகக் கொண்டவரல்ல. அவர் ஒரு தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவர். கட்சியின் உறுப்பினர். பல கழகங்கள் இயக்கங்களில் அங்கம் வகிப்பவர். சமூகத் தொண்டன். இப்படியானவர் வீட்டில் எந்நேரமும் இருப்பாரா? அவர் இல்லத்திலோ ஸ்ருடியோவிலோ இருந்தால். அவரைச் சந்திக்காமல் இருந்திருக்க முடியாது'' என்று [illegible] யாழ். எம். ஜி. ஆர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 10. கடவுளைக்காண வைத்தாள்!

மனைவிமக்கள் உள்ளவரும் அவர்க்கும் மேலாய்
மதிக்கின்றார் தொடர்கின்றார் நச்சி தன்னை!
எனின் இவ்வா றிணைந்திருத்தல் காமம் என்னும்
இச்சையது தூண்டலிலா? இல்லை! ஆன்மா
தனிலுலவும் கிளர்வதனால்! அதுபோல் நானும்
தக்கஉயிர் மகிழ்விற்காய் அவரைச் சார
நினைக்கின்றேன்! ஆணாகப் பிறந்தி ருந்தால்
நிறைவேறத் தடையுண்டோ வென்றன்ஆசை?

ஆணாகப் பிறந்திருந்தால் அவரின் பின்னே
ஆனந்தந் தினம்மாந்தித் திரிவேன்! அன்றி
நாணமல் கேள்விக்குப் பதில்கூ றியே
நல்லன்பாய் எனைக்கூட்டித் திரிவர்! வாழ்வு
வீணாகா தோர்நொடியும் வளர்ப்பே னின்பம்
வெள்ளமென! கோயில்குளம் மடங்கள் சென்று!
மாறாத பெண்பிறவி ஆனாலும் நான்
மனங்கட்டிப் பழகியவர் ஏற்பா ரன்றோ?

கண்காணுந் தெய்வத்தைத் துணையாய்க் கொண்டு
கண்காணாத் தெய்வத்தைக் காணல் வேண்டும்!
'பெண்காணும்! பழகிட்டால் பாழே?' என்று
பேயாக அவரென்னை விலக்கல் கூடும்!
மண்காணும் கெட்டானாய்த் தன்னை என்று
மலரடியில் ஏற்கஅவர் மறுத்தல் கூடும்!
விண்காணும் வழியெனக்கு மறுக்கப் பட்டால்
வேதனையே இப்பிறவி! விடிவே இல்லை!

என்னுடம்பின் ஊனுணர்வைச் சுவைத்தல் வேண்டி
எனைமணக்க எண்ணுமொரு ஆசை நெஞ்சு!
பொன்பொருளைச் சீதனமாய்ச் சுருட்ட எண்ணி
பூட்டவரும் விலங்கைஒரு விலங்கு! வாழ்வில்
தென்படைந்தே ஆளணிகள் சுற்றங் கூட்ட
தேடிமணம் பேசிவரும் இன்னோர் சீவன்!
என்பிறவிப் பிணியகற்றி மேம்பா டுய்க்க
எண்ணிஎவர் வந்திடுவர்? நச்சி காப்பீர்!

பசிமிகுந்த ஆன்மாவின் பதைப்பே நெஞ்சின்
பதைப்பாகக் கவன்றிருக்கும் கொடியோ தெய்வ
இசைமிழற்றும் வன்மையிலே ஒப்பா ரில்லாள்!
இறையுணர்தே வாரந்திரு வாச கங்கள்
கசிந்துருகிப் பாடுகின்ற வன்மை பெற்றாள்!
காலைதொறும் மாலைதொறும் வீட்டில் தன்னின்
வசமிழந்து சாமியறை தன்னுள் ஈசன்
வணங்கிவிழி நீர்சொரிந்து பாடு கின்றாள்!

அன்றொருவெள் ளிக்கிழமை அந்தி நேரம்
அமர்ந்துதலை யாரிஅறை நச்சிவேலை
ஒன்றியிருக் கையில்பக்க அறையில் தண்ணென்
ஓசையிலே உள்ளுருக்கி உணர்வை அள்ளி
தென்றலெனத் தீங்குரலொன் றிசைக்கும் தெய்வத்
தெள்ளமுதப் பாடல்ஒன்றை! அந்தப் பாட்டை
இன்றுவரை இப்படியார் பாடி யுள்ளார்?
என்றுநினைந் தொன்றுகிறான் கேட்கும் பாட்டில்

'குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் கண்முன் வந்தான்
வெந்தணலின் மேனியெலாம் நீற்றுக் கோலம்!
சுள்ளியிட்ட ஓமகுண்டப் புகையே எங்கும்
சூழ்ந்துமணம் வீசஅவன் சிரித்து நின்றான்!
உள்ளுருக்கம் பெற்றவனாய் நச்சி 'இன்றே
ஓகோநான் கண்குளிரக் கண்டேன்!' என்று
கொள்ளைவெறிக் குரல்நடுங்கக் கத்தி விட்டான்
கொடிவியந்து வந்தெட்டிப் பார்த்து நின்றாள்.

விலங்குகளும் மெய்மறக்கும் இசையில் என்றால்
வெறும்மனிதர் கூடஅதில் மகிழ்வர் என்றால்
துலங்கிறைவன் சுடரேறும் நெஞ்சர் நச்சி
சுவைப்பதிலே வியப்புண்டோ? இறைவன் தன்னில்
கலந்திடவே கண்குளிரக் கண்டு துள்ளக்
காலரனேன் நானென்ற மகிழ்வே போதும்!
கலங்கண்டேன் துயர்க்கடலில் சிக்கி நொந்தேன்
கரையென்றும் நச்சிஅருள் அடையும் வண்ணம்.

(வளரும்)

மாவைக் கோவிலின் கோபுரதீபமாகப் பிரகாசித்த இருபெரும் தமிழ்ப் புலவர்களாலும் மாவிட்டபுரம் தமிழ்கூறுநல்லுலகெங்கும் புகழ் பெற்றிருக்கிறது. (இவர்கள் காலத்தில் மாவிட்டபுரம் கிராம எல்லைக்குள் வாழ்ந்தார்கள். ஒருவர், பண்டிதர் வே. மகாலிங்கசிவம். மற்றவர் 'மாவைக் கவுணியன்' 'வெண்ணைக் கண்ணனார்' பண்டிதர் சு. நவநீதகிருஷ்ண பாரதியார். தமிழ் உலகம் இருபேரையும் நன்கு அறியுமாதலால் அவர் தம் புலமையையும் பெருமையையும் இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. பாரதி ஐயர் இவ்வூரில் வாழ்ந்த காலத்தில் தீவிர காந்திபக்தராக விருந்து கதர் இயக்கமும் காந்திநெறியும் பரப்பியதை இவ்வூரவர்கள் மறக்கமாட்டார்கள். சிவத்துக்குகிழக்கு வாசல் குடியிருப்பு. ஐயர் வீடு கோவிலுக்கு வடக்கே பெருந்தெருவில். தமிழை வென்று கட்டியாண்ட இருபெரும்புலவர்களும் இவ்வூரில் பிறக்காதிருந்தாலும் தமிழின் பேரால் நாட்டிய இவ்விரு பூம்பொழில்களிலிருந்தும் வீசிய தமிழ்த்தென்றல் இவ்வூரிலேயே இளம் (தென்றல) கவிஞர்களையும் எழுத்தாளர்களையும். இவர்களுக்குப் பின் தோற்றுவித்திருக்கிறது. சச்சி மாஸ்டர் என இலக்கிய நண்பர்களால் செல்லமாக அழைக்கப்படும் பண்டிதர் க. சச்சிதானந்தன் (பி. ஏ.) புலவர் பார்வதிநாதசிவம், த. சண்முகசுந்தரம் (பி. ஏ.) இ. சுந்தரராஜசர்மா, மாவை நித்தியானந்தன் என்போர் இன்றைய எழுத்துலகுக்கு அறிமுகமானவர்கள். செல்வக்குருக்களின் புதல்வர் பாலசுந்தரக்குருக்கள் சமஸ்கிருதத்தில் பட்டம் பெற்ற ஆசிரியர். அவரது தகப்பனாரே சமஸ்கிருதத்தில் நல்ல படிப்பாளி. யாத்திரைப்பாதை குடியிருப்பில் குழந்தைவேல் புதல்வர் புண்ணியமூர்த்தி (ஆசிரியர்) அவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் நூற்றுக்கு ஒரு நல்ல படிப்பாளியாகச் சுடர்விட்டார். பாரதிஐயர் வீட்டுக்குப் பக்கத்தே குடியிருக்கும் ஓர் இளம்நாதசுரக்காரரே பத்திரிகைகளுக்குச் செய்திஎழுதும் நிருபராகியிருக்கிறாரென்றால் அதுவும் பாரதியாரின் பூம்பொழில் காற்று அவர் வீட்டுப்பக்கம் வீசிய தனாலாக இருக்கலாம். தமிழரசுக்கட்சியின் ஆதி முதல்

# முருகனுக்கு வாரிவழங்கும் பக்திக்

# அறிஞர்கள், உருவாக்கிய

அயலவர் கேட்டதற்கு "நான் அந்தச் சம்பந்தன் இல்லை. என்னிடம் கேட்கிறீர்களே. அந்தக்காலத்தில் ஆகமவிதிகளைப் பற்றி யார் பேசினார்கள்! சமணம், பௌத்தம் போன்றவேற்று மதத்தினரின் கண்டனங்களுக்கு அஞ்சித்தானே சைவநாயன்மார்கள் வேள்விப்பலி நடந்து கொண்டிருந்த முருகன் தலங்களைப் பாடாதொழித்தனர். அதுமாதிரி இன்னும் என்

னென்ன பிறமதத்தவரின் தூற்றுதலுக்கு அஞ்சினார்களோ" என்று கூறி மழுப்பினாற்போல விடை அளித்துத் தப்பிக் கொண்டதும், ஆகிய இவையெல்லாம் பெரிய குருக்களின் புதல்வர் சாமி ஐயர் என்றழைக்கப்படும் சண்முகநாதக்குருக்கள் கோவில்குருக்கள் ஆனதன்பின் சம்பவித்த புதிய மாறுதல்களில் குறிப்பிடத்தக்க சில. இவற்றுடன், கோவில் கிழக்கு வாசலிலே விசேடநிகழ்ச்சியாக நடத்தப்பட்ட கந்தபுராண பெரியபுராண தொடர்உபந்நியாசங்களையும் குறிப்பிட வேண்டும். பெரிய குருக்களின் மற்றொரு புதல்வர்-சுந்தரமூர்த்தி ஐயர் பி. ஏ. மகாஜனகல்லூரிஆசிரியராக விருக்கிறார். கோவில் சிற்பாசாரி பெரியசாமி கல்லிலே கலைவடித்துப் படைத்த பெரிய பெருமாள் இருந்த இடத்தில் இருக்கமாட்டாமல் ஊரெல்லாம் சுற்றிக் கொண்டு பொன்னாலைப்பதி ஏகியதும் இங்கிருந்தே.

அதோ சைக்கிளில் பறக்கிறார்களே, ஒருவர் இராசா

லதையும் கோவிலையும் சைவாகமங்களையும் காப்பாற்றும் கொள்கையை முன்வைத்து ஒருவர் தேர்தல் களத்தில் குதித்தார். அந்நாட்களில் ஒருதினம் தமிழரசுக்கட்சியின்பிரமாண்டமானதொரு ஊர்வலமும் அதையடுத்து பகிரங்கக்கூட்டமும் கோவிலுக்கு மிக அணித்தாகநடைபெற்றது. அதுசமயம்என்ன சம்பவித்தது தெரியுமா? கூட்டம் கூடியவர்களுக்கு ஒருவாய் பச்சைத் தண்ணீர்

# திரைகடலோடித் திரவிய

# தேடிக் கட்டிய சத்திரம்

கூடக்கிடைக்காதபடி கோவிலடிக்கடைகள் எல்லாம் அடித்து மூடப்பட்டன. கிணறுகளிலே கொடியையும் வாளியையும் கூடக் காணவில்லை. இதுதமிழரசுக் கட்சி வாலிப முன்னணிமகாநாடு கோவில்வீதியில் நடைபெற்ற நாலேநாலு ஆண்டில் கோவிலடியில் சம்பவித்த புரட்சி. சொல்லுங்கள். கோவில் கோட்டம் இவ்வூரின் இதயமாக இல்லையா?

இவ்வூர் ஒரு திரு...
லூரா இல்லையா?

0 0

### பழையநாள்

### பெரியமடம்

முச்சந்திமுன்றலில் ... வீதி, மேற்குவீதி சந்... நீண்டகன்ற ... யும் தெருவோடு கட்... மாகப் பழையநாள் ... மடம் ஒன்றிருப்...

பார்த்திருக்கிறீர்க... கடல்... ணியம் ப... தித்துறை சிதம்பரப்... யார் நூறு ஆண்டுக... முன்னதாகக்கட்டிய உள்ளே போய் அதன்... களைப் பார்த்தாலே ... பாயிருக்கும். ஒவ்வொ... அத்தனை பெரிய சுவ... பெருந்தெருவில் சரி... அகலத்தைப்பிடிக்கும். ... த்தால் சிதையாத வாய்ந்த அந்தச் சுவர்... காப்பிலும் கூரையின்

## எங்கள் கிராமம் - 5

# மாவிட்டபுரம்

அங்குரார்ப்பணக்கூட்டமே கோவிலடியில்தான் நடைபெற்றது. அது தெரியுமா உங்களுக்கு?

தெற்கு வீதியில் கோவில் காணிக்குள்ளே கம்பீரத் தோற்றத்துடனே எழுந்து நிற்கும் மாவை முத்தமிழ் மன்றம், அது நடத்தும் இசைவகுப்புகள், முத்தமிழ் ஆண்டுவிழாக்கள், மார்கழிப்பசளை 1966-ல்தெற்கு வீதியிலே மூன்று தினங்கள் கோலாகலமாகநடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி மகாநாடு, பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவிலுக்கு சுவாமி விக்கிரகங்கள் இக்கோவிலின் உபயமாக இங்கிருந்தே விழா எடுத்துக்கொண்டு செல்லப்பட்டமை தமிழ்நாட்டுப் பேராசிரியர் ஞானசம்பந்தன் இக்கோவிலிலே [illegible] "திருநீலகண்ட யாழ்ப்பாணரை கோவிலுக்குள் விட்டது சரியாகுமா?" என

ஐயர்; மற்றவர் வயலின் மணிஐயர். கோவில்வீதி தென்கிழக்குமூலைத்திருப்பதில் உள்ளதுதான் இராசா ஐயர்வீடு. ஐயாச்சாமிஐயர் வீடு என்று ஊரிலே பெயர் வழங்குகிறது. எந்நாளும் 'வலு கிளீன்'. கோவில் வீதிக்கே அழகூட்டும் அக்ரகார குடியிருப்பு, திருவிழாக் காலத்தில் நெடுங்காலமாக இவ்விடத்தில்தான் ஒரு சாது வழக்கமாக திருவிழா புத்தகக்கடையும்படக்கடையும் மணிமாலைக் கடையும் வைத்திருப்பார். பக்கத்தே குருக்கள் வீட்டுப்பிராமணப் பெண்களின் சங்குக்கழுத்துகளில் திருவிழாத்துளசிமணி மாலைகள் அடுத்த ஆண்டு கார்த்திகைத்திருவிழாவரை தவழ்ந்து புரளும்.

பல மாதங்களாகப் படிப்படியாய் சூடுபிடித்துவந்த [illegible]பட்டோர் ஆலயப் பிரவேசக் கிளர்ச்சி சென்ற தேர்தல்சமயமாக உச்சநிலை அடைந்திருந்தது. சைவத்



பீ எச் சி
நெற் பூச்சி கட்டுப்பாட்டிற்கு
பீ எச் சி 10% தூள். சிறந்தது.
பீ எச் சி 6% துணுக்குகளும்,
பீ எச் சி 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.




களைக்கொல்லி
'M-50'
'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பான இக்'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெறித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.




வங்கிகம் இ...
செலிங்கோ ஹ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...க்திக் கரங்கள் ஏராளம்! ஏராளம்!

# புலவர்களை மாவிட்டபுரம்

...ஒரு திருக்கோவி...
...ல்லையா?

0 0

...நாள்
...டம்

...திமுன்றலில்தெற்கு ...ற்குவீதி சந்திப்பில் ...கன்ற காணி ...ஙவோடு கட்டிடமு ...ழையநாள் பெரிய ...ஒன்றிருப்பதைப்

## ...வியம் ...ரெம்!

...க்கிறீர்கள்? அது ...னிபம் ...பருத் ...சிதம்பரப்பிள்ளை ...ஆண்டுகளுக்கும் ...க்கட்டிய மடம் ...பாய் அதன் சுவர் ...ர்த்தாலே திகைப் ...ம். ஒவ்வொன்றும் ...பெரிய சுவர்கள்! ...ருவில் சரிபாதி ...ப்பிடிக்கும். கால ...தையாத உறுதி ...அந்தச் சுவர்களின் ...கூரையின் நிழலி

லும் ஒதுங்கியவர்கள் எத்தனை ஆயிரம் பேரோ! அதனால் பெருமை அடைந்தது போல் ஒவ்வொன்றும் பாரியும் கர்ணனும் குமணனுமாக நெஞ்சைநிமிர்த்தி நிற்கின்றன. கப்பல் வாணிபத்தினால் யாழ்ப்பாணத்துக்கப்பால் கிழக்கிலங்கை ஊர்களிலும் புகழ் பெற்றவர்கள் சிதம்பரப்பிள்ளையும்அவரது பின்னவர்களும்.

பருத்தித்துறை சிதம்பரப்பிள்ளையார் திரைகடலோடித் திரவியம்தேடி கட்டிய சத்திரம் இவ்வாறு நூற்ருண்டுக் கதை சொன்னால், கீரிமலை யாத்திரைப்பாதையில் மேளகாரர் சமூகத்தவரான திருக்குணமலை சின்னத்தம்பியார் இவ்வூரில் குடியேறி கல்தோன்றிப் போதியளவுமண் தோன்ருத கலட்டுநிலத்தில் கல்லும் மண்ணும் அகழ்ந்து கட்டிய குடிசை அறுபதாண்டுக் கதை-பகீரதன் கதைகூறும்.

யாத்திரைப்பாதை இப்படி எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறது. எத்தனையோ பேருக்கு ஆரோக்கியமான நல்ல காற்றுவீசி வரவேற்று வாழ்க்கையின் வானவில்காட்டி மனச் சாந்தி அளித்து வாழ்வும் பேறும் ஈந்தது! எத்தனை சாதுக்கள், 'சாமி' சந்யாசிகள்! எத்தனை... மேளகாரர்!

சிவபுண்ணியப் பெரியார் யாத்திரைப் பாதையில் ஏற்றிய தீபம் இன்று ஆயிரம் விளக்காக கொடிவிட்டு நின்றெரிகிறது.

அற்புதமான நந்தா விளக்கது.

(கட்டுரையாளரும் இவ்வூரில்தான் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பிறந்து பதினைந்து ஆண்டுகள் மட்டில் வாழ்ந்தார். ஐம்பதாவதாண்டில் பிறந்த பொன்னாட்டுக்கும் எனக்குமிடையே ஐம்பது கல் இடைவெளி! ஆனால் பத்திரிகாலயம் ''மாவிட்டபுரம் உமக்கு'' என்று பணித்த மாத்திரத்தே 'நமதே ராச்சியம்' என்று சொல்லி மகிழ்ச்சியுடனே ஒப்புக்கொண்டேன். ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு குதிரைக்கு ஒரு ராச்சியம்!- என்று யாரோ ஒரு மன்னன் கூப்பாடு போட்டதுபோல என் மனமும் கூச்சலிட்டு ஆர்ப்பரிக்க, கைகள் தாமாக அசைந்தன. எழுதுகோல் ஓச்சும் நாமெல்லாம் 'இங்க்' புட்டியைத் தாவிப்பாயும் நீலவேணிக் குதிரைகள் தாமே!-மன்னர்களில்லை என்ருல்!)

### முருகன் அருள்

கோபுரம் கட்டியவர் இரங்கூன் பண்டாரம் எனப் பெயர்பெறும் காங்கேயன்துறைவாசியாம். கோவில் அர்த்தமண்டபத்துநலமான சிற்பகூடம் சம்பந்தர் உபயமாம். பூமிதானம், திருப்பணி, தர்மசத்திரம், திருவிழா உபயம், காணிக்கை, அன்னதானம், தண்ணீர்ப் பந்தல், சிரமதானம் உழைப்புதானம்-என்று முருகனுக்குவாரிவழங்கும்பக்திக் கரங்கள் ஏராளம் ஏராளம்.

இவ்வூருக்கென்று ஊரவர்களால் நெடுங்காலம்வரை சொந்தப் பாடசாலைகள் அமைக்கப்படாமலே இருந்தன. அந்நாளில் எல்லாம் கிராமத்துக்கு வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேவன்னியசிங்கத்தார் பிறந்த கொல்லங்கலட்டி ஊருக்கும் காதவழி

**அ. செ. முருகானந்தன்**

நடந்து சென்றே இவ்வூர்ச் சிருர் கல்வி கற்ருர்கள். அமெரிக்கன்மிஷன் தமிழ்ப் பாடசாலை ஒன்று ஊரின் தெற்கு எல்லைக்கு அண்மையில் இருந்தது. பிராமணப் பிள்ளைகள் அந்தப்பக்கமே நாடவில்லை. வடக்குநோக்கி காங்கேயன்துறை சென்றும் கிழக்கே ரயில்பாதை தாண்டிப்போய் வீமன்காமம் பள்ளியிலும் படித்தார்கள். அந்தப் பாடசாலையே பின்பு கோவில் பக்கமாக இடமாற்றமாகி கிழக்கு வாசலைப் பார்த்தபடி இன்றுமாவிட்டபுரம் ரயில் நிலைய வீதியில் பெரும்பகுதிகிராமத்துக்குக் கிட்டினற் போலுள்ள ஒரே ஒரு சைவப்பாடசாலையாக நிலைபெற்றிருக்கிறது. தமிழ், ஆங்கிலம் இருமொழியும் கற்பிக்கப் படுகிறது. மாவிட்டபுரம் ஊர்ப்பெண்மணி ஒருவரே பிரின்சிப்பல். அனேகமாக 40 ஆண்டு முன்னதாக இவ்வூரவர்கள் பலர் சேர்ந்து கீரிமலை யாத்திரைப்பாதையில் தொடங்கிய புதுப் பள்ளிக்கூடம் சில ஆண்டுகள் நடைபெற்றும், அரசினர் உதவி கிடைக்கப் பெருமல் பின்னர் மூடிவிடும்நிலைக்குள்ளாகிற்று. ஊரே துக்கப்பட்டது-என் ஒருவனைத்தவிர!

இவ்விதமாக, ஊருக்கு அண்மையில் நிரந்தரமாக ஒரு சைவப் பள்ளித்தலம் நெடுங்காலமாகவே இல்லாதிருந்தும்கூட, இக்கிராமம் நல்ல படிப்பாளிகளையும் சைவப் பெரியார்களையும், ஆசிரியர்களையும், புலவர்களையும், எழுத்தாளர்களையும், சங்கீத வித்துவான்களையும் மற்ற எந்த ஒருகிராமத்துக்கும் பின் நிற்காமலே நாடும்நலம்பெறபெற்றளித்துப் பெருமைப் பட்டதென்ருல்—மாவைக் கடவுளே, நின்மகிமையைஎன்னென்று வியப்பது! ஏதென்று புகழ்வது, நின்னை யாம் எப்படித்தான் அழைப்போம்! முருகா என்று அழைக்கவா, முத்துக்குமரா என்றழைக்கவா?

### எறும்புக்கு குறுணை அரிசி

வெகுகாலத்துக்கு முன் கோவிலார் சமஸ்கிருதப் பாடசாலை கூட ஒன்று நடத்திஞர்களாம். ஆங்கு கல்வி பயின்ற இவ்வூர் பாட்டியம்மா ஒருவரை அது விபரத்தை எனக்குத்தெரியப் படுத்திஞர் இந்தப்பாட்டியம்மாவுடன் கூடப்பேசில் சமஸ்கிருதம்கற்ற உடன்பிறந்தாளான இன்னொரு பாட்டியம்மா வயதானபின் நாளில் வழி நடக்கும்பாதையில் கண்ணுக்குத்தென்படும் எறும்புப் புற்றுகளைச்சுற்றிலும் அரிசி போடுவதற்காக வீட்டிலிருந்து மடிநிறைய குறுணை அரிசிஅள்ளிக்கட்டிக் கொண்டு போவார். நான் நேரில் பார்த்திருக்கிறேன். காது கேளாது. வாயைத் திறந்தால் தேன்சொட்டும் பாட்டு—பக்திப்பாடல்.

இதே தலபூமியில் தான் இவர்கள் எல்லோரும் பிறந்து வாழ்ந்து பெருமை பெற்றார்கள்.

என் ஆயுள் காலத்தில் எனக்குத் தெரிந்த மட்டில் இக்கோவிலின் குருபீடம் மூன்று தலைமுறை கண்டிருக்கிறது. இரத்தினக்குருக்கள் அவர்தம் புதல்வர் துரைசுவாமிக்குருக்கள் கடைசியாக சாமி ஐயர் என்றழைக்கப்படும் சண்முகநாதக்குருக்கள் ஆகியோரே இம்மூவருமாவர். இரத்தினக்குருக்களை கோவிலுக்கு வெளியே பார்க்கமுடியாது. வீட்டு தெருவாசலில் மாலைவேளையில் சிலசமயம் நிற்பார். கழுத்தில் உருத்திராக்க மாலையும் பூச்சும் பொட்டுமாக கையில பிரம்புடனே ஆசாரசீலராகத் தோற்றப் படுவார். பார்த்தவர்கள் வணங்காமல் போகமாட்டார்கள். இதே நிலையை சாகும்வரை காப்பாற்றிக் கொண்டார்.

1930-32ல் சிலகாலமாக வாரத்தில் ஒருநாள் வண்டிச் சவாரி நடைபெற்று வந்தது. அப்பொழுதெல்லாம் 'தச்சன் காட்டுவெளி' கிராமங்களெங்கிலும் புகழ் பெற்றிருந்தது. தச்சன் காட்டுவெளிக் கிரவல் ரோட்டில் ஊரின் மேற்

(12-ம் பக்கம் பார்க்க)



உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

...கொல்லி ...50' ...யின் ஓர் ...துப்பாடான ...கொல்லி,' ...ரை வளர்ந்தி ...தானியத்தில் ...அகன்ற ...களையும், ...புல்லையும் ...ழிக்கவல்லது.

**சுமித்தியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களைக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ் தர்' வகுப்பாடாகும்.

**'அசொட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

**களைக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




...இலங்கை லிமிட்டட்
...லிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

LANKEM
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளி ஓடிப் பள்ளி செல்

அன்புள்ள தம்பி தங்கைகளே, நீங்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று படித்து வருகிறீர்களா? நல்லது, நல்ல குழந்தைகள் சிணுங்காமல் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வார்கள். சில பிள்ளைகள் போகமாட்டேன் என்று அடம் பிடிப்பார்கள். அவர்களைப் பெற்றோர் இழுத்துக் கொண்டு போவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். ஆசிரியர்களும் அப்பிள்ளைகளைக் கண்டிப்பதைக் கண்டிருப்பீர்கள். அப்பிள்ளைகளுக்குப் படிப்பென்றாலே கசப்பு. இளமையிலே படியாத பிள்ளைகள் பிற்காலத்திலே துன்பப்படுவார்கள். முயன்று படியாதவன் மூட்டை சுமப்பான். கல்வி கல்லாதவன் கட்டை பிளப்பான். இது உண்மை, முற்றிலும் உண்மை.

எங்கள் ஊரில் சொக்கலிங்கம் என்ற பெயருடைய சிறுவன் இருக்கிறான் அவனுடைய தந்தை நல்ல பணக்காரர் அவன் வீட்டிலே செல்லப்பிள்ளை உணவு கொடுத்தால் சாப்பிடமாட்டான். உடுப்புகளைப் போட்டால் கசக்கி விடுவான். பாடசாலைக்கு விட்டால் எங்கேயாவது ஒழித்துக் கொள்வான், தகப்பனார் எப்போதும் அவனைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு சிறிதுநேரம் கழித்துப் பின்னால் வருவார்.

ஒருநாள் சொக்கன் பாடசாலைக்குச் செல்வதாகப் புறப்பட்டான். பாடசாலையில் மணி அடித்தாகி விட்டது. ஆனால் அவன் சில கெட்ட பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு நின்றானே அல்லாமல் பாடசாலைக்குப் போகவில்லை. இதை அவனது அண்ணன் கண்ணன் பார்த்தான். அவன் தன் தம்பியை அன்பாகக் கூப்பிட்டு அறிவுரை கூறினான். அவன் கூறிய அறிவுரை என்ன தெரியுமா?

ஓடி ஆடக் கூடாதென்று
தேடி வருகிறார்
-அப்பா
தேடி வருகிறார்
துள்ளி ஓடிப்
பள்ளி செல்ல
நல்லதில்லையா - தம்பி
நல்லதில்லையோ?

கண்ணன் தன் தம்பிக்கு அறிவுரை கூறினாலும் அவன் கேட்பதாக இல்லை. அப்பா தேடி வருகிறார், அடி விழுந்தாலும் விழும் என்று பயப்படுத்தியும் பார்த்தான். சொக்கன் கேட்கவில்லை. அவன்தான் செல்லப்பிள்ளையாச்சே.

'எனக்கு ஏன் படிப்பு? எங்கள்வீட்டில்தான் ஏராளமான பணம் இருக்கிறதே. நேரத்துக்கு நேரம் சாப்பாடு. விதம் விதமான உடுப்பு எல்லாம் இருக்கிறதே. அவை போதாதா என்பது அவன் நினைப்பு.

அவன் எண்ணத்தைக் கண்ணன் நன்கு அறிவான் 'செல்வம் அழியக்கூடியது. கொடுக்கக்கொடுக்கக் குறையக் கூடியது. அழியாத செல்வம் கல்வி ஒன்றுதான், அதைக்கூட இந்தத் தம்பி உணர்கிறானில்லையே. இன்னும் செல்லப்பிள்ளையாக இருக்கிறானே' என்று துக்கப்பட்டான். அந்த நினைவில் மீண்டும் அழுத்திக் கூறுகிறான்.

கல்வியைப்போல்
உலகில் நல்ல
செல்வம் ஏதடா-வேறு
செல்வம் ஏதடா?
உணவும் உண்டு
உடையும் பெற்றால்
மனது வெளுக்குமா?
-அதில்
மகிழ்ச்சி பிறக்குமா?

என்பது கண்ணனின் கேள்வி சொக்கன் அப்போதும் பாடசாலைக்குப்போகவில்லை. கண்ணன் பயமுறுத்திப் பார்த்தும் அறிவுரை சொல்லிப் பார்த்தும் அவன்கேட்கவில்லை. ஆகவே அவன் செல்லத் தனத்தைக் குறிப்பிட்டு கண்ணன் மறுபடியும் கண்டிக்கிறான்.

உண்ணச் செல்லம்
உறங்கச் செல்லம்
படிக்கச் செல்லமா?
- உனக்குப்
படிக்கச் செல்லமா?
சொல்லு தம்பி
சொல்லு தம்பி
செல்லக் குழந்தையா?
இன்னும்
செல்லக் குழந்தையா?

என்று கேட்டு விடுகிறான். அவன் கேட்டுவாய் மூடுமுன் தகப்பனார் தூரத்தில் வருவதைச் சொக்கன் கண்டான், பாடசாலைக்கு ஓட்டமாய் ஓடினான்.

—இரசிகமணி கனக. செந்திநாதன்—

## சிறுவர் கவி நயம்—15

கல்வியின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி இளம் உள்ளங்களில் அதைப் பதிய வைக்கவேண்டும் என்ற நோக்கோடு புதிய முறையில் இதைப் பாடியிருப்பவர் தமிழண்ணல். அவரது நூல் குழந்தைகள் இலக்கியம் காரைக்குடி செல்விபதிப்பகத்தார் இதை வெளியிட்டிருக்கிறார்கள். பாடல் முழுவதையும் பாருங்கள்:-

ஓடி ஆடக் கூடாதென்று
தேடி வருகிறார் -அப்பா
தேடி வருகிறார்
துள்ளி ஓடிப்
பள்ளி செல்லல்
நல்லதில்லையா? - தம்பி
நல்லதில்லையா?
கல்வியைப் போல்
உலகில் நல்ல
செல்வம் ஏதடா? - வேறு
செல்வம் ஏதடா?
உணவும் உண்டு
உடையும் பெற்றால்
மனது வெளுக்குமா?
- அதில்
மகிழ்ச்சி பிறக்குமா?
உண்ணச் செல்லம்
உறங்கச் செல்லம்
படிக்கச் செல்லமா?
- உனக்குப்
படிக்கச் செல்லமா?
சொல்லு தம்பி
சொல்லு தம்பி
செல்லக் குழந்தையா?
- இன்னும்
செல்லக் குழந்தையா?

# பொம்மைக் கல்யாணம்

— ச. மகேந்திரன் —

பாமா வீட்டுப் பையனுக்கும்
பத்மா வீட்டுப் பொண்ணுக்கும்
பூமா வீட்டில் கல்யாணம்
பூம், பூம் டும், டும் வாருங்கள்.

முல்லைப் பந்தல் பூச் சொரிய
முத்தம்மாவின் பாட்டிசைக்க
கொல்லைப் புறத்தில் கல்யாணம்
கோலா கலந்தான் வாருங்கள்.

பப்பா இலையை வாழையென
பத்மா எடுத்து கட்டுகிறாள்
பப்பா பூவில் மாலைகள்
பாமா கோர்த்து வைக்கிறாள்.

சமையல் வேலை தடல் புடலாய்
சாந்தி நின்று செய்கிறாள்
அமைதியாக சோடனைகள்
சுமதி அங்கு செய்கிறாள்.

சீனித் தகரம் மேளமதாய்
சின்னத்தம்பி அடிக்கிறான்
தேநீர் போட்டு, வருவோருக்கு
வே ரி எடுத்துக் கொடுக்கிறாள்.

பெண்ணின் பெயரோ பொன்னம்மா
பையன் பெயரோ பொன்னையா
வண்ண வண்ணவுடையுடுத்து
வந்திடுவார்கள் பந்தலுக்கு

பாமா வீட்டுப் பொம்மைக்கும்
பத்மா வீட்டுப் பொம்மைக்கும்
பூமா வீட்டில் கல்யாணம்
பூம், பூம், டும், டும் வாருங்கள்




# இன்றைய சிறுவரின் பங்கு

இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயமாகும். ஒரு சமுதாயம் மேன்மையுற்று விளங்குவதற்கு தேவையானது தலைசிறந்த ஒழுக்கமுடைய மக்கள்தான் அன்றி செல்வமோ அறிவோ அல்ல. நற்பண்பு இல்லாதவனுடைய செல்வம் அறிவு என்பன தீய வழியிலேயே பயன்படுத்தப்படுகின்றன. இதனால் சமூக முன்னேற்றம் தடைப்படுத்தப்படுகின்றது. எனவே ஒரு சமுதாயத்தின் நல்வளர்ச்சி ஒவ்வொரு மனிதனுடைய நற்பண்புகளில்தான் தங்கியுள்ளது என்பதை நாம் விளங்கக்கூடியதாக இருக்கின்றது.

நாளைய சமூகத்தை உருவாக்கும் இன்றைய சிறுவர்கள் அனைவரும் தாங்கள் சமுதாயத்தின் அங்கம் என்பதை உணரவேண்டும். இன்றைய சிறுவர்களாகிய எமது நடத்தை எப்படிச் சமூகத்தைப் பாதிக்கின்றது என்பதை உணரவேண்டும். இதற்குப் பெரியோர்கள் உதவவேண்டும். இந்தக் காலத்தில் எத்தனை பெரிய மனிதர்கள் தமது நடத்தைகளினால் சிறியோராகின்றனர். தாங்கள் நன்னெறியில் வாழ்வதன்மூலம் சிறுவர்களையும் நன்னெறியைக் கடைப்பிடிக்கத் தூண்ட வேண்டிய வயதில் பெரிய மனிதர்கள், ஆசிரியர்கள் தாங்கள் செய்ய முடியாத ஒரு செயலைத் தம் பிள்ளைகளுக்கோ அல்லது மாணவர்களுக்கோ செய்யும்படி சொல்லுகின்றார்கள். சிறுவர்கள் இவர்களின் வார்த்தைகட்கு எப்படி மதிப்புக் கொடுப்பார்கள். தான்சுத்தமாக வராத ஓர் ஆசிரியர் பிள்ளைகளைச் சுத்தமாக வர வேண்டும் என்று கட்டளையிட்டால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? இதை ஏன் இன்றைய ஆசிரியர்களும் பெரிய மனிதர்களும் உணர்வதில்லை

பண்டைய காலத்தில் குருகுலத்தில் மாணவர்கள்கல்வி கற்றுவந்தார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அங்கு ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து வந்தார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அங்கு ஆசிரியர்கள் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்துவந்தார்கள் அவர்களது ஒவ்வொரு செயலையும் பார்த்து மாணவர்கள் கடைப்பிடித்து வந்தனர். பிரமச்சாரியத்திலே மிகவும் பேணப்பட்டுவந்தது. குருகுலத்தின் ஒழுக்கம் நிறைந்த சூழலில் வளரும் குருகுல மாணவர்கள் சிறுவயதிலேயே தூய்மை மிகுந்து விளங்கினர். இளமையில் நற்பழங்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகிய அவர்கள் எங்கு சென்றாலும் ஒழுக்கசீலர்களாகவே வாழ்ந்தார்கள்

ஆனால் இன்றைய மாணவர்களது நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஒழுக்கமாக வாழ வகைதெரியாத சிறுவர்களிடையே வழிகாட்ட தூய்மையும் வாய்மையும் நிறைந்த பெரியோர்கள் மிகக் குறைவு காரணம் அவர்கள் நன்கு வளர்க்கப்படவில்லை. சிறுவயதில் கற்றுக்கொண்ட தீயபழக்கம் தந்தையான பின் எப்படி மாறும்? நன்னெறியில் வாழாத ஒருவன் தன் மகனையோ மாணவர்களையோ அல்லது தன்னுடன் பழகும் சிறுவர்களையோ எவ்விதம் திருத்தமுடியும்?

இன்றைய இளைஞர்கள் இளம் பெண்கள் எல்லோரும் மற்றவர்களைக் குற்றம் சொல்லிக் கண்டிப்பதை விட்டுத் தாம் ஒவ்வொருவரும் நல்வாழ்க்கை நடத்த முயற்சிக்கவேண்டும். ஒருவனின் நல்வாழ்க்கையால் எத்தனையோபேர் திருந்தலாம். இப்போதே முயன்று நல்வாழ்க்கை வாழவேண்டும். நேரம் விலைமதிப்பற்றது; சென்றால் மீண்டும் வராது. இப்போது செய்வதைநன்குசெய்தால் பின்பு கஷ்டப்படவேண்டியதில்லை. நாம் கடவுளுக்கும் உலகத்திற்கும் மக்களுக்கும் செய்யக்கூடியமிகச்சிறந்த சேவை எம்மை நாம்நல்லவர்களாக்குவதுதான் என்பதைச் சிந்திக்கவேண்டும். ஒவ்வொரு சிறுவனும் தன்னை நல்வழிப்

(14-ம் பக்கம் பார்க்க)

— சண்முகப்பிரியா —

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# புத்தகம்!

அப்பா தந்த புத்தகம்
அழகான புத்தகம்
எப்போதும் நான் விரும்பிடும்
இனிப்பான புத்தகம்

அண்ணா படிக்கும் புத்தகம்
அதிக விலைப் புத்தகம்
வண்ணப் படங்கள் அற்றவை
வயதானவர் புத்தகம்

அக்கா பார்க்கும் புத்தகம்
அழகுத் தையல் புத்தகம்
பக்கம் முழுவதும் வண்ணமாய்ப்
பதிந்த புதுப் புத்தகம்

அப்பா படிக்கும் புத்தகம்
ஆங்கிலமாம் புத்தகம்
எப்போ நானும் படிக்கலாம்
என்றாசை பிறக்குதே. — குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் சின்னம் மங்களம்மாள்

**'தமிழ்மகளை' வெளியிட்டுப் பெண்ணுலகிற்குப் பெரும் பணியாற்றிய நம் தமிழ் மகள் திருமதி மங்களம்மாள் மாசிலாமணி, ஈழத்தின் முதல் பெண் பத்திராதிபர். மாதர்களுக்கென ஒரு பத்திரிகையை வெளியிட்ட சிறந்த சமூக சேவகி, தமிழர் கலை, கலாச்சாரத்துக்கு தொண்டாற்றிய காலஞ்சென்ற கர்மயோகி கலைப் புலவர் நவரத்தினத்தின் மாமியார். திருக்கார்த்திகை தீபத்தன்று சிவபதமடைந்த இவரின் சிராத்ததினம் இன்று.**

தங்கள் வாழ்க்கை முழுவதையும் பிறர்பணிக்கே தியாகம் செய்யும் பெண்கள் தெய்வாம்சம் பெற்றவர்களாவார்கள். இந்த லட்சியத்துடன் கூடிய பெண்கள் ஒரு ஜனசமூகத்தில் இருந்தலே அவர்கள் மூலம் குடும்பங்களும்ஜனசமூகசங்கங்களும் ஒற்றுமையுடன் ஓங்கி வளரு மென்பதில் சந்தேகமில்லை.

மாதராகிய எம் எண்ணிக்கைபெரிதாயினும்இந்த அரிய நோக்குடன் எம்மத்தியில்வாழ்பவர் ஒருசிலரே. இந்த ஒருசிலரில் ஒருவர் காலஞ்சென்ற சமது சமூக சேவகி. தமிழ்மகள்' பத்திரிகையின் ஆசிரியை திருமதி மங்களம்மாள்.



தூயவெள்ளைக் கதராடையில் முகத்திலே தூயவெண்ணீற்றின் ஒளியும், அறிவாற்றலும், கருணையும் ஒன்றையொன்று போட்டி போட எளிமையான அடக்கமான அழகான மங்களம்மாள் அம்மையாரின் தோற்றம் அவர் மறைந்தாலும் எமது மனதைவிட்டகலாத தன்மையது.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பெரியார் வாக்கைச் சிரமேற்கொண்ட இவரின் பெற்றோர்கள் வழக்கறிஞர் திரு. வீ. கதிரவேற்பிள்ளையும் மீனாக்ஷியம்மாளும் ஆவர். திருவாங்கூரில் பிரதம நீதியரசராக விளங்கிய திரு. தா. செல்லப்பாபிள்ளை, திருவிதாங்கூரில் பொலிஸ் கமிஷனராகவும் கலால்பகுதி கமிஷனராகவும் கடமையாற்றியபொன்னம்பலபிள்ளை ஆகியோரின் தங்கைஇவர். யாழ்ப்பாணத்தில்அறிவும்ஆற்றலும் மிக்க இக்குடும்பத்தில் 1884-ம் ஆண்டு பங்குனிமாதம் 10-ந் திகதி திருமதிமங்களம்மாள் பிறந்தார்.

## கல்வி

பல்கலைக் கழகங்களிலும், பெரிய கல்லூரிகளிலும் பட்டம்பெற்றுத்தான் அறிவைப் பெறலாம், சமூகத்தொண்டைச் செய்யலாம்என நாம் எண்ணிவிடக்கூடாது. இவரது கல்வி வீட்டிலேயே வளர்ச்சியடைந்தது. வீட்டிலே ஆசிரியர்களை அமர்த்தி வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படத்தக்க வகையில் இவரின் தந்தையார் இவருக்குக் கல்வியளித்தார். தான்கற்ற கல்வியின் பயனாக எண்ணிறந்த அறிவை வளர்க்கும் அரிய நூல்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்தார்.

இவ்வறிவாற்றல்மிக்க இவருக்கு வாய்க்கப்பெற்ற இவரின் கணவர் திரு. மாசிலாமணியும் மிகவும் அறிவாற்றல் மிக்கவர். திரு.மாசிலாமணி 'தேசாபிமானி' என்ற தமிழ்ப் பத்திரிகையையும் மற்றுமொரு ஆங்கிலப் பத்திரிகையையும் நடாத்திப் புகழ்பெற்றவர்.

திருமதி மங்களம்மாள்மிக இளமையிலேயே அதாவது 18-வது பிராயத்திலேயே சமூகத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்தவர், நல்லொழுககம், கடவுள் பக்தி, சத்தியம், நேர்மை, ஆசாரம், சீலம் முதலாம் சிறந்த குணங்கள் பெண்க

## இளமையிலேயே சமூகத்தொண்டு

ளிடையே நிலவவேண்டும் என்ற கருத்துடன் பெண்கள் சமுகத்தை எழுச்சியுறச் செய்ய 1902-ம் ஆண்டு வண்ணார்பண்ணையில் பெண்கள் சேவாசங்கத்தை ஆரம்

— கே. ஜி —

பித்தார். இச்சங்கத்தின் மூலம் பெண்பாலாருக்கும் சமுகசேவை எத்துணை அவசியமென்பதை அம்மையார் தமிழ்ப்பெண்களுக்கு வலியுறுத்தினர். இச்சங்கத்தை இயக்கும் கருவியாக விளங்கிக்கொண்டே பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்தார்.

## 'தமிழ் மகள்'

மாதர் தமக்குத் தொண்டாற்றி அவர்களுக்குச் சம உரிமை அளிக்கவேண்டும் என்னும் நோக்கம் கொண்டு அவர்கள் எழுச்சிக்காக ஒரு பெண்கள் பத்திரிகையை ஆரம்பிக்க விழைந்தார் அம்மையார். ஈழத்தில் பத்திரிகையொன்றை நடத்துவதென்பது இலகுவான காரியமில்லை. பகீரதப்பிரயத்தனம் என்றே சொல்லவேண்டும். அறிவாற்றலோடு துணிவும் ஒருங்கு சேர ஈழத்தில் முதன் முதலில் பெண்கள் பத்திரிகையொன்றை ஆரம் பிக்க அடியெடுத்து வைத்தார் திருமதி மங்களம்மாள். 1923-ம் ஆண்டு 'தமிழ் மகள்' என்னும் நாமகரணம் சூட்டி மாதர் பத்திரிகையொன்றை ஆரம்பித்தார். இப்பத்திரிகைக்கு ஈழத்தறிஞரிடம்மட்டுமன்றி பாரதத்தின் பலதுறை அறிஞர்களிடமிருந்தும் கருத்தாழமும் பொருட்செறிவும் உள்ள கட்டுரைகளைப் பெற்று வெளியிட்டார். இப்பத்திரிகை இன்றும் நடைபெற்றுவருகிறது. 86-வயதில் இறக்கும் தறுவாயில் கூட தனது பணிக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை அம்மையார்.

## இந்திய காங்கிரசில்

பத்திரிகைப் பணியோடு அம்மையார் நின்றுவிட்டார் என நாம் எண்ணிவிடல் கூடாது அவரது பணி பல்வேறு கிளைகள்விட்டு ஆல் போல் தழைத்தது. 1924-ம் ஆண்டு கோவில்பட்டிக்குச் சென்றார். அங்கு நடைபெற்ற பெண்கள் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேருரை நிகழ்த்தினர். 1925-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குச் சென்றார். அங்கு சென்றதும் தனது பத்திரிகைப் பணியை விடவில்லை. அங்கிருந்துகொண்டே 'தமிழ் மகளை' மாதாந்தம் தொடர்ந்து வெளியிட்டார். 1927ம் ஆண்டில் அகில இந்திய காங்கிரஸுக்கு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுக் காங்கிரஸுக்காகத் தொண்டாற்றினர். பாரதத்துக்குச் சுதந்திரம் தேடிக் கொடுத்த அண்ணல் மகாத்மா சென்னைக்கு விஜயம் செய்தார். அப்போது நிகழ்ந்த அகில இந்தியப் பெண்கள் மகாநாட்டில் அங்கத்துவம் வகித்து உரை நிகழ்த்தினர் மேலும் காங்கிரஸுக்கு இவர் செய்த அரும்பணியால் காங்கிரஸ் தேர்தலில் எழும்பூர்த் தொகுதிக்கு காங்கிரஸ் இவரை அபேட்சகராக நிறுத்தியது. பாரதத்தில் தங்கியிருக்குங்காலை இவர் மைலாப்பூர் திருக்குறட் கழகம், திரு. வி. க வினது குகானந்த நிலையம் ஆகியவற்றிற்குச் சென்று அறிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

## தமிழ் மகளிர் கழகம்

தமிழ்பெண்டிரின் உரிமை கடமை, நிலை. ஆக்கம் அனைத்தும் பேணும் குறிக்கோளோடு 1933-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'தமிழ் மகளிர் கழகத்தை நிறுவினர். இக்கழகத்துக்குத் தலைமை தாங்கி அதை இயக்கிவந்தார். வருடாவருடம் நடைபெறும் அகில இலங்கைச் சைவசமய மகாநாட்டிலும் இவரது சொற்பொழிவுகள் பல இடம் பெற்று மகாநாட்டைச்

(14ம் பக்கம் பார்க்க)



தளாதிப்பு குணம்

Modern Scientific School of
TAILORING

"தையற்கலை"

இதுவரை தபால்மூலம் பாடங்களைப் போதித்து வந்த நாம் எமது யாழ்ப்பாணக் கிளையில் இப்போது நேரிலும் வகுப்புகள் நடாத்துகிறோம். வெளிநாட்டில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லாவித உடைகளையும் விஞ்ஞான "SCIENTIFIC" முறையில் வெட்டுவதற்கும், தைப்பதற்கும் போதிக்கப் படுகிறது. எல்லாவிதமான எம்பிராய்டரி வேலைகளையும் ஆறுமாதங்களில் கற்று 'டிப்ளோமா' சான்றிதழையும் பெறலாம்.

விபரங்களுக்கு;

மனேஜர் M. S. S. T.
K. K. சங்கரப்பிள்ளை கட்டிடம்,
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

(தலைமைக் காரியாலயம்)
கொழும்பு.

### பெண் தெய்வங்கள்

குற்றமற்ற வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகின்றவரான பெண் தெய்வங்களே உலக முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகளாவர்.

0 0 0

**உத்தம மனைவி**

நல்லொழுக்கம், கடவுள் பக்தி, நேர்மை, சத்தியம், ஆசாரம், சீலம் முதலான இச்சிறந்த குணங்களைக் கையாளுதலே உத்தம மனையாளுக்குரிய இலட்சணங்களாகும்.

0 0 0

**ஒருவளே எல்லாமாய்**

ஒருவளே தாயாகவும், சகோதரியாகவும், புதல்வியாகவும், மனைவியாகவும் விளங்கப் பெறுகின்றாள், என்னே இவளின் பெருமை!

0 0 0

**மாதருலகின்றேல்:..**

பெண்ணானவள் தாய்மையெனும் தூய்மையான பீடத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றாள் அச்சிசுவின்உடல், பொருள் ஆவி என்பவெல்லாவற்றையும் உண்மையாகவே யாதொரு கள்ளங் கபடமின்றி அர்ப்பணம் செய்து விடுகின்றாள். இத்தகைய மகிமை வாய்ந்த மாதருலகின்றேல், மாரி வழுவின்றிச் சொரிதலாகுமோ?

நன்றி
'தமிழ் மகள்'

சமையல

### காரோலை அப்பம்

தேவையான பொருட்கள்:-

பச்சை அரிசி 1 சுண்டு
உழுத்தம்பருப்பு 1 சுண்டு
உப்பு தேவையான அளவு
பச்சைமிளகாய் 15
மிளகு 2 தேக்கரண்டி
இஞ்சி 1 துண்டு
கருவேப்பிலை சிறிதளவு
தேங்காய் 1மூடி

செய்முறை— தேங்காயைப் பல்லாக நறுக்கிவைத்துக்கொள்ளவும். பச்சை இரிசி உழுத்தம் பருப்பை ஊறவைத்து நன்றாகக் கழுவித தண்ணீர் ஊற்றாமல் கல்லுரலில் இட்டு அரைக்கவும் பொடியாக நறுக்கி வைத்துள்ள பச்சை மிளகாய், இஞ்சி, தேங்காய், கருவேப்பிலை, உப்பு ஆகியவற்றைப் போட்டுக் கலந்து கொள்ளவும் எண்ணெயை இரும்புச் சட்டியில் ஊற்றி காயவைத்து மாவைக் கரண்டி கரண்டியாக எடுத்து எண்ணெயில் போடவும் ஒரு அப்பத்திற்கு ஒரு கரண்டி மாவு போதும் ஒவ்வொரு அப்பமாக, வெந்தவுடனே திருப்பிப் போட்டு எடுங்கள் இந்த அளவு மாவை வைத்து 20 அப்பங்கள் செய்யலாம் தித்திப்புப் பலகாரத்துடனே தின்பதற்கு மிகருசியாக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர்கள் புலவர்களை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கெல்லையான சுடலை வைரவர் கோவில் திட்டிலிருந்து கோவிலடிச் சந்தி வரை சவாரி வண்டிகள் ஓடும். சவாரி உலகில் ஸ்டார் அடித்த பூச்சியன், கழுகன் சோடிகள் எல்லாம் போட்டியில் கலந்து கொள்ளும். இந்த வாரசந்தகளியாட்டத்தின்போது சுற்றயல் கிராமங்களிலிருந்து பெரும் கூட்டம் கூடும். சின்னத்தம்பியாரின் புதுக்கடையில் சோடாவும் வெற்றிலை பாக்கும் நயமாக விலைப்படும். மாசிலாமணியாரின் பாக்குவெட்டிச் சீவலுக்கு அன்று ஒருபொழுது ஏகப்பட்ட கிராக்கி. சின்னத்தம்பியாரின் திருக்குஞ்சமலை மருமகன் தெருப்படலை பூவரசு மரத்தில் ஏறி நின்று சவாரி ஓட்டம் பார்த்து ரசிப்பார். வடக்கே சமுத்திரத்தில் ஒரு தோணிப் பாய்மரத்தில் காக்கை குந்தியிருப்பது தெரிகிறதென்று ஆகாசவாணமும் விடுவார். இந்த வேடிக்கையும் களியாட்டமெல்லாம் பார்த்துக் காட்டு மல்லிகை சிரித்துச் சொரியும். இதே (சிறு குறிஞ்சி) காட்டுவெளி வைரவர் கோவில் சந்நிதியில் தான் இன்றைக்கெல்லாம் சிலகாலமாக ஆண்டுதோறும் வேள்விப்பலி நடைபெறத் தொடங்கியிருக்கிறது. ஆட்டுக்கடாக்களை நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு ஐநூறு ஆயிரமாக எமனுலகைப் பார்க்கச் சவாரி விடுகிறார்கள்.

வண்டிச் சவாரி நடைபெற்ற இதே தச்சன்காட்டு வெளியில் அறுபது ஆண்டு முன்னதாக முதன் முதலாகக் கிரவல் ரோட்டின் தெருப்புழுதியை வாரிஇறைத்து அதனூடே மறைந்து ஓடிய மோட்டார்காரைப் பார்த்து இவ்வூர் மக்கள் ரயில்பெட்டியொன்று ரயில் பாதை விலகி ஓடிவந்துவிட்டதாக நினைத்து 'மாவிட்டபுரம் லோட்டு போச்சுடா போச்சு' என்று தலையில் கைவைத்துக் கூக்குரலிட்டவர்களாய் ஓடி ஒளித்தார்கள். யாழ்ப்பாண நாட்டில் முதன்முதலாகப் பட்டப்பகலில் பறந்த ஆகாயவிமானம் வடக்குக் கடல் தாண்டிப் பிரவேசித்த பூப்பரப்புக் கூடத் தச்சன் காட்டுவெளி தான்.

அன்றைக்கெல்லாம் அண்மித்திருக்கும் கடல்வெளிக் காற்று, இந்த சிறுகுறிஞ்சி நிலப்பரப்பிலுள்ள குத்துச் செடிகொடிகளிலே தவழ்ந்து வந்து மேனிசிலிர்க்கச் சில்லெனத் தழுவும் திவ்யமான ஆரோக்கியத் தலம் இப்பகுதி. இந்தக்காற்றிலே வளர்ந்து ஆளான சின்னத்தம்பியாரின் குடும்பத்தில் தலைவன், தலைவி, மகன் சுந்தரமூர்த்தி மூவரும் இன்று இல்லை. சைக்கிளோடப் பழகிக்கொள்ளாத சுந்தரேசு (சுந்தரமூர்த்தி) தவிலைத் தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு கீரிமலைச் சிவன் கோவிலுக்கும் தையிட்டிக்கும் மற்றும் சுற்றயல் கிராமங்களுக்கும் புரோகிதம் அடிக்க சீவியகாலம் முழுவதும் நடந்தோடிக்கொண்டேயிருந்து மூன்று ஆண்டுகள் முன்னதாக அகால மரணமுற்றார். தகப்பனைப்போலப் பிள்ளை, பிரயாசி. இரு சகோதரிகள் திருமலையில் விவாகம்செய்துகொண்டிருக்கிறார்கள்.

மடப்பள்ளி தாணுஐயர் முருகனுக்கு நிவேதிக்கும் கற்கண்டுச் சாதம் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்களா! 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே!' திகட்டாத தித்திப்பு. ஆனால் சுவாமி இதுமாதிரி தித்திப்புப் புளியோதரையும் சாப்பிடுகிறதென்பது மெய்தானு? அது என்னவோ! அல்லும் பகலும் அநவரதமும் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி! சுவாமி நிவேதனத்துக்கென்று கூப்பன் கூட உண்டே. கோவில் பூசை நடைபெறுவதுமல்நின்றுபோல ஆலயப்பிரவேசக் கலவரத்தின்போது சிலதினம் முருகனும் பட்டினி; பெரிய குருக்களும் சிவாபட்டினி.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயக்குருக்கள், பன்னாலைப்பதி தமிழ்வித்துவான் (கொல்லங்கலட்டி தமிழ் வித்தியாசாலைத்தலைமையாசிரியர்) சிவானந்த ஐயர் இருவரும் மாவிட்டபுரம் பிராமண குடும்பங்களில் பெண்கொண்டு பெருமை பெற்றார்கள். பன்னாலைஊர் சங்கரப்பிள்ளை ஆசிரியரின் பெயரை இக்கட்டுரையில் ஒருதடவையாவது குறிப்பிடாவிட்டால் அது எனக்குத் திருப்திப்படாது. சகலபேரும் ஒப்புக்கொள்ளும் முருகனடியார் அவர், ஏன் பழையநாள் துரைசுவாமி விதானையாரும் கூடத்தான். இப்படி இன்னும் எத்தனையோபேர்!

அவருக்குப்பிறகு குருக்களும் கோவில் எசமானுமான துரைசுவாமிக்குருக்கள் மிச்சம் 'சிம்பின் டைப்'. வலது புறம் இடுப்பில் ஒரு பால முருகனும் இடதுகையில் கைப்பிடியில் ஒரு வேலழகனுமாக கோவில் வீதிஎங்கும் களங்கமற உலாவுவார். மூன்றுவதாக கோவில்குருக்களாகியிருக்கும் அவர்மகன் சாமி ஐயரோ, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு விடியற்காலை நடைபெறப் போகும் தமிழ்விழாவுக்கு இரவிரவாக லைட்கொளுத்தி வைத்து வாலிபர்குழுவில் தாமும் ஒருவராகிநின்று பந்தல் போட்டு முடித்துவிடும் 'புதிய மொடெல்'.

காலச்சக்கரம் ஐம்பது தடவை சுற்றிவந்துவிட்டதல்லவா?

இன்னும் எவ்வளவோ சொல்லலாம். ஊரின் கற்றோரும் மற்றோரும் பற்றி எடுத்தடுக்கலாம்.

பிரமாண்டமானதொரு சண்டைக்கப்பல் கரையை அணுகி நெடுங்காலமாக நங்கூரமிட்டு நிற்பதுபோல தோற்றப்படும் சிமெந்து தொழிற்சாலை, இராப்பகலாக புகைக்கக்க பகலை இரவாக்கி சங்கநாதம் செய்துகொண்டே கிராமத்தின் ஒரு பகுதியில் இருளை ஒட்டி இரவைப் பகலாக்கும் அதன் புரட்சிக்கனல், கிராமத்தின் கிழக்கு வாசலிலே தென் தமிழ்நாட்டுக்கோவில்களின் எழிலமைப்பில் சம்பந்தர் புனரமைக்கும் தலையிட்டி வைரவர்கோவில், கம்பன் கலைக்கழகம், 37 நாடகங்கள் அரங்கேற்றி முத்தமிழுக்கும் விழா எடுத்து இசை வகுப்புகள் நடத்தி 15 ஆண்டில் மகத்தான சாதனையை நிலைநாட்டிய மாவை முத்தமிழ் மன்றம் சி. டி. பி. பிரமுகர் சங்கரப்பிள்ளை, புகையிலை உணர்த்தும் போறணைதிதூபிகள், சிறந்த நகைச்சுவை நடிகர்கறுவல்தம்பி...

பட்டணத்து நாகரிகம், தெருப்புழுதி என்பன இன்னமும் மாட்டுவண்டியில் தான் உட்புகக்கூடிய மண்ணுங்கட்டி ஒழுங்கைகளுக்கு அப்பால் உலக நடவடிக்கைகளையே மறந்து தாவடைவல்லி கிணற்றடி, தச்சர் கடவை, கொல்லர் மடத்தடி, கருப்பணிக்கொத்தை, மாப்பாணத்தெரு ஆதியாம் கிராமத்தை ஒட்டிய மக்கள் குடியிருப்புகள் எந்நாளும் தபோவனத்தின் அமைதி உறங்கும் திணைப்புனமாக விளங்குகின்றன.

பாரதிஐயரும் மறைமலையடிகளும் சிவமும் வாழ்ந்து தமிழ் வளர்த்த அடிச்சுவட்டில் பண்டிதர் சச்சிதானந்தன், புலவர் பார்வதிநாதசிவம் ஆகிய இரு நல்லகவிஞர்களை இவ்வூர் தமிழுலகுக்குஅளித்திருப்பதற்கு கிராமத்தின் இந்த அமைதியே ஒருவேளை காரணமாகக்கூட இருக்கலாம்.

"எட, இதென்ன நாசங்கட்டு! இந்தப்பொடி நெடுகிலும் இப்பிடி வாய் புலம்பிக்கொண்டிருந்தா இதுக்கு ஒரு சம்மடை இல்லையோ! பங்கபார் சின்னத்தம்பற்ற தொழிற்சாலைக்கு விடியக் காலம் பனித்தண்ணிகூட வத்தல்லை பருத்துறைச் சீமைலேருந்து சதாசிவண்ணை குடத்தனை குழை வண்டில்லை வந்துஇறங்கிறூத் [illegible] வந்திறங்கிறார்!"

வணக்கம்.

# ஜென்ம சாபல்யமளிக்கும் திரியம்பகம் பதி

திரியம்பகம் எனநினைத்தவுடனேயே ஒரு மன அமைதி, நிறைவு ஏற்படுகின்றது. அதுபோலவே திரியம்பகக்ஷேத்திர மண்ணில் கால் வைத்தவுடனேயே மனதில் ஏற்படும் அமைதியைப் போலவே இயற்கையின் சூழலும் அமைதியாக இருக்கின்றது.

கோதாவரி அன்னையின் உற்பத்தி ஸ்தானமாகியபடியால், இயற்கையன்னை எங்கும் அழகை அள்ளிக்கொட்டியுள்ளாள், உயர்ந்துநிற்கும் மலைச்சிகரங்களை பின்னணியாகக் கொண்டு திரிமூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக உலகிற்குக் காட்சி தரும் திரியம்பகநாதர் எழுந்தருளி உள்ள ஸ்தலம் திரியம்பகேஸ்வரம்.

## சிற்பம்

இயற்கையின் சூழலுக்கேற்ப, ஆலயமும் வடநாட்டுப் பாணியில் கருங்கற் திருப்பணியாக அழகுற அமைந்திருக்கின்றது. ஒருகால் எல்லோரா குகைச் சிற்பங்கள் செதுக்கிய, பல்லவ நாட்டுக் கலைஞர்களின் கைவண்ணமாய் இருக்குமோ என்ற ஐயப்பாடு எழுவதற்கும் ஆதாரமாய் இருக்கின்றது. எல்லோரா குகைச் சிற்பங்களைப் போன்று பஞ்சவடி, திரியம்பகம் ஆகிய பகுதிகளை அண்மித்துள்ள பகுதிகளிலும், சில குகைகள் உள்ளன. சிலா ரூப வேலைப்பாடுகள் குறைவாக இருந்தாலும் ஆலயத்தின் அமைப்பை உருவகப்படுத்தும் சிற்ப விதானங்கள் அழகுற மிளிர்கின்றன. ஆலயத்தின் முன்மண்டபத்தின் மேற்தளவரிசைமுழுதும் சிவலிங்கங்களால்ஆகியதுபோல் அமைத்துள்ளார்கள்.

## ஜோதிர்லிங்கம் பன்னிரண்டும்

பரத கண்டத்திலே ஜோதிர்லிங்கஸ்தலங்கள் பன்னிரண்டு, அவை முறையே 1. சோமநாதம், 2. மல்லிகார்ஜுனம் 3 திரியம்பகம் 4. மஹாகாளம் 5, ஓம்காரம் 6 பீமசங்கரம் 7. ரமேஸ்ரம் 8. குஸ்ருணேசம் 9. நாகேசம் 10. வைத்தியநாதம் 11, கேதாரம் 12. விச்வேசம் என்பனவாம்.

## வழி

இவ்வளவு மகிமைபொருந்திய திரியம்பகக்ஷேத்திரத்திற்கு, புகைவண்டிப் பாதை கிடையாது. பம்பாயிலிருந்து நாசிக்ரோடு என்னும் புகைவண்டி நிலையத்தில், இறங்கி, நரிக் பஞ்சவடி தீரத்திற்கு நான்கு மைல் பஸ்ஸில் போகவேண்டும். அங்கு தங்குவதற்கு வசதியாக தர்மசத்திரங்கள் பல உண்டு. சிருங்கேரி மடமும் உண்டு. அங்கிருந்து பதினெட்டுமைல் திரியம்பகம். போகவர வசதியாக பஸ் போக்குவரத்து உண்டு.

## கோதாவரி உற்பத்தி

கோதாவரி உற்பத்திஸ்தானத்திற்கு, ஏறக்குறைய மூன்றுமைல் மலைமேல்போக வேண்டும். வசதியாக, படிகள் கட்டப்பட்டுள்ளன, டோலி, என்று சொல்லப்படும் ஒருவகைப் பல்லாக்கு வசதியும் உண்டு.

இயற்கை எழில் கொஞ்சும் மலைகளின்ஊடே ஏறிப்போனால். சோவென்று, பேரிரைச்சலுடன் சீறிப்பாய்ந்து மலைகளிலிருந்து கிளம்பும் கோதாவரியை, நாம் எதிர்பார்த்துப்போனால், எமக்கு ஏமாற்றமே காத்திருக்கும். பஞ்சவடிதீரத்தில் மூர்க்காவேசம் கொண்டு, பூமாதேவியை இருகைகளாலும் இருபுறமும் தழுவிப் பாயும் கோதாவரியன்னை, சாந்தசொரூபியாகவெளதம மஹரிஷியின், கைக்கமண்டலத்தில் இருந்து புறப்படுகின்ற, சிறு நீர்த் திவலைகளைப்போன்று, நந்தியின் வாயிலிருந்து புறப்படும் சிற்றருவியாக வெளிவந்து ஓரிடத்தில் தேங்கி, மலையினுள் சென்று பின் வெளிவருகிறாள்.

அங்கு ஒருபுறத்தில் கௌதம முனிவருடைய ஆசிரமக் குகையும், இன்னொருபுறத்தில் சோரநாதரின் குகையுமிருக்கின்றன.

மலைமேல் உற்பத்தியாகும் கோதாவரி, சிறுவாய்க்கால்போன்று, சிறு ஆருகக் கீழிறங்கி கீழே உள்ள குசாவர்த்தன குண்டலத்தில், நுழைந்து வெளியேறுவதாக ஐதீகம். அக்குளத்தைச் சுற்றி மண்டபம் அமைக்கிறார்கள். அதில் பல சிவலிங்கங்கள் உள்ளன. மேல் திசையில் மஹாவிஷ்ணு சிறிய உருவில், சயனக் கோலத்தில் இருக்கிறார். அப்பெருமானுடைய திருவடியில் இருந்து, ஊற்றெடுக்கின்ற அருவி நீர், துளசிமணம் கமழ்கிறது.

திரியம்பக மலைகளில் ஊற்றெடுக்கும் அருவிகளை சூரிய ஒளியில் பார்த்தால் இராட்சத இருப்புக் குன்றங்களை இணைக்க வெள்ளித் தகடுகளை மருவியது போன்றிருக்கும். இந்த அருவிகளெல்லாம் குசாவர்த்தன குண்டலத்தில் வந்து சேருகின்றன. இத்தீர்த்தத்தை கோடிதீர்த்தம்என்றும் தமிழில் அழைப்பர்.

இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவதால் அனேக வியாதிகள் தீரும். பாபங்கள் நீங்கும். 'கௌதம மஹரிஷியினுடைய கோஹத்தியை' நீக்க வந்தவளல்லவா தெட்

(14- பக்கம் பார்க்க)

— பி. பா, தியாகராஜக் குருக்கள் —
(சித்தன்கேணி)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியின் வாழ்க்கையும் அவர் ஆற்றிய சேவையும்

### இலங்கை-இந்தியத் தூதுவரகம் நடாத்திய பாடசாலைக் கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற தமிழ்க் கட்டுரை.

மனிதன் வாழும் வழி அறியாது மிகப்பெரும் துன்பச் சுழலில் திணறிக்கொண்டிருந்த தருணங்களில் சமுதாயத்தை 'ஒளிமயமான எதிர்காலத்துக்கு'' அழைத்துச் செல்ல நல்ல பல தலைவர்கள் தோன்றினர். அத்தகைய பலருள்ளும் தலைசிறந்தவர் மகாத்மாகாந்தி. அவர் வற்றாத சீவநதி; குறையாத அன்புச் சுரங்கம்; துருப்பிடியாத சத்திய இரும்பு; அணையாத நீதி விளக்கு; அழியாத கருணை முத்திரை. சாதாரண மனித உருவிற் பிறந்து, வளர்ந்து அமர நிலையடைந்த அவரது புதுமை ததும்பும் வாழ்வு ஒரு புனிதச் சித்திரம்.

எந்த ஒருசிறு காரியத்தையும் மனச்சாட்சிக்கு விரோதமாகச் செய்தறியாதவர் காந்திஜி. இளம்பிராயத்தில் ஒருமுறை ஒழுக்கம் தவறிய போது கனவிலும், நனவிலும் மனச்சாட்சி அவரைச் சவுக்கால் அடித்தது உண்மையும், நேர்மையும் கொண்ட அவருக்கு முதலில் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது, ஓர் அதிர்ஷ்டமே. இந்தக் காட்சில் உருகிய காந்திஜி தானும் அரிச்சந்திரனைப்பின்பற்றி வாழ வேண்டுமென்று சபதம்பூண்டார். அன்னையின் அன்புக் கட்டளையை ஆழமாக நேசித்தார். மது, மாதர்" மாமிசம் ஆகிய மூன்றையும் வெறுத்தார். மனத்திருப்தி ஏற்படவேண்டுமானால் மனிதன் உண்மையையும், அஹிம்சையையும் நாடவேண்டும் என்று காந்தி எண்ணினர். எத்தகைய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோதிலும் அறவழி தவறிய செயல்களில் ஈடுபடக்கூடாது என்று அவர் உணர்ந்தார். சத்தி, அஹிம்சை என்னும் இரு ஆயுதங்களைக் கொண்டு மனித உறவு சம்பந்தப்பட்ட எதையும் தீர்க்கமுடியுமென்று தீர்க்கமாக நம்பி அவ்வழி அல்லும் பகலும் உழைக்கக் கால்கொண்டார்.

மக்களைப் பொறுத்தவரைகாந்திஜியைப்புரிந்துகொள்வது எளிதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் மொழியில் அவர் பேசினர்! அவர்கள் வாழ்ந்ததைப்போல மிகவும் எளிமையாக வாழ்ந்தார். ஊழியர்களைச் சேர்த்தார்! தலைவர்களை உருவாக்கினர். நோக்கத்தை அடைவதைவிட பின்பற்றும் வழியின் தூய்மைதான் முக்கியத்துவம் வாய்ந்தது என்று காந்திஜி வற்புறுத்தினர். தீமை எது என்று உணர்ந்தார். ஆனல் எதிரியென்று அவர் எவரையும் கருதியதேயில்லை.

காந்தியடிகள் இந்தியாவின் விதியை உலகின் விதியோடு பிணைத்தார். மனித ஆன்மாவைத் தெய்வீகக் கனல்கொண்டு பற்றச்செய்தார். அது வலிமை மிக்க ஆயுதத்திலும் பார்க்க ஆற்றல் மிக்கது என நம்பினர். ரல்லர்; சிரித்தார். கல்லடி கிடைத்தது. வெறுமைகி கேடயத்தாற் றடுத்தார்; சொல்லடி பொழியப்பட்டது. புன்சிரிப்பாற்றுங்கினர்; கடுஞ்சிறை திறக்கப்பட்டது; உண்ணு விரதத்தால் தூய்மைபெற்றார். இன்னல்களுக்குமேலின்னல்கள் வந்துமூடின. இரத்தம் ஆறுகப் பெருகிஓடியது காந்தி மகான் சத்திய சங்கநாதஞ் செய்தார். சட்டமறுப்பியக்கம்பிறந்தது; ஒத்துழையாமைஇயக்கம் ஓங்கியது; வரிகொடாவியக்கம் வளர்ந்தது; 'வெள்ளையனே வெளியேறு என்ற வீரக்கணைகள்' நாட்டின் நாலாபக்கங்களிலும் எதிரொலித்தன. சத்தியாக்கிரகங்கள் தலைதூக்கின. இந்தியஎரிமலைகுமுறுவதைக்கண்டு வெள்ளையன்கதிகலங்கிப் பின்னடைந்தான். ஆயிரத்தித் தொழாயிரத்து நாற்பத்தேழில் காந்தீயம் ஒளிச்சூரியன் போல் எழுந்தது; அடிமைக் காரிருள் அழிந்தது. அசோகச் சக்கரம் திகழும்மூவர்ணப்பொற் கொடி சுதந்திரக் காற்றில் வானளாவப்பறந்தது; பறக்கின்றது.

இலட்சக் கணக்கான இந்தியர்கள் வாதியுடலைக்கூட மறைக்கமுடியாமல், அரை வயிற்றுக் குக்கூட உணவில்லாமல் இன்னற்படுவதைப்பார்த்து வேதனை அடைந்தார். நகரங்களின் போக்கைக் கிராமங்கள் பின்பற்றுவது கண்டு துயரடைந்தார். ஆதலால் கிராமங்களைத்தன்னிறைவு பெற்ற பகுதிகளாக ஆக்கும்பொருட்டு கிராமத் தொழில்கட்குப்புத்துயிரூட்டமுற்பட்டார். ஆசிரமங்களை ஏற்படுத்தினர். கைத்தறி ஆலைகளை உருவாக்கினர்.

குணக்குன்றான காந்தி மகான் உண்ணாவிரதமிருந்த நாட்களோ பலப்பல. தீண்டாத மக்களுக்குப் பூட்டிக் கிடந்த கோயிற்கதவுகளைத் திறக்க அவரனுபவித்த துயரளப்பரியது. வறுமைப்பள்ளத்தில் மக்களைத் தள்ளி வதைத்த மதுவரக்கர்களைச் சிதைக்கச்செய்த போராட்டங்கள் வார்த்தையிலடங்கா. மேலும் கல்வி, சுகவாழ்வு, ஒழுக்கம் என்னும் பல துறைகளிலும் மக்களை வானமட்டாயுயர்த்த அவர்சுமந்த துன்பச் சுமைகள் என் இச்சிறு கட்டுரையிலடங்கா.

### மு. இஸ்மாயில் லெப்பை

[ஏறுவூர் முஸ்லிம் மகா வித்தியாலயம்]

இதனை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த யுகத்தில் வாழ்ந்தார்.

ஆபிரிக்காவில் இந்திய மக்கள் ஆங்கிலேயரின் ஆதிக்க வெறியிலகப்பட்டு அடிமைகளாய்த்துடிக்கும் அவலம் கண்டார்; மக்களை மாக்களாக மதிப்பவரைக் கண்டு மனங்கலங்கினர். அனலாய்க் கொதித்தார். அன்புக்கொடியைக் கையிலேந்தியவராய் அரசாங்கத்தை எதிர்த்தார்.

''ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்'' என்று பாரதி கூறிய வார்த்தைக்கு உயிர் கொடுத்தார். சாதிப்பிரச்னைக்குச் சவுக்கடி கொடுத்தார். பாரத மக்களின் உள்ளத்தில் சுதந்திரதாக வேகத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்தார்.

அரசியல் வாழ்விற் புகுந்துமெய்ஞானத் துணிவை அரசியலோடு பிணைத்தார். அரைநிர்வாணமாய் நாலு முழத் துண்டோடு உலகமே நடுநடுங்கத்தக்க வகையில் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தார். காந்திஜி அரசியலைச் சந்தர்ப்பவாதமென்றோ, அன்றேல் சுயநலத்திற்கு வழியென்றோ கருதியவரல்லர். தார்மீகச் செயல்முறையின் உயர்நிலைக்கு மக்களை உயர்த்துவதையே அவர் விரும்பினர்.

குகைக்குள்ளே குமுறிக் கொண்டிருந்த பிரித்தானிய சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்துக் குலுக்கினர். சிங்கம் சீறியது; நகங்களாற் கீறியது. கத்தியின்றி இரத்தமின்றிச் சத்தியத்தின் வலிமையோடு நின்ற சாந்தமூர்த்தியோ சிறிதும் கலங்கினரல்லர்; [illegible] கொண்டாரல்லர்? நடுங்கின

வையத்தில் வாழும் வகைதவருமல் வாழ்ந்து காட்டிய அண்ணல் தெய்வமாக மதிக்கப்படுகிறார் உண்மை, ஒழுக்கம், அன்பு, பண்பு என்பவை குன்றாமல் தெய்வத் தன்மையுடன் வாழ்ந்தவர் மகாத்மாகாந்தியடிகள், அவரது இளமை வாழ்வு இளைஞருக்கோர் அருமருந்து; இல்லற வாழ்வு இல்லறத்தார்க்கோர் ஒளிவிளக்கு; எளிமைவாழ்வு இடாம்பீகத்திற்குப் படிப்பினை; சமூகவாழ்வு தொண்டர்களுக்கெடுத்துக்காட்டு; அரசியல் வாழ்வு அரசர்களுக்குப் பாடப்புத்தகம், ஞானவாழ்வு ஞானிகளுக்குப் போதகம்; அன்புவாழ்வு, அறவாழ்வு அணுக்குண்டுகளுக்குச் சவுக்கடி; தூய வாழ்வு உலகிற்கோர் அழிவில்லாத இலக்கியக் கருவூலம்.

வாழ்க காந்திஜி!

## வரி கட்டுவோர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றைச் சட்டத்தின் 54ம் பிரிவின்கீழ் வருடம் முழுவதும் இலங்கையையே உறைவிடமாகக் கொண்டவன் எனக் கருதப்படுவான். உறைவிடம் பற்றி நாம் மேலும் பங்குடைமை, கம்பெனி மற்றும் கூட்டுஸ்தாபனங்கள் சம்பந்தமாக ஆராய்வதும் அவசியம். இவைகளைப் பொறுத்தளவில் சில வேறுபட்ட முறைகளைப் பின்பற்றும் காரணத்தால் நாம் பின்பு ஆராய்வது நன்றாகும்.


வருமானத்தின் ஆதிமூலம் 1963-ம் ஆண்டு உள்நாட்டிறைச் சட்டத்தின் 3ம் பிரிவின்கீழ் தரப்பட்டுள்ளது. வரி மொத்தமாக ஒருவனுக்கு வரும் வருவாயின் வளர்ச்சியுள்ள விகிதத்தில் கட்டல் வேண்டும். வருமானம் அதிகப்படியாக இருப்பின் விகிதமும் அதிகப்படியாக அமையும்.

**சட்டவிதியான வருமானம் (Statutony Income)**

சட்ட விதியான வருமானம் என்ன என்பதை நாம் 129-ம் பிரிவின்கீழ் காணலாம். எல்லாவிதமான நயங்களும் வருமானங்களும் சட்ட விதியான வருமானமென்ற தலைப்பின்கீழ் அடங்கும். குறிப்பிட்ட ஒருவனின் வரி மதிப்பிற்குரிய வருமானம் (Arrenadle Income) சட்ட விதியான வருமானத்திலிருந்து வித்தியாசப்பட்டது. சட்டவிதியான வருமானமென்றால் ஒரு குறிப்பிட்ட வரி மதிப்பு வருடத்திற்கு முதல் வருடத்தில் ஏற்பட்ட நயமும் வருமானமுமாகும் உ—ம்: வரிமதிப்பு வருடம் 1969 — 1970 என்றால் அதன் முதல் வருடத்தில் (1968—1969-ல்) ஏற்பட்ட வருமானம். வருமானத்தில் சில பாகம் வரிக்கு உட்படாதவையாக அமையும். 'வரி மதிப்பிட்ட வருமானம்' என்றால் சட்டவிதியான வருமானத்தில் கழிவுகள் போக எஞ்சி நின்ற தொகை. கழிவுகள் எவ்வகையின என்பதை நாம் இறைச்சட்டத்தின் 15-ம் பிரிவின்கீழ் காணலாம். இறைச்சட்டத்தின் 15-ம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் பலவுள. அவைவையப்பற்றி நாம் அறிந்திருப்பது அவசியம். இலங்கையை உறைவிடமாகக் கொண்ட ஒருவன் சட்ட மூலமாகப் பல கழிவுகளுக்கு உரித்துடையவனாவான்.

1969 —1970-ம் ஆண்டின் வரிக்குட்படாத தொகைகளை நாம் பின்வரும் அட்டவணைமூலம் அறியலாம். தற்பொழுது அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் மாற்றங்கள் 1970—1971 வரிமதிப்பு ஆண்டையே பாதிக்கும். அவற்றைப்பற்றிப் பின்பு சிந்திப்போம்.

## செவிடர்களுக்கு ஒரு தொலைபேசி



பொதுமக்கள் நாளாந்தம் பாவிக்கும் தொலைபேசிகளை, செவிடர்களும், ஒருவித தடையுமின்றிப் பாவிக்கக் கூடியவண்ணம் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறது ஒரு லண்டன் கம்பனி. செவிடர்கள் கையால் எழுதித்தரும் செய்திகளைப் பெற்று, அவற்றைத் தொலைபேசிமூலம் அனுப்பும் அபார சக்தி படைத்த இத்திட்டம் 'எலக்ரோரைட்டர்' என்று அழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தொலைபேசியில் காதால் கேட்கக் கூடிய சப்தங்கள் அனைத்தும் செவிடர்கள் கண்ணுல் பார்த்துணரக்கூடிய ஒளிச் சைகைகளாக மாற்றப்படுகிறது. இந்த ஒளிச் சைகைகளை மூலமாகக்கொண்டு. செவிடர்கள் தாம் அனுப்ப வேண்டிய செய்திகளை யாதொரு சிரமுமின்றித் தொலைபேசிமூலம் அனுப்பி விடலாம்.

இந்தப் புரட்சிகரமான செவிடர்க்கான தொலைபேசியைவிட லண்டனில் உள்ள இன்னுமொரு கம்பனி, சாதாரண தொலைபேசிகளில் காணப்படும் எண்முகப்பு (டயல்) செய்தி வாங்கி (ரிஸீவர்) ஆகிய அம்சங்களற்ற விநோத தொலைபேசி இணைப் பொன்றைஅமைத்துள்ளது.

இதனை இயக்குவதற்கு. ஒருவர் தாம் விரும்பிய எண்ணை, விசைகளை அழுத்துவதுபோன்று ஒருமுறை அழுத்தவேண்டும். தொடர்பு கிடைத்ததும் சுவரில் காணப்படும் ஒலிவாங்கிக்குள் பேசவேண்டும்; மறுபக்கம் பேசுபவரின் குரல், சுவரில் பதிக்கப்பட்டிருக்கும் ஒலிபெருக்கியில் அவருக்குக் கேட்கும். இம்முழுத் தொலைபேசி இணைப்பும், ஒரு சுவரில் பதிக்கப்பட்டிருக்கும்.

இதுமட்டுமல்ல, தற்சமயம் இத்தொலைபேசியைப் பாவிப்பவர், மேலதிக கட்டணத்தைப் போட்டுவிட்டால் இதனுள் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு இயந்திரம், மிகுதிப் பணத்தை இவருக்குத்திருப்பிக்கொடுத்துவிடும். குறைந்தோருக்குஇத்தொலைபேசி இணைப்பு மிகவும் ஏற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மனவியாதி (8)

# சில விநோதமான மனப்பிராந்திகள்

சுற்றிலும் அடைபட்டிருப்பதைக் கண்டு மனப் பிராந்தி கொள்வதை 'குளோஸ்ட்ரோஃபோபியா' (Claustrophobia) என்று கூறுவார்கள் இதற்கு நேர்மாறாக திறந்த வெளிகளைக் கண்டவுடன் பயப்படுவதற்கு 'கெனோஃபியா' (kenephobia) என்று பெயர். இதனால் பீடிக்கப்பட்டவர்கள் மரங்கள், கட்டடங்கள் யாது மில்லாத பெரிய திறந்த வெளிகளில் நடமாடத்தயங்குவார்கள். சூன்யமான வெறும் நிலப்பரப்பு இவர்களுக்கு உள்ளூர ஒருவித பயத்தை உண்டு பண்ணும். ஜனநடமாட்டம் அதிகமாயுள்ள பட்டினங்களில் வசிப்பவர்களுக்குக்கூட இந்த மனப்பிராந்தி ஏற்படுவதுண்டு. பட்டினத்திலுள்ள விசாலமான சந்திகளை நேரடியாகக் கடந்துபோகாமல் கரையோரமாகச் சுற்றி வளைத்து வருவார்கள். அதுவும் தனியாகப் போகமாட்டார்கள், யாரையாவது பின்தொடர்ந்து கொண்டே போவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் நேரத்தைப் பெரும்பாலும் வீட்டுக்குள்ளேயே இருந்து கழிப்பார்கள்.

— சுநாதன் —

நியாயமான காரணம் எதுவுமின்றி சிலர் தண்ணீரைக் கண்டு பயப்படுவார்கள். இதற்கு ஹைட்ரோஃபோபியா (Hydro phobia) என்று பெயர். கொந்தளிக்கும் கடலையும் பாய்ந்து வரும் அலைகளையும் கண்டு சாதாரணமாக எவரும் பயப்படுவது சகஜம். ஆனால் இந்த மனப்பிராந்தி உள்ளவர்கள் தெருவில் மழைபெய்த நீர்க்குட்டைகளைக் கண்டும் பயப்படுவார்கள். உயிர் போனாலும் அதில் காலை வைக்காமல் அதை விலக்கிக் கொண்டே போவார்கள். முழங்காலளவு தண்ணீரில் நடந்து செல்வது இவர்களுக்குப் பரம சங்கடமாக இருக்கும். தண்ணீருக்குள் தனது நிழலையும் ஆகாயத்தின் நிழலையும் பார்த்தவுடனே நரம்புத் தளர்ச்சியினால் தலை கிறுகிறுக்க நிலை தளம்பிவிடுவார்கள். அர்த்தமற்ற இவ்வச்சத்திற்கு இளம் வயதில் தண்ணீர் சம்பந்தமாக இவர்களுக்கு ஏற்பட்ட ஏதாவதொரு விபத்தோ சம்பவமோதான் காரணமாயிருக்கும்.

ஒரு நண்பரும் நானும் பொல்காவலை ரயில்வே ஸ்டேசனில் ஒரு பிளாட்பாரத்திலிருந்து மற்றதுக்கு மாறவேண்டி வந்தது. இருவரும் தண்டவாளத்துக்கு மேலே போடப்பட்டிருக்கும் இரும்புப் பாலத்தில் ஏறினோம். பாலத்தைக் கடக்கும்போது நண்பர் திடீரென்று கண்களை இறுக்கி மூடிக்கொண்டு கீழே உட்கார்ந்துவிட்டார் அவரைத் தூக்கி அழைத்துக்கொண்டு அடுத்த பிளாட்பாரத்துக்கு போய்ச்சேருவது பெரும் பாடாய்ப் போய்விட்டது இதுவும் மிகப் பலரிடம் காணப்படும் ஒருவகை மனப்பிராந்தி. இதற்கு அக்ரோஃபோபியா' (Acrophobia) என்று பெயர். ஓர் உயரமான மாடிமீது ஏறிநின்றோ அல்லது ஒரு குன்றின்மீது உச்சியிலிருந்தோ கீழே பார்க்கும்போது எவருக்கும் ஒரு மனக்கூச்சமும் நடுக்கமும் ஏற்படுவது இயற்கையானது. சமதோகைகாகவே வஸ்துக்களைப் பார்த்துப் பழக்கப்பட்ட எங்களுக்கு மிகவும் உயரத்திலிருந்து தரையிலிருப்பவற்றை பார்க்கும் போது அந்தப் புதுமை மனதுக்கு சஞ்சலத்தை உண்டு பண்ணுகிறது ஆனால் இம் மனப்பிராந்தியால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஓர் ஏணியில் ஏறுவதற்குக் கூடப்பயந்து நடுங்குவார்கள். சிலருக்கு மேலேயிருந்து தொப்பென்று கீழே குதித்துவிடலாமோ என்று கூடத் தோன்றும். உலகில் மிகவும் உயரமான எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தைப் பார்க்கப்போகிறவர்களுக்கு பின்னால் இப்படித் திடீர் தற்கொலை நடவாமல் தடுப்பதற்கு வழிகாட்டிகள் துணையாகப் போவார்கள்.

ஒரு இளிரத்தத்தைக் கண்டவுடனே மூர்ச்சித்து மயங்கி விழுபவர்களை சில வேளைகளில் காண்கிறோம் மிகவும் மனத் தைரியமுள்ளவர்களும் இவ்வியாதிக்குட்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தாம்செய்த குற்றம் எதையோ மறைத்து வைக்க முயலுகிறார்கள் என்று மனவியாதி நிபுணர்கள் கூறுவார்கள். இதன் பெயர் 'ஹெமாடோஃ' போபியா' (Hemato phboia) என்பதாகும்.

சூறுவளியைக்கண்டு பயப்படுவது 'அஸ்ட்ரோஃபோபியா' (atrophobia) எனவும், இடி முழக்கத்தைக் கேட்டுப்பயப்படுவது 'ப்ரோன்ரோஃபோபியா' (Brontophobia) எனவும் அழைக்கப்படும். சிறுவயதில் மின்னல், முழக்கம், மழை உண்டாகும் போது பெற்றோர்களால் வீட்டுக்குள் பூட்டி வைக்கப்பட்டவர்களுக்கு வயது வந்த காலத்திலும் இம்மனப் பிராந்திகள் இருக்கும்.

இருட்டுக்குப் பயப்படுதல் 'நிக்ரோஃபோபியா' (Nyctophobia) அழுக்கைக் கண்டுபயப்படுதல் மைஸோஃபோபியா (mysophobia). [illegible] சில மனப்பிராந்திகளும் உண்டு, யாரோ எந்த நேரமும் தம்மைப் பின்தொடர்வதாகச் சிலர் பிராந்தி கொள்வார்கள். வேறுசிலர் தங்களுக்குப் பைத்தியம் பிடிக்கப்போவதாக நினைத்து சதா பயந்துகொண்டு திரிவார்கள் ஆனால் உண்மையான பைத்தியங்கள் தங்களுக்குப் பைத்தியமில்லையென்றே சாதிப்பார்கள்.

எம்மில் நூறுபேரில் இருபத்தைந்து பேருக்கு ஏதாவதொரு மனப்பிராந்தி நிச்சயமாக இருக்கும் பலர் அதை வெளியில் காட்டுவதில்லை.

## தமிழை மண...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

உலகப் பற்றுகள் அனைத்தையும் துறந்த தூய துறவியான மணிமொழியாளரான மணிவாசகர்கூட தன் உள்ளத்தில் ஊற்றெடுத்த உயிரனைய உன்னத கருத்துக்களுக்கு உருவமும், வடிவமும் கொடுத்த வளம் செறிந்த தமிழையும் தன்னைத்தோற்றுவித்து தன் உலகளந்த சிந்தனைகளுக்கு நிலைக்களமாய் வற்றாத ஊற்றாய் விளங்கிய தென்பாண்டி நாட்டையும் தென்னகமாம் தமிழகத்தையும் அவரால் மறக்க நினைத்தாலும் மறக்கமுடியவில்லை. தேன் கலந்த வாசகந்தந்தவான் கலந்த மாணிக்கவாசகரின் மாண்பு எம்மை வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்துவானுறையும் தெய்வத்துள் வைக்கும் மாண்பு என்பதை யாம் உணராமல் இருக்கமுடியுமா.

# சேவையின் சின்னம்...

(11-ம்பக்கத் தொடர்ச்சி)

சிறப்பித்தன. 62-ம் ஆண்டு நடைபெற்ற மகாநாட்டில் பெண்கள் மகாநாட்டுக்குத் தலைமைவகித்து மகாநாட்டை இனிது நடாத்தினார்.

தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளர் ஆகிய அம்மையார் தனது தள்ளாத வயதிலும் தான் எடுத்துக் கொண்ட பணியை விடவில்லையென்பதற்கு தற்போதும் அச்சில் உள்ள அவரது 'தமிழ் மகள்' சான்றுபகர்கிறாள். அன்னையார் அச்சுவாகனம் ஏற்றி வைத்துவிட்டுச் சென்றுள்ள 'தமிழ் மகளை' தாமதமின்றி அன்னையாரின் சிரார்த்த தினத்தன்று மகள் திருமதி மகேசுவரி தேவி நவரத்தினம் வெளியிடுகிறார். காலஞ்சென்ற கர்மயோகி கலைப்புலவர் நவரத்தினத்தின் பாரியாராகிய மகேசுவரி தேவியும் அறிவும் ஆற்றலும் மிக்கவர். அன்னையாரின் பணியைத் தொடர்ந்து செய்ய அவாவுறும் அவருக்குத் தமிழ் மகளிர் உதவிக்கரம் நீட்டவேண்டும். இன்று தமிழர்களாகிய எமக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல் மிகப் பெரிது. வருங்காலம் வளமுடைத்தாகுமா எனத்துணிந்து எவரும் கூறமுடியாது. இந்த இக்கட்டான நிலையில் தமிழ் மகளிருக்கு 'தமிழ் மகள்' இன்றியமையாதவள் அவளது சேவை எமக்கு என்றென்றும் தேவை. ஆபாசப் பத்திரிகைகளின் சஞ்சிகைகளில் நாட்டம் கொள்ளாது தமிழ்மகள் போன்ற புனிதமான பத்திரிகைகள் வர தமிழ் மக்களாகிய நாம் 'தமிழ் மகளால்' பெரும் பயன் அடைய வேண்டும்.

பாராட்டு

திருமதி மங்களம்மாளின் சேவையைச் சமீபத்தில் பாராட்டி அவருக்குத் தபால் எழுதிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை 'முதிர்ந்த வயதிலும் தமிழ் மகளில் கண்ணும் கருத்துமாக இருப்பது பெரிதும் போற்றத்தக்கது. கலைச் செல்வம் உங்கள் உயர் குடும்பத்துச் சொத்து எனப் பாராட்டியுள்ளார்.

பண்ணாகம் பண்டிதர் ஆறுமுகமும் சமீபத்தில் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில்

'முதிர்ந்த தளர்ந்த நிலையிலும் தமிழ் மகளைத் துணிந்து வெளிப்படுத்தும் வீரப் பணியைப் பெரிதும் போற்றுகிறேன்...' எனப் புகழ்ந்துள்ளார்.

இப்படிப் பலர் அன்றும் இன்றும் அம்மையாரைப் பாராட்டியுள்ளனர்.

தமிழ் மகளிரின் மேலான நலன்கட்காக - கௌரவத்திற்காக- செம்மையான கல்வி முன்னேற்றத்திற்காக- சமயத்துக்காக பணிபுரிந்துவந்த திருமதி மங்களம்மாள் தமிழ் மகளிருக்கொரு வழிகாட்டி. இவரை முன்னோடியாகக் கொண்டு நாம் பணியாற்ற வேண்டும். அவருக்கு நாம் புறத்தில் நினைவுச்சின்னம் நிறுவ வேண்டியதில்லை. தற்புகழ் விரும்பா நற்புகழாளராகிய அவர் அதை விரும்புவதுமில்லை. அன்னாரின் சேவையைத் தொடர மகளிர் தமது நினைவில் [illegible] ருக்கோர் ஸ்திரமான நினைவுச் சின்னம் நிறுவுவோமாக!

# ஜென்ம..

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

சணகங்கையாகிய கோதாவரியன்னை.

## மூர்த்தி

திரியம்பகத்தில் எல்லோரும் கர்ப்பக்கிரகம் வரைக்கும் சென்று. சுவாமியைத் தொட்டு நீராட்டிப் பூசனை புரியலாம் குசாவர்த்தன தீர்த்தத்தில் மூழ்கின்றவனுக்கு சகல பாபங்களும் நீங்கி ஜீவன்முக்தனாகிறான் என்பது ஐதீகம்.

உள்ளே கர்ப்பக்கிரகத்தில் சுவாமி பள்ளத்திலேயே இருக்கிறார். ஆவுடையார் போன்றுள்ள கல்லின் நடுவில் ஒருகுழியாக உள்ளது. அதில் மூன்றுசிறிய தாமரை மொக்குப்போன்ற சிவலிங்கங்கள் உள்ளன. அவை முறையே பிரம்மலிங்கம். விஷ்ணுலிங்கம், சிவலிங்கம் என மூன்று மூர்த்திகளாகும். இதனை இந்த ஸ்தலம் திரிமூர்த்திஸ்தலம் என விசேடிக்கப்படுகின்றது.

திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரியை நீர்மூடுவது போல இங்கும் லிங்கங்களின் அடியிலிருந்து நீர் சதா ஊறிக்கொண்டே இருக்கின்றது. கோதாவரி அன்னை அந்தாவாஹினியாக வந்து சுவாமியைச் சதா நீராட்டியவண்ணமிருக்கிறாள்.

இம்மஹத்துவமுள்ளமூர்த்திகளைத் தரிசிக்கவேண்டுமென்றால் குழியிலுள்ளநீரை இறைத்தபின்னரே தரிசிக்க வேண்டும். நீர் எடுக்க எடுக்க ஊறியபடியே இருக்கின்றது. கர்ப்பக்கிரகம் விசாலமாக இருக்கின்றது பண்டாக்கள் என்று சொல்லப்படுகின்ற பிராமணர்கள் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி, உட்கார்ந்து சதாவேதபாராயணம் செய்துகொண்டே இருக்கிறார்கள். யாத்திரீகர்கள் எந்தநேரமும் வந்து கொண்டேயிருக்கிறார்கள்.

ஏழுநதிகளுள் ஒன்றாகிய காவேரியும். மிகச் சிறந்த புண்ணிய தலங்களுள் ஒன்றாகிய திரியம்பகமும் தரிசிக்கக் கிடைப்பதரிது.

ஸ்ரீராமபிரான் பஞ்சவடி தீரத்தில் தங்கியிருந்தபடியால் அவர் காலடிபட்டு புனிதமடைந்த புண்ணிய பூமியாகவும் இப்பகுதி மதிக்கப்படுகின்றது. 'திரியம்பக தரிசனம் ஜென்மசாபல்யம்' என்று ஆன்றோர்கள் கூறுவார்கள்'

# இன்றைய...

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தினால் நாளைய சமுகம் எவ்வளவு முன்னேற்றமடையும். எமது சந்ததிகளை நல்வழிப்படுத்தும் பொறுப்பு எமக்கு உண்டு. அதைச் சரிவரச்செய்ய இப்பொதிலிருந்தே எம்மை நாம் தயார்படுத்தவேண்டும். இறைவனை நினைத்து எம் கடமைகளை ஒழுங்காகச் செய்வதன்மூலம் நாம் உலகத்திற்குச் சிறந்த சேவை செய்கிறோம் என்பதை ஒவ்வொரு சிறுவர்களும் உணர வேண்டும்.

## மங்காப் புகழ் இராம கதை

பத்து ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக மத்திய குழந்தைகள் நாடக அரங்கில் ராமாயணம் நடிக்கப்பட்டது. இன்றளவும் அது அப்போதைக்கப்போது நடிக்கப்பட்டுவருகிறது. பத்திரிகைகளும், ரசிகர்களும் அதனைப் பாராட்டுகின்றனர் அந்த நாடக ஆசிரியையான என். குஸேலாவுக்கு ஜவஹர்லால் நேரு பரிசு அளிக்கப்பட்டது.

அந்த நாடக அரங்கேற்றத்தின் பத்தாவது ஆண்டு விழாவையொட்டி பிரதமர் இந்திரா காந்தி அவ்வரங்கிற்குக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். ராமாயணம் உலகின் மிகப் பிரபலமான நூல்களில் ஒன்றெனவும், பல ஆசிய தேசங்களின் மக்கள் அந்நூலிலிருந்து சிறந்த இலட்சியங்களையும், நம்பிக்கையையும் பெற்றுவருகின்றனர் என்றும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிடுகிறார்.

அந்த மகத்தான காவியத்தைப்பற்றி சோவியத் யூனியனிலுள்ள இளைஞர்கள் அறிந்துகொள்ளுமாறு செய்தது மாஸ்கோவிலுள்ள மத்திய குழந்தைகள் அரங்கு ஆகும். இந்தக் காட்சியை உருவாக்கியவர்களுக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக இந்திரா காந்தி அதில் கூறியுள்ளார்.

நிகழ்ச்சியின் முதல் அரங்கேற்றத்தின்போது பிரதான பாகங்களில் நடித்தவர்களே ஆண்டு விழாக் காட்சியிலும் நடித்தனர்.

இவ்விழாவுக்கு மாஸ்கோவிலுள்ள தற்காலிக இந்திய ஸ்தானிகர் ரமேஷ் பந்தாரியும், சோவியத் இந்திய கலாசாரக் கழகத்தின் தலைவரான என். கோல்திலும் வருகை தந்தனர்.

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னேறிக்கொண்டிருந்தது.

பிரான்சிஸ் நெடுநேரம் கடற்கரையில்நின்றுகொண்டிருந்தான்.

இடி இடித்தது, மின்னல் மின்னியது.

இரவுமுழுக்க நல்ல மழை. தொடர்ந்து பகலுமிரவுமாக இரண்டுநாட்களாக மழை,

அன்றிரவு கடலுக்குப் போன அனேகர் தெய்வாதீனமாக தப்பிவந்தார்கள்.

வராத சிலருள் சங்கிலித்தாம் கிறகோரியும் ஒருவர்.

'டாண்...டாண்...டாண்!'

தோமையார் கோவில் மணி தேய்வாக ஒலிக்கிறது அது திருந்தாதியல்ல...

இறந்துவிட்ட கிறகோரிக்காகவும் மற்றவர்களுக்காகவும் அடிக்கப்படும்துக்கமணி

அடிப்பவன். பிரான்சிஸ்...

இன்று இதுவும் நின்றுவிடும்.

திருந்தாதி...?

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா - யாழ். நகர்
தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

# ஏசுநாதர்-தமிழ்

இப்படத்துடன்
அறிஞர் அண்ணாவின்
இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்
பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்
40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

---

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா —அசோகன் நடிக்க

# மாட்டுக்கார வேலன்

---

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்
ராஜன், லட்சுமி, நிர்மலா, ரவிச்சந்திரன் நடித்த

# ஏன்?

அத்துடன்
பரிசுத்த பாப்பரசர்
6-வது சின்னப்பரின்
இலங்கை விஜயம்
30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது

---

மனோஹரா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ நடித்த

# லக்ஷ்மி கடாட்க்ஷம்

---

கெப்பிட்டல் பிளாஸா திரையிலும்
யாழ். வெலிங்டன் திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள் காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ



முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

அத்துடன்
வெலிங்டனில் பரிசுத்த பாப்பரசரின்
இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்

---

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

ஞாயிறு 27-12-70
(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம் 8-00 பௌத்த நிகழ்ச்சி, 8-15 ஞானமிர்தம், 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.
9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 20 கேள்விகள், 10-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-00 திரைகானம், 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதி, 1-05 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வயலின், 6-15 பாமாலை, 6-30 குழலிசை, 7-00 தாளவாத்தியக் கச்சேரி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

சென்னை

## இசைவிழாவில்

சென்னை, டிசம். 27
இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்:-
மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில்:
பி.ப 1-30: பிரேமா அரிகரன்— பாட்டு. பி.ப 3 00 பி. எஸ். நாராயணசாமி பாட்டு. இரவு 8-30: டி.கே. ஜெயராமன் — பாட்டு.
தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ்ராஜா அண்ணாமலை மன்றத்தில்: இரவு 6-00: எம். எல். சுப்புலக்ஷ்மி — பாட்டு. இரவு 9-30: யாழ்ப்பாணம் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் — 'இசையும் இறைவனும்' என்னும் பொருள் பற்றிக் காலட்சேஷபம்.
(இமையாணன் நிருபர்)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கடந்த 20 வருடங்களாக வண்ணார்பண்ணை தபாற் கந்தோரில் உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். சந்திரசேகரம் வருகிற மாதம் 2-ந் திகதி முதல் கொழும்பு தபாற் கந்தோருக்கு இடமாற்றலாகிச்செல்கிறார்.

---

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
Frank Sinatra
in
THE DETECTIVE

---

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

# நம் நாடு

---

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
கே. பி. சுந்தராம்பாள் நடித்த

# ஒளவையார்

---

# வரி விளம்பரம்

## தேவை

தம் மக்களின் திருமணம் நாடும் பெற்றோர் தம் மக்களின் வயது-படிப்பு-தொழில் முதலிய விபரங்களுடன் தாம் விரும்பும் மணமகன் அல்லது மணமகள் எவ்வித தகுதி அமைந்தவராக இருத்தல் வேண்டும் என்பதையும் தெளிவுபட கடிதமூலம் அறிவித்தால் அவரவர்விருப்புக்குத்தகுந்தவாறு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். விளம்பர இல: 2608 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2608

---

வைத்திய தம்பதிகள் வசிப்பதற்கு ஏற்ற சகல வசதிகளுமுள்ள வீடு யாழ் ஆஸ்பத்திரிக்கண்மையில் 1-1-71க்கு முன்னர் தேவை. விபரங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை. 2437

---

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அல்லது சுற்றுப்புறத்தில் மத்திய வகுப்பினர் வீட்டுத் திட்டத்திற்கு உகந்த தெரு ஓரமாகவுள்ள காணி தேவை. உடனே கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் லான்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453.
2599

---

நடிக நடிகையர் தேவை நவரச நாடகாலயம், நாடக, திரைப்பட தயாரிப்பாளர் செயலாளர், 67, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
2594

---

காணி விற்பனவு, கொள்வனவு செய்வதற்கு ஊக்கமுள்ள வாலிபர்கள் பிரதிநிதிகளாகத் தேவை. க. பொ. த. பரீட்சையில் ஆங்கிலம் விசேட சித்தி, தட்டெழுத்து அனுபவம் விரும்பத்தக்கது. சைக்கிள் வைத்திருத்தல்வேண்டும். விளம்பர இல. 2597, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2597

---

## சைக்கிள் கவனம்

யாழ்ப்பாணம் சனி
சைக்கிள் பாவனையாளர்கள் தம் சைக்கிள்களைக் கவனமாகப் பத்திரப்படுத்திக் கொள்ளும்படி பொலிசார் யோசனை கூறுகிறார்கள்.
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக சைக்கிள் காணமல் போவது அதிகரித்துவிட்டதாகத் தெரிவிக்கும் பொலிசார் பாவனையாளர்கள் தம் சைக்கிள்களைக் கவனமாகப் பூட்டி வைத்துக் கொள்ளும்படி எச்சரித்துள்ளனர்.

— —

## நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு
சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றத்தினர் நடாத்தும் யாழ். மாவட்ட நாடகப் போட்டிக்குரிய இடைத்தெரிவு இம்மாதம் 28-ந்திகதி காலை யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் ஆரம்பமாகிறது. தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இப் போட்டியில் தினமும் 9 நாடகங்கள் தெரிவு செய்யப்படும். 4 நாடகங்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வருகிற 14ந் திகதி மேடையேற்றப்படும்.
பரிசுபெறும் நாடகங்களுக்கு தங்கப்பதக்கம் பரிசிலாக வழங்கப்படும். கலையரசு சொர்ணலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

## விற்பனைக்கு

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2604

---

யாழ்ப்பாணம் சிவன் கோவில் வடக்கு வீதியில் வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. லான்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453.
2598

---

வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள குதிரைப்பிட்டி என்னும் பெயருடைய 14 பரப்பு வயல் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு செல்வி ரி. கணபதிப்பிள்ளை, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2605

---

யாழ்ப்பாணத்தில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக் காணியும். விலை ஐம்பதாயிரம். கடன் வசதி கிடைக்கும். வெஸ்ட் டன்றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம்.
2562

---

வவனியா பட்டினத்தில் பல வசதிகளுமுள்ள அழகான வீடும் பெரிய வளவும். ச. ஸ்ரீநிவாசன், உடுவில், சுன்னாகம். 2595

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## ஏல விற்பனை

1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரையுள்ள காலத்திற்கு பெரியகடையிலுள்ள, கருவாட்டுக்கடை இல: 18ஐ குத்தகைக்குக் கொடுக்கப்பட இருப்பதால் இக் குத்தகையுரிமை 28-12-1970 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அவ்விடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.
இதுசம்பந்தமான இதர விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. வி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
28-12-70. 2600

---

THE JAFFANA ACADEMY
Chundikuli, Jaffna
Phone No: 617

1971-Sessions Commence on 15th January.
G. C. E. (Ordinary-Level) and (Advanced-Level) 1st year and second year classes. (Tamil Medium)
SPECIAL PRACTICAL CALSSES for UNIVERSITY ENTRANCE students sitting for the December 1970 examination. 2 Practicals per subject per week. pply beforer 12-1-1971, on forms available in the office.
Hostel accommodation available.
Director
2589

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## மணிமொழிகள்

தனிப்பட்ட பொருள் உரிமைப்பாடும் அன்பும் ஒத்திருக்க முடியாது. கோட்பாடான பூரண அன்பு இருக்குமாயின், பொருட்பற்றின்மையும் இருக்க வேண்டும். உடல் எங்களின் கடைசியான உரிமைப் பொருள். ஆகையால் மனித குலத்துக்குப் பணிசெய்வதற்காகத் தன்உயிரையும் விடத் தயாராய் இருப்பவன் பூரணமான அன்பையும், பொருட்பற்றின்மையையும் கையாளுவான்.

நீ எந்தச் செயலைச் செய்தாலும்சரி, உனக்கும் உலகுக்கும் உண்மையாக நடந்துகொள்வது உனது தலையாய கடனாகும்.

—மகாத்மாகாந்தி


## கலண்டர்

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஒரு பொக்கற் கலண்டரும், ஒரு மேசைக் கலண்டரும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்

சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்.


# கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் அடுத்த மாதம் முதல் மூடப்படுகின்றன

கோட்டை, ஞாயிறு

வருகிற மாதத்திலிருந்து நாடுபூராவும் உள்ள கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் செயற்படமாட்டாது என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது. கேகாலை, பொல்கொல்லை, பலாலி ஆகிய இடங்களிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் ஆசிரிய பல்கலைக் கலாசாலைகளாக இயங்கும் என்றும், தெகிவளை, காலி ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் தொழில் நுட்ப நிலையங்களாக இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக்கழகம் விவசாய பல்கலைக் கழகமாக இயங்கும்.

முன்னைய அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஏழு கனிஷ்ட பல்கலைக் கழகங்களையும் மூடிவிடத் தீர்மானித்திருப்பதாகக் கடந்த சில மாதங்களுக்குமுன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தபோது பல கல்விஸ்தாபனங்கள் இதற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

## கூட்டுறவு இயக்கம்தான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவின் அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமானால் அரசியல், சமூக, கலை, கலாச்சார பொருளாதார விடுதலை அவசியம். நான் குறிப்பிட்டவற்றில் பொருளாதார சுதந்திரம் முக்கிய அம்சமாகும்.

இந்த நாட்டில் செய்யக்கூடிய பொருட்கள் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்டு வருவது பெரும் கேடாகும். தொழில், விவசாயத்துறை முக்கியத்துவம் பெறத்தக்க வழியில் தேச வளத்தை பூரணமாகப் பயன்படுத்த வேண்டும். இந்நாட்டில் வேலையற்ற நிலைமை இருக்கிறது. இது சிக்கல் மிக்க பிரச்னையாகும். பிரச்னைக்குத் தீர்வுகாண முடியுமானால் மற்றப் பிரச்னைகளை சுகமாகத் தீர்க்க வழி பிறக்கும். இத்தகைய அடிப்படை பொருளாதார பிரச்னையை வென்றால்தான், 47ம் ஆண்டுபெற்றசுதந்திரத்தை அனுபவிக்கமுடியும். ஏற்றத் தாழ்வை அகற்றுவதாக இருந்தால்சோஷலிச அமைப்பால்தான் முடியும்.

சோஷலிச நாடுகள் ஒவ்வொன்றும் தனக்கென ஒரு பாதை அமைத்து முன்னேறி வருகின்றன. மனித வாழ்வில் பூரணத்துவ நிலைமை ஏற்படுவதாயிருந்தால், அது சோஷலிச அமைப்பால்தான் முடியும்.

கூட்டுறவு இயக்கம்தான் மிகவும் பயன்படக்கூடிய, சோஷலிசஜனநாயகஅமைப்புக்கான அத்திபாரம்.

அந்நிய செலாவணி மிகவும் நெருக்கடியைத் தந்துள்ளது. தேவையான அத்தியாவசியப் பொருட்களை இந்த நெருக்கடியில் பெறவேண்டியிருக்கிறது. எனவேதான் அந்நிய செலாவணியை விரயப்படுத்தக்கூடாது.

கூட்டுறவுப் பணத்தை சூறையாடிவிட்டு சுதந்திரமாகத்திரியும் மனிதர்களை சிக்கவைக்க சட்டத்தில் இடமில்லாமலிருந்தது புதியசட்டத்தில் தகாதமுறையில் சூறையாடிய தொகையை அன்றுமுதல் அறவிட அதிகாரமுண்டு. பெருந்தொகையான பணம் திருப்பிப்பெறவேண்டியிருக்கிறது.

மக்கள் வங்கி கூட்டுறவு இயக்கத்திற்கு ஊறு செய்வனவல்ல. அதுகூட்டுறவுக்கு மட்டுமன்றி தனிவர்த்தகருக்கும் துணையாக இருக்கும். கூட்டுறவைச் செயல்படுத்த மக்கள் வங்கியின் சேவையைப் பயன்படுத்தவேண்டும்.

வடபகுதியில் பனம் பொருளாராய்ச்சி நிலையம் அமைப்பதுபற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளைசமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் இனவாதத்திற்கும் எதிராக ஒன்றுபட்டுப் போராடினால்தான் எதிர்காலத்தில் முன்னேறமுடியும்.

## ஒருவர் மட்டும் எதிர்த்தார்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரிநகரசபையின் 71-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம், நேற்று நடந்த விசேஷகூட்டத்தில் நிறைவேறியது. 9-ம் வட்டார உறுப்பினர் திரு. க. மயில்வாகனம் மட்டும், இதற்கு எதிர்ப்புத்தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் விசேஷ கூட்டம் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது 8-ம் வட்டார உறுப்பினர் திரு. சி. சு.பாலசுப்பிரமணியம் தவிர, மற்றும் 10உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

இவ்வரவுசெலவுத்திட்டத்தில் றோட்டுப்பராமரிப்புக்கு 45000 ரூபாவும். புதிய றோட்டுக்கு 6000, ரூபாவும் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

## கி. சே. இடமாற்றம்

### யூனியன் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிராமசேவையாளர் இடமாற்றச் சபையின் தீர்மானத்துக்குமாறாகவும் சபையின் ஆலோசனை கலக்காமலும் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நான்குகிராம சேவையாளர்களுக்கு தந்திமூலம் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதுசம்பந்தமாககிராம சேவையாளர் யூனியன் அமைச்சருக்கும் அரசாங்க அதிபருக்கும் ஆட்சேபம் தெரிவித்திருப்பதாக யூனியன் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## ஆர். ஜி. யின் இறுதிச்சடங்கு

கோட்டை, சனி

காலஞ்சென்ற திரு ஆர் ஜி சேனநாயக்காவின் இறுதிச்சடங்குகள் இன்று கொழும்பில்நடைபெற்றன. இவ்விறுதி வைபவத்தில் பல அரசியல்கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

சிங்கள கலாச்சாரத்துக்கும், சிங்கள மொழிக்கும் அரியசேவை செய்தவர், 1953-ல் வர்த்தக அமைச்சரான பொழுது கம்யூனிஸ்ட் சீனாவுடன் மூதன்முதல்வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்து இலங்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர் திரு ஆர் ஜி சேனநாயக்கா என அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

இறுதி மரியாதையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன, தம்பதெனியா பிரதிநிதி ஹெரத், டட்லி சேனநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். பௌத்தபிரிவினைக்களிலிருந்தும் பௌத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

## பரதநாட்டியம் தரத்தில் உயர்ந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் வடபகுதி கூட்டுறவு சமாச ஆதரவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர்களாக வர்த்தகஅமைச்சர், திரு குமாரசூரியர், திருமதி இலங்கரத்தின எம். பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவையொட்டி வடபகுதி கூட்டுறவு சமாசத்தினரால் நடாத்தப்பட்ட போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு திருமதி இலங்கரத்தின பரிசில்களை வழங்கினார்.

அமைச்சர் இலங்கரத்தின நன்றி தெரிவித்துப் பேசுகையில், உலக ஸ்தானத்தில் பரத நாட்டியம் எத்தகைய போட்டிக்கும் ஈடுகொடுக்கவல்லது என்றும் அவை தரத்தில் உயர்ந்தவை என்றும் கூறினார் வடபகுதிக்கு இன்று விஜயம் செய்ததினால் கூட்டுறவு மூலம் வடபகுதி மக்கள் கண்ட நன்மைகளை நேரில் காணக்கூடியதாகவிருந்தது என்றும் அவர் சொன்னார்.

## கயரோக கருத்தரங்கு

தாவடி, சனி

"இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் வடபிரதேசக் கிளையின் சார்பில் சங்கத்தின் அலுவலகத்தில் 'முழுநாள் கருத்தரங்கு' ஒன்று இன்று 27-ந் திகதி நடைபெறுகிறது."

சர்வதேச கயரோக தடை ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய நிரந்தரப் பிரதிநிதி டாக்டர் திரு. ஏ. செல்வரத்தினம். தாய்ச் சங்கத் தலைவர் டாக்டர் திரு ஜே. எச். எவ். ஜெயசூரியா, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் டாக்டர் திரு. கான், டாக்டர் திரு. கிறிஸ்கோ ஆகியோர் உட்பட பலர் இதில் கலந்துகொள்வர்.

## பஞ்சாபில் தமிழ்

சண்டிகார், டிச. 26

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பிரிவு ஒன்று தொடங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## தபால் நிலையம்

ரூவான்வல, சனி

ரூவான்வல தொகுதியிலுள்ள அமிதிகலஉபதபால் கந்தோர் தரம் உயர்த்தப்பட்டு தபால் நிலையமாக்கப்பட்டுள்ளது. தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் ஜனவரி2-ம் தேதி இத்தபால் நிலையத்தை திறந்துவைப்பார்.


## விற்பனைக்கு


கார்

நல்ல நிலையிலுள்ள C. L. தொடர்பிலக்க A 40 கார் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 24, நாச்சிமார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 2440

## வாடகைக்கு

வீடு

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் சகல வசதிகளுடன்கூடிய 138/3 இலக்க வீடு வாடகைக்குண்டு. நேரில்வரவும். 2438

யாழ். தென்கோவை எம். ஜி. ஆர். ரசிக மன்றத்தின் இரண்டாவது ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இவர்கள்.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ந்திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org